1588

1588

MIDDLE SCHOOL

HISTORY OF INDIA

FORM III

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 MAR 1941
MADRAS

by

P. S. KRISHNASWAMY IYER, B.A., L.T.

Headmaster, National College High School, Trichinopoly

PRICE
8 ANNAS

. R. SUBRAMANIA PILLAI
EDUCATIONAL PUBLISHER
TIRUNELVELI

இந்து தேச சரித்திரக் கதைகள்

1588

இரண்டாம் புத்தகம்

இரண்டாம் பாரம்—ஆறும் வகுப்புக்குரியது

954

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 NOV 1942
MADRAS

இது
K. R. சந்திரசேகர அய்யர், M.A., L.T.,
(சேதுபதி ஹைஸ்கூல், மதுரை).
எழுதியது.

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ்
சென்னை :

காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்தது]

[விலை அணு 12.

First Edition November 1942

V44

T. V. C. PRESS,
MADRAS

முகவுரை

இப்புத்தகம் 2-வது பாரத்திற்கும் எலிமெண்டரி பாடசாலையின் ஏழாவது வகுப்பிற்கும் பொருத்தமாக கல்வியிலாகா அதிகாரிகளால் நியமிக்கப் பெற்றுள்ள புதிய பாடதிட்டத்தை யநுசரித்து எழுதப்பட்டதாகும். இளஞ்சிறுர்களும், சிறுமிகளும் சுலபமாகக் கற்குமாறு எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

சுல்தான்களுடைய ஆட்சியாலும், முகலாய மன்னர்களின் ராஜ்ய பாரத்தாலும் இந்தியாவிற்கு உண்டான பொது நன்மைகளை யறியாதார் இல்லை. அம்மன்னர்களிற் சிலர்போற்றத் தகுந்த சக்கிரவர்த்திகளாய் இருந்தனர் என்பதும் தெரிந்த விஷயமே. ஆகவே மேற்கூறப் பட்டுள்ளவர்களின் இணைப்பினுல் நம் நாடு மேன்மையுற்றதை நாம் தெளிவாகக் கற்றல் அவசியமாகும். எனவே இக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இப் புத்தகம் எழுதப்பெற்றுள்ளது.

நிற்க, மஹாராஷ்டிரர்களது பெருமையும், சிவாஜி மஹாராஜரது தேச சேவையும் தெளிவாக விளக்கப் பெற்றிருக்கின்றன.

கடைசியாக ஆங்கிலேயரது முன்னேற்றமும், அவர்களுடைய ராஜ்ய ஸ்தாபனமும் சுருக்கமாகவும், நுட்பமாகவும் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

இவ் விஷயங்களனைத்தையும் திறமையுடன் கற்க அத்தியாயங்களினிடையே தகுதியான போதனு சாதனங்களும் இணைக்கப் பெற்றிருக்கின்றன. பயிற்சி வினைக்களும் தொகுக்கப் பெற்றிருக்கின்றன.

இப்புத்தகம் மாணவ மாணவிகளுக்குப் பெரிதும் பயன்படும் என நம்பப்படுகிறது. சரித்திர ஆசிரியர்களும் இதனது உபயோகத்தை மாணவ, மாணவிகளுக்கு அறிவுறுத்துவார்கள் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

இப்புத்தகம் பள்ளிச் சிறுர்களுக்கும், சிறுமிகளுக்கும் பின்னும் பயன்பெறும் வண்ணம் ஏற்ற யோசனைகளை அளிக்குமாறு ஆசிரியர்களை வணக்கமுடன் வேண்டுகிறேன்.

ஆசிரியன்.

பொருளடக்கம்

அத்தியாயம்	விஷயம்	பக்கம்
1.	இஸ்லாம் தோன்றுதலும் அதனது வளர்ச்சியும் ...	1
2.	கி. பி. 10-ம் நூற்றுண்டில் இந்தியாவின் நிலை ...	4
3.	கஜினி மாமூது ...	6
4.	முகம்மது கோரி ...	10
5.	அடிமை சுல்தான்கள் ...	14
6.	கில்ஜி வம்சத்தவர்கள் ...	17
7.	துக்ளக் வம்சம் ...	22
8.	ஸையத் லோடி வம்சங்கள் ...	28
9.	பாமினி ராஜ்யம் ...	29
10.	விஜயநகர ராஜ்யம் ...	31
11.	சித்தூர் ராஜபுத்திரர்கள் ...	39
12.	பாபர் ...	42
13.	ஹுமாயூன் ...	46
14.	அக்பர் மஹா சக்ரவர்த்தி ...	51
15.	ஜஹாங்கீர் ...	61
16.	ஷாஜஹான் ...	69
17.	ஔரங்கசீப் ...	75
18.	முகலாய ராஜ்ய க்ஷீணம் ...	79
19.	மஹாராஷ்டிரர்களின் சரித்திரம் ...	86
20.	சீக்கியர்கள் ...	101
21.	இந்தியாவுடன் ஐரோப்பியரின் வியாபாரம் ...	106
22.	ஐரோப்பியரின் வருகை ...	110
23.	ஆங்கிலேய பிரெஞ்சு வியாபாரப் பெருக்கு ...	115
24.	தென்னிந்தியாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் இடையே நடந்த போர்கள் ...	120
25.	வங்காளமும் ஆங்கிலேய ஆதிக்கமும் ...	136
26.	வாரன் ஹேஸ்டிங்ஸ் ...	149
27.	காரன் வாலிஸ் ...	165
28.	ஸர் ஜான் ஷோர் ...	170
29.	வெல்லெஸ்லி பிரபு ...	174
30.	ஸர் ஜார்ஜ் பார்லோவும் லார்டு மிண்டோவும் ...	187
31.	ஹேஸ்டிங்ஸ் பிரபு ...	190

இந்து தேச சரித்திரம்

(இரண்டாம் புத்தகம்)

1. இஸ்லாம் தோன்றுதலும் அதனது வளர்ச்சியும்

இஸ்லாம் தோன்றக் காரணம்: அரேபியா, எகிப்து பாரசீகம் முதலான தேசங்களில் 6-ம் நூற்றுண்டில் வாழ்ந்து வந்த ஜனங்கள் முரட்டுப் பழக்க வழக்கங் களையும் மூட பக்தியையும் கொண்டிருந்தனர். அவர்களிடத்து நாகரீகமும் மட்டுப் பட்டிருந்தது. அதைக் கண்ட அரேபியர்களில் ஒருவர் தம் நாட்டு மக்கள் முன்னேறும் மார்க்கத்தைக் குறித்து யோசிக் கலுற்ருர். சீரிய வாழ்க்கையை நடத்துதல் தக்கதோர் மதானுஷ்டானத்தாலேயே சாத்தியமாகும் என ஓர் ந்து ஓர் புதிய மதத்தை ஸ்தாபித்தார். சீக்கிரத்தில் அது **அரேபியா**விலும் மற்றச் சுற்றுப்புற நாடுகளிலும் பரவியது.

அம்மஹானது சரித்திரம் பின்வருமாறு ஆகும். **முகம்மது நபியின் (கி. பி. 570-633) இளமையும், இல்லற மும்:** முகம்மது நபி, கி. பி. 576-ல், அரேபியாவி லுள்ள **மெக்கா** என்னும் நகரில் அவதரித்தார். இளம் வயதிலேயே அவர் தமது பெற்றோர்களை இழந்தார்.

ஆகவே அவர் தமது சிற்றப்பனுடன் வாழ்ந்து வரலானார். தமக்கு ஏற்ற வயது வந்ததும் தமது குலத் தொழிலாகிய வியாபாரத்தில் ஈடுபட்டு, **கடிஜா** என்ற ஒரு பணக்கார ஸ்திரீயிடம் வேலைக் கமர்ந்தார். பின்பு அவளையே மணந்தார்.

ஞானோதயம்: சிறு வயது முதற் கொண்டே முகம்மதுவிற்குத் தம் நாட்டு மக்களின் நிலையைக் கண்டு பச்சாத்தாபம் உண்டாயிற்று. அவர்களை எவ் வண்ணம் நல்வழிப் படுத்துவதென்றும் எவ்வாறு மோக்ஷத்தைப் பெறச் செய்வது என்றும் சதா சிந்திக்கலானார். அதன் பயனாக அவர் பல விரதங்கள் அனுஷ்டித்துக் கடுந்தவம் இயற்றிக் கடைசியாக **ஹீரா** என்னும் **மலை**யை அணுகி, அங்கு ஒரு குகையில் நிஷ்டையிலிருக்குங்கால், ஓர் **தேவதூதர்** அவர் முன் தோன்றி, அவருக்கு ஞானத்தை ஊட்டி, அதை மாந்தர்களுக்குப் போதிக்குமாறு தூண்டியதாக ஓர் அனுபவம் அடைந்தார்.

மதப்பிரசாரம்: உடனே அவர் **மெக்கா** விற்குச் சென்று அங்குத் தமது இனத்தாருக்குத் தாம் அறிந்ததை உபதேசிக்கத் தொடங்கினார். ஆனால் முரட்டு சுபாவங்கொண்ட அராபியர்கள் அதை ஏற்காமல் அவரைத் தமது நகரத்தினின்றும் துரத்தினர். அச் சம்பவம் கி. பி. 622-ம் வருஷம், ஜுலை மீ 16-ந் தேதி, வெள்ளிக்கிழமை யன்றைய தினம் நிகழ்ந்தது. அத்தினமே பின்பு முகம்மதியர்களது சகாப்தத்தின் ஆரம்ப நாள் ஆயிற்று.

நிற்க, மெக்காவை விட்டோடிய முகம்மது 200 மைல்களுக் கப்பாலுள்ள **மெதீனா** விற்குச் சென்று

அந்நகரத்திற்குத் தலைவருமானார். இவ்வண்ணம் அவரது செல்வாக்கும் பலமும் அதிகரிக்கவே, அவர் மீண்டும் மெக்காவிற் கேகி அங்கு வாழும் ஜனங்களை ஜெயித்து அவர்களையும் தம் மதத்தைப் பின்பற்றச் செய்தார். பின்பு அம்மதத்தை அவர் அரேபியா முழுதும் பரப்பினார்.

முகம்மதுவின் சமாதி: முகம்மது நபி கி. பி. 632-ம் வருஷம் ஜூன் மாதம் 8ந் தேதி **மெதீனாவில்** சமாதி எய்தினார். அதே நகரில் அடக்கமும் செய்யப்பட்டார்.

முகம்மதுவின் உபதேசம்: 'கடவுள் ஒருவரே; அவருக்கு நாம ரூபம் இல்லை; ஆகவே ஆராதனையும், கடவுளுக்குப் பெயரிடுதலும் பாபச் செயல்களாகும்; மானிடர்கள் எல்லோரும் சகோதரர்கள்; ஆனது பற்றி அவர்களிடையே ஏற்றத் தாழ்வு என்ற மனப்பான்மை ஏற்றதாகாது; கடவுளருளை **நல்லெண்ணம், நற்செய்கை, நல்வாக்கு, நற்றவம்** முதலியவைகளின் மூலமே அடைய இயலும். இக் குணங்களைக் கைக்கொள்ள வேண்டுமாயின் பொய், கொலை, களவு, சூது, வாது; குடி முதலிய குற்றங்களைக் களைய வேண்டும். என்னைத் தேவதூதனென ஏற்க வேண்டும். இத் தெய்வீக மதத்தைப் பரப்ப ஒவ்வொருவரும் ஆவலுடன் முயல வேண்டும்.'

முகம்மதிய மதத்தின் வளர்ச்சி: முகம்மதுவுக்குப் பின் **காலிப்புக்கள்** என்ற அவர்களுடைய சிஷ்யர்கள் அவர் போதித்த மதத்தை **ஸ்பெயின், ஸிரியா, பாரசீகம், வடஆப்பிரிக்கா, ஆப்கானிஸ்தானம்** முதலிய இடங்களில் பரப்பினார்கள்.

வினுக்கள் :

1. இஸ்லாம் மதம் தோன்றக் காரண மென்ன?
2. முகம்மது நபிக்கு ஞானோதயம் உண்டான தெங்ஙனம்?
3. நபி உபதேசித்த கொள்கைகள் யாவை?
4. இஸ்லாம் எங்கெல்லாம் பரவியது?

2. கி. பி. 10-ம் நூற்றுண்டில் இந்தியாவின் நிலை

குழப்பமும், ஒற்றுமை இன்மையும் : ஹர்ஷர் இறந்து சுமார் 300 வருடங்கள் வரை, வட இந்தியாவில் எந்த ராஜ்யமும் சிறப்புற்று விளங்கவில்லை. **ராஜபுத்திரர்கள்** சிறு சிறு நாடுகளை ஏற்படுத்திக்கொண்டு ஒருவரோடு ஒருவர் போரிட்டு வந்தனர். தக்ஷணத்தில் **ராஷ்டிர கூடர்களுக்கும், பல்லவர்களுக்கும், கீழைச் சாளுக்கியர்களுக்கும்** இடையே அடிக்கடி யுத்தங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. தமிழகத்திலோ **மூவேந்தரும்** ஒருவருக்கொருவர் சமர் புரிந்து நாட்டின் சீர்மையைப் போக்கினர். ஆகவே முதலில் முகம்மதியர்களான **அராபியர்கள்** தைரியமாய் இந்தியாவின் மேற்கு எல்லையைத் தாக்கினர்கள்.

அராபியரின் படையெடுப்பு : சுமார் கி. பி. 712-ல் சிம்மள நாட்டரசர் பாரசீக மன்னருக்குச் சில கப்பல்கள் நிரம்ப முத்தும், பவழமும், வாசனைத் திரவியங்களும், சந்தனக் கட்டைகளும் பரிசாக அனுப்பினர். அவைகள் சிந்து தேசத்தின் கரையை அணுகியதும், அந்த நாட்டு மாலுமிகள் அக்கலங்களைத்

தாக்கி, அவைகளிலிருந்த பொருள்களைக் கொள்ளைக் கொண்டனர். அது பாரசீக அரசரின் செவிக்கு எட்டியது. உடனே அவர் தமது தளகர்த்தர்களில் தேர்ந்தவரான **முகம்மது பின் காஸிம்** என்னும் அராபியரைச் சிந்து தேசக் காவலரைத் தண்டித்துவர அனுப்பினர். காஸீமுக்கும், சிந்துநாட்டு அதிபதியான **தாஹீருக்கும்** நடந்த சண்டையில் தாஹீர் தோற்றதுடன் கொல்லவும் பட்டார். **சிந்து தேசம்** அராபியர்கள் வசம் ஆயிற்று. பின்பு சுற்றுப்புற நாடுகளும் ஜெயிக்கப்பெற்றன.

துருக்கியர் படையெழுச்சி: மேற் குறிக்கப்பட்டுள்ள சம்பவம் நிகழ்ந்து 200 வருடங்களுக்குப் பின்பு, மற்றும் ஓர் முகம்மதியக் கூட்டத்தினர் இந்தியாவின் மீது படை யெடுத்தனர். அது எவ்விதம் நிகழ்ந்தது என்பதைக் கீழே காண்போம்:

ஆப்கனிஸ்தானத்தின் வட பாகத்தில் **கஜினி** என்றோர் நகரம் இருந்தது. அது பத்தாம் நூற்றுண்டின் பிற் பகுதியில் **ஆல்ப்டஜின் (கி. பி. 961—975)** என்ற ஒரு துருக்கிய வீரரால் கைப்பற்றப்பட்டு, ஓர் சிறு ராஜ்யமாக ஆக்கப்பட்டது. அவருக்குப் பின் அந்நகர் ஆல்ப்டஜினது சொந்தக் காரரான **ஸபக்டஜினுல்** (கி. பி. 976—997) ஆளப்பட்டது. அவருடைய காலத்தில் கஜினியின் பெருமை ஓங்கி வளர்ந்தது. ஸபக்டஜின் இந்தியாவிலும் தமது அதிகாரத்தைப் பரப்ப எண்ணிச் சிந்து நதிப் பிரதேசத்தைத் தாக்கினுர். அச்சமயம், **பஞ்சாபை ஜெயபாலர்** என்ற ராஜ புத்திர மன்னர் ஒருவர் ஆண்டுவந்தார். ஸபக்டஜின் அவரை **2 முறைகள்** எதிர்த்துத் தோற்

கடித்துச் சிந்து நதிக்கு மேற்கேயுள்ள பிரதேசத்தைத் தம் நாட்டுடன் இணைத்தார்.

வினாக்கள் :

1. கி. பி. 1-வது நூற்றாண்டில் வட இந்தியாவின் நிலை எவ்வாறு இருந்தது?
2. அராபியப் படையெழுச்சியைப் பற்றி ஓர் குறிப்பு வரைக.
3. ஜெயபாலருக் கெதிரே போர் புரிந்தது யார்? போரின் முடிவு என்ன?

3. கஜினி மாமூது (கி. பி. 977—1030)

மாமூது இந்தியாவைத் தாக்கக் காரணம்: ஸபக்டஜினது மைந்தரான மாமூது தமது 30-வது வயதில் கஜினிக் கதிபதி ஆனார். அவரும் தமது தந்தையைப் போலவே இந்தியாவின் மீது படையெடுக்க எண்ணங் கொண்டார். அதற்குக் காரணம், அவர் சிறுவராயிருக்கும் பொழுதே இந்தியாவின் வளப்பத்தைப் பற்றிக் கேள்வியுற்று, இந்தியரின் அளவிறந்த செல்வத்தைக் கொள்ளைகொள்ள வேண்டுமென விருப்பங் கொண்டதே யாகும். மேலும், முகம்மதியர்க ளல்லாதோரை யெதிர்த்து, அவர்களது ஆலயங்களை யிடித்து, விக்கிரஹங்களை யுடைத்து, அவற்றை வணங்குவோரின் உயிர்களைப் போக்கி அவர்களின் நாடு நகரங்களையும் சுட்டெரித்தால் தமக்குச் சுவர்க்கம் தடையின்றிக் கிட்டுமென எண்ணினா. அதனாலேயும் அவர் இந்தியாவைத் தாக்கினர்.

கஜினி மாமூதின் படை யெடுப்புகள்: கஜினி மாமூது கி. பி. 1001-லிருந்து 1025-வரை இந்தியா வின் மீது சுமார் 17-தடவைகள் படையெடுத்தார். அவற்றில் முக்கியமானவற்றை மட்டிலும் இங்குக் குறிப்போம்.

கஜினி மாமூது

(a) **ஜெயபாலரின் தோல்வி:** 1001-ல் மாமூது **ஜெயபாலரை** எதிர்த்தார். இந்திய அரசர் தோல்வி யுற்ருர். அவர் மாமூதுக்குக் **கப்பம்** கட்ட வற்புறுத் தப்பட்டதுடன் **லாகூரையும்** இழக்க நேர்ந்தது. அவ் வவமானத்தைச் சகிக்க ஒண்ணுத ஜெயபாலர் ராஜ்யத்தைத் தம் மைந்தரான **அனங்க பாலரிடம்** ஒப்புவித்துத் தாம் தீக்கிறை யாஞர்.

(b) **அனங்கபாலரின் அபஜெயம்** : இச் சமபவம் நிகழ்ந்து சுமார் 7-வருடங்களுக்குப் பிறகு, **அனங்க பாலர், உஜ்ஜயினி, கன்னோசி** முதலிய நாட்டரசர்களின் உதவியைக் கொண்டு, மாமூதுக் கெதிரே போர் தொடுக்க நேர்ந்தது. அச்சண்டையிலும் மாமூதே வெற்றி யடைந்தார். உடனே கஜினி மன்னர் **நாகர்க்** கோட்டையை யெதிர்த்து அதனுள் காளி கோயிலில் குவித்து வைக்கப்பட்டிருந்த இந்தியச் சிற்றரசர் களின் அளவற்ற செல்வத்தைக் கைப்பற்றி, குதிரை கள் மீதும் ஒட்டகங்கள் மீதும் ஏற்றிக்கொண்டு தம் நாடு திரும்பினார்.

(c) கி. பி. 1011-ல் **ஸ்தானேசுவரமும்** தகர்க்கப் பட்டது.

பஞ்சாப் இணைக்கப் படுதல்: கி. பி. 1017.

(d) சுமார் கி. பி. 1017-ல் **மத்ரா, கன்னோசி, குவா லியர், களஞ்சார்** முதலிய இடங்களை மாமூது கொள்ளை யடித்துப் பிடித்துக் கொண்டார். பின்பு பஞ் சாபை ஆண்டு வந்த **திரிலோசன பாலரைச்** சண்டை யில் தோற்கடித்துக் கொன்றார். அதுமுதல் **பஞ்சாப்** கஜினி ராஜ்யத்தோடு சேர்ந்ததோர் பிரதேசமாயிற்று.

(e) **சோமநாதபுரக் கொள்ளை** : (கி.பி. 1024) கஜினி மாமூதின் படை யெழுச்சிகளில் **சோமநாதபுரக் கொள் ளையே** முக்கியமானது. அந் நகரிலுள்ள ஆலயம் செல் வத்திற் சிறந்தது. ஆனது பற்றி மாமூது அதனிடத் திருந்த ஐசுவரியத்தைப் பரிக்க விரும்பினார். கோயி லுக்குமுன் ஓர் கோர யுத்தம் நிகழ்ந்தது. ஆலயத் திற்குள் செல்ல கஜினி அரசர் ஹிந்துக்களது சேனையை 3-தடவைகள் கடுமையாக எதிர்த்துத்

தோற்கடிக்க வேண்டியதாயிற்று. பின்பு மாமூது கோயிலிற்குள் நுழைந்து லிங்கத்தை யணுகினார். அச்சமயம் சிவ பக்தர்கள் அதை உடைக்காமல் இருக்குமாறு அவரை எவ்வளவோ வேண்டினார்கள். அதற்கு மாமூது **"நான் விக்கிரஹம் விற்பவன் அல்லன், உடைப்பவனே,"** என மூர்க்கத்தனமாய்ப் பதிலுரைத்துத் தம் கையிலிருந்த கோடறி கொண்டு அந்த லிங்கத்தைத் தகர்த்து எறிந்தார். அதனடியில் புதைக்கப் பெற்றிருந்த ஏராளமான பொன், வெள்ளி, முத்து, இரத்தினம் முதலியவற்றைக் கண்டதும் அவற்றை வாரி வளைத்தார். பின்பு அக்கோயிலில் கிடைக்கக் கூடிய மற்ற விலை யுயர்ந்த பொருள்களையும் சேகரித்துத் தம் நாடு திரும்பினார்.

மாமூதின் நற்குணங்களும், நற்செயல்களும்: முகம் மதிய ரல்லாதோரிடத்து கஜினி மாமூது இவ்வண்ணம் நடந்து கொண்டாராயினும் பிரஜைகளிடத்தில் அவர் மிக்க அன்பு கொண்டிருந்தார். இந்தியாவில் அபகரித்த பொருள்களைக் கொண்டு கஜினிமா நகரைப் புதுப்பித்தார். **பிர்டௌஸி, ஆல்புரூனி** முதலிய கல்விமான்களை ஆதரித்தார். அரிய பொருட் காட்சி சாலை ஒன்றை அமைத்தார். ஒரு பெரிய கலாசாலையையும் கட்டினார். மேலும் ஜனங்கள் தொழுவதற்காக ஒரு மசூதியையும் நிர்மாணித்தார்.

மாமூதின் குறைகள்: ஆனால் மாமூது மதத் துவேஷம் கொண்டவர். பணத்தாசை பிடித்தவர். பிறர் படுந் துன்பத்தை ஒரு சிறிதும் பொருட் படுத்தாதவர்.

வினுக்கள் :

1. கஜினி மாமூது இந்தியாவைத் தாக்க விருப்பம் கொண்டதேன்?
2. கஜினி மாமூதின் படையெழுச்சிகளில் எது முக்கியமானது? ஏன்?
3. கஜினி மாமூது தமது குடிகளுக்கியற்றிய நன்மைகளைக் குறிக்க.
4. கஜினி மாமூதின் குறைகளிற் சிலவற்றைக் குறிப்பிடுக.

4. முகம்மது கோரி

கோர் வம்ச ஸ்தாபனம்: கஜினி மாமூதிற்குப் பின் அவரது ராஜ்யம் க்ஷீணிக்கத் தலைப்பட்டு, பின்பு சுமார் 120-வருடங்களே நிலைத்திருந்தது. கி. பி. 1050-ல் கஜினிக்குப் பக்கத்தில் தோன்றிய **கோர்** என்னும் நாட்டை ஆண்ட அரசர் கஜினியைத் தாக்கி அதைக் கைப்பற்றினுர். அத்துடன் கஜினி ராஜ்யம் அழிவுற்றது. ஆயினும் கஜினி மன்னர்கள் சில காலம் **பஞ்சாபில்** ஆண்டு வந்தனர். கோர் நாட்டு மன்னர் அதையும் ஜெயிக்கவே, கஜினி வம்சம் அங்கும் முடிவடைந்தது.

நிற்க, கோர் நாட்டு மன்னர்கள் ஸ்தாபித்த வம்சத்திற்குக் **கோர் வம்சம்** எனப் பெயர் வழங்கலாயிற்று. அவ்வம்சத் தரசர்களுள் **முகம்மது கோரி** எனப்பட்டவரே முக்கியமானவர்.

முகம்மது கோரியின் நோக்கம்: முகம்மது கோரிக்கு இந்தியாவை ஜெயித்துத் தமது ராஜ்யத்தைப் பெருக்கவேண்டுமென்பது முக்கிய நோக்கமாகும்.

அதற்கேற்ப இந்திய மன்னர்களும் ஒற்றுமையற்றுத் தம்முள் சண்டை சச்சரவுகளைப் பெருக்கிக் கொண்டு, முகம்மதியப் படையெழுச்சியை எதிர்க்கச் சிறிதளவும் முயற்சியின்றி இருந்தனர். ஆகையால் முகம்மது கோரி இந்தியாவின் மீது எளிதில் 9-முறை படையெடுக்கவும், ராஜ்யத்தை ஸ்தாபிக்கவும் சாத்தியமாயிற்று.



முகம்மது கோரி

ராஜ புத்திரர்களின் எதிர்ப்பும், தோல்வியும்: முகம்மது கோரி, கி. பி. 1191-ல் ஓர் பெரிய சேனையுடன் இந்தியாவைத் தாக்க வந்தார். அச்சமயம் இந்திய மன்னர்களில் பிரசித்தி பெற்றவரும், **ஆஜ்மீருக்கும், டில்லிக்கும் அதிபதி**யுமாகிய **பிருதிவிராய்** என்னும் அரசர்

முகம்மது கோரியை ஸ்தானேசுவரம் என்ற இடத்தில் தோற்கடித்துக் காயப்படுத்தி, அவரது சேனையைச் சின்ன பின்னமாக்கினர். அதனல் முகம்மதுகோரி வெட்கித் தம் நாடு திரும்ப வேண்டியதாயிற்று. ஆனல் மறு வருஷமே அவர், தக்க ஏற்பாடுகளுடன், இரண்டாம் முறை பிருதிவிராயை எதிர்க்க வந்தார். அப்பொழுது இந்திய வீரருக்கு விரோதியான **ஜெயச்சந்திரர்** என்ற **கன்னேசி நாட்டரசர்** முகம்மதுவிற்கு உதவிப் பிருதிவிராயை மாளச் செய்தார். முகம்மது கோரிக்கே வெற்றி உண்டாயது. **தேசத்துரோகி எவனும் கடைசியில் தண்டிக்கப் படுவான் அன்றே?** ஆகவே அடுத்த ஆண்டில் ஜெயச் சந்திரர்,

பிருதிவிராய்

முகம்மதுவால் வெல்லப்பட்டுத் தம் நாட்டையும், உயிரையும் ஒருங்கே இழந்தார். அதற்குப் பின் ஹிந்துஸ்தானத்தில் முகம்மது கோரிக்குத் தீவிர ராஜ புத்திர எதிர்ப்பு ஒன்றும் இல்லாது போயிற்று.

பிரதிநிதி குத்புதீனும், அவரது வெற்றிகளும்: கன்னேசியைக் கைப்பற்றிக் கோருக்குத் திரும்பு முன், தாம் இந்தியாவில் ஜெயித்த நாடுகளுக்குத் தம் தள

கர்த்தர்களிற் சிறந்தவரான **குத்புதீன்** என்பவரைக் கோரி முகம்மது தம் பிரதிநிதியாக நியமித்தார். அத்தளகர்த்தரும் கூடிய சீக்கிரத்தில் **மாளவம், அஸ்ஸாம்** தவிர வட இந்தியாவி லிருந்த மற்ற ராஜ்யங்களை ஜெயித்து அவைகளைத் தம் மன்னரின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தார்.

முகம்மது கோரியின் மரணம்: கோரியின் கடைசி இந்தியப் படை யெடுப்பின் பொழுது, அவரால் எதிர்க்கப்பட்ட **காக்கர்கள்** என்ற சிந்து நதிப் பிரதேசத்தில் வசித்துவந்த முரட்டு ஜாதியரைச் சேர்ந்த ஒருவன், அவரை ஓர் இரவு அவரது பாசறையில் எவரு மறியாமல், குத்திக் கொன்ருன். எனவே முகம்மது கோரிக்குச் சந்ததி இல்லாததினுல் அவரது இந்தியப் பிரதிநிதியான **குத்புதீனே** இந்திய ராஜ்யத்திற்கு அதிபதியானுர். **கோர்** முதலிய இதர நாடுகள் மற்ருேர் தளகர்த்தருக்குச் சொந்தமாயின.

கஜினி, கோரி படை யெடுப்புகளால் உண்டான விளைவுகள்: இவ்விரு மன்னர்களும், அநேக நாடுகளையும் நகரங்களையும் பாழாக்கி அளவற்றப் பொருள்களைக் கொள்ளை யிட்டனர். கணக்கின்றி மாந்தர் மடிந்தனர். வட இந்தியாவில் பிரபலமாயிருந்த **கன்ளுேசி, டில்லி** முதலிய ராஜபுத்திர ராஜ்யங்கள் அழிந்தன. ஆயினும் ராஜ புத்திரர்களில் அநேகர் **தார்** பாலைவனத்தை யடைந்து, ஆங்கு **ஜோதிபுரி, ஜெயபுரி,** போன்ற சிறு ராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டு, சுயேச்சையாய் வாழலாயினர். ராஜ புத்திரர்களிற் பெரும்பாலோர் அப் பாலைவனத்திற்குச் சென்று வசித்து வந்ததால், அதற்கு **ராஜபுதனம்** என்ற பெயர் தோன்ற லாயிற்று.

இம் முகம்மதியப் படையெழுச்சிகளால் வேறு சில விளைவுகளும் உண்டாயின. முகம்மதிய நாடுகளுடன் வியாபாரம் பெருகிற்று. இஸ்லாம் மதம் இந்தியாவில் நிலைபெற்றது. முகம்மதியரின் நாகரிகம் நம் நாட்டிலும் பரவ ஆரம்பித்தது. முகம்மதிய ஆட்சி வெகுநாள் வரை இந்தியாவில் நீடிக்கலாயிற்று.

வினாக்கள் :

1. கஜினி வம்சம் எப்பொழுது எவ்வாறு அழிவுற்றது?
2 முகம்மது கோரிக்கு எதிரே தோன்றிய ராஜபுத்திர எதிர்ப்பை விவரிக்க.
3. முகம்மது கோரி எங்ஙனம் மரிக்க நேர்ந்தது?
3. கஜினி, கோரி படையெழுச்சிகளால் நேர்ந்த விளைவுகள் யாவை?
5, பிருதிவி ராய், குத்புதீன் முதலியோரைப் பற்றிக் குறிப்புகள் எழுதுக,

5. அடிமை சுல்தான்கள்

அடிமை வம்சம் (கி. பி. *1206—1290*): குத்புதீன் ஓர் அடிமை. அவருக்குப் பின் ஆண்ட மற்ற முக்கிய அரசர்களும் அடிமைகளே. ஆனதுபற்றிக் குத்புதீன் தொடங்கிய வம்சத்திற்கு **அடிமை வம்சம்** எனப் பெயர் வழங்கலாயிற்று.

குத்புதீன் ஐபக் (கி. பி. *1206—1210*): சந்ததியற்ற கோரி முகம்மது இறந்தபின் அவரது இந்திய நாடுகள் குத்புதீனுக்குச் சொந்தமாயின எனப் படித்தோம். அது முதற்கொண்டு அவர் **டில்லி சுல்தான்**

எனப் பட்டம் தரித்து வட இந்தியாவில் ஆளத் தொடங்கினர். பின்பு **மாளவத்தையும்** ஜெயித்தார்.



குதுப் மினர்

குத்புதீனது ஆட்சி: குத்புதீன் முகம்மதிய மதத்தினிடம் அதிகப் பற்றுக் கொண்டவர். ஆதலால் அவர் ஹிந்துக்களின் கோயில்களை இடித்து அந்த ஸ்தலங்களில் மசூதிகளைக் கட்டினர். ஆயினும் ராஜ்ய பாரத்தில் இவ்விரு மதத்தினரிடையே ஒருவித வித்தியாசத்தையும் பாராட்டவில்லை. குத்புதீனது காலத்திற்றான் **குதுப்மினர்** என்ற பெரிய கட்டிடம் ஒன்று தொடங்கப் பெற்றது. ஒரு நாள் (கி.பி. 1210-ல்) **போலோ** என்னும் பந்தாட்டத்திற் கலந்து விளையாடிக் கொண்டிருந்தபொழுது, குத்புதீன் தற்செயலாய்க் குதிரை மீதிருந்து கீழே விழுந்து மடிந்தார்.

பால்பனுக்கு முன் ஆண்ட அரசர்கள்:

(a) **ஆல்டமிஷ்:** குத்புதீனது மைந்தர் திறமை

யற்றவரா யிருந்ததால், குத்புதீனது அடிமைகளுள் பிரதானரான **ஆல்டமிஷ்** என்ற துருக்கிய அடிமை பட்டம் எய்தினார். அவருடைய காலத்தில் அமைதி நாட்டப்பெற்றது. **டில்லியை** எதிர்த்த **மங்கோலியர்** தோற்றோடினர். ஆல்டமிஷ் கி. பி. 1211-லிருந்து 1236-வரை அரசாண்டார்.

(b) **ரஜியா** (கி. பி. 1236—40): அவருக்குப் பின் அவருடைய குமாரி **ரஜியா** பட்டத்திற்கு வந்தாள். அவளுடைய ஆட்சி சிறப்புற்றதாகவே இருந்ததாயினும், பெண் என்ற காரணத்தால், பொறாமை கொண்ட பிரபுக்கள் அவளைக் கொன்று விட்டனர்.

(c) **நாஸிருதீன்** (கி. பி. 1246—66): அவளுடைய சகோதரர் **நாஸிருதீன்** அவளுக்குப்பின் சிங்காதன மேறினார். அவர் தெய்வ பக்தியிற் சிறந்தவர். உலகப் பற்றற்றவர். குர்ஆனுக்குப் பிரதிகள் எழுதி விற்று, அதனால் அடைந்த பணத்தைக் கொண்டே அவர் தமது செலவு அழிவுகளைச் செய்யலாயினர். ஆதியில் அடிமையாயும், பின்னர் அமைச்சராயும் ஏற்பட்ட **பால்பன்** என்பவரே நாஸிருதீனது ஆட்சியைச் சிறப்புறச் செய்தார். நாஸிருதீனுக்குப் பின் பால்பன் பட்டம் பெற்றார்.

பால்பன் (கி. பி. 1266—1286): அடிமை அரசர்களில் **பால்பனே** மிகவும் பெருமை பொருந்தியவர். அவர் நாட்டில் எழுந்த கலகங்களைப் போக்கினார். கட்டுக் கடங்காப் பிரபுக்களின் கொட்டத்தை அடக்கினார். கட்குடியை நிறுத்தினார். மங்கோலியர்களைக் கணக்கின்றி மாளச் செய்தார். அமைதியை

நிலவினர். ஒற்றர்களை நியமித்துக் குற்றம் இழைத்த வர்களைக் கடுமையாய்த் தண்டித்தார். சாலைகளை நிரு பித்தார். நாணயங்களை அச்சிட்டார். ஆனல் ஹிந்துக் களை வாட்டி வருத்திஞர்.

அடிமை வம்சத்தின் அழிவு : பால்பனுக்குப் பின் அவரது பேரரான **கைகுபாத்** பட்டத்திற்கு வந்தார். அவர் சிற்றின்பப் பிரியர். மட்டில்லா மதுபானம் செய்பவர். தமது பதவியை பத்திரப் படுத்திக்கொள் ளத் தெரியாமல், பலரைத் தம் பகைவர்களாக்கிக் கொண்டார். அவர் 3-வருடங்களுக் குள்ளாகவே தமது விரோதிகளால் கொல்லவும் பட்டார்.

விஞக்கள் :

1. குத்புதீன் என்பாருக்குப் பட்டம் எங்ஙனம் கிட்டியது?
2. அடிமை அரசர்களுக்குள் பால்பன் எவ்வண்ணம் சிறந்தவராவர்?
3. ரஜியா, நாஸிருதீன்—இவர்களைக் குறித்துக் குறிப்புக்கள் எழுதுக.

6. கில்ஜி வம்சத்தவர்கள் (கி. பி. 1290-1320)

கில்ஜி வம்ச ஸ்தாபனம் : அடிமை வம்சத்துக் கடைசி மன்னர் **கைகுபாத்** அவரது முக்கிய உத்தியோகஸ்தர்களில் ஒருவரான **ஜலால் உதீன்** என்ற துருக்கிய வீரரால் கொல்லப்பட்டார். பின்னர் அத் துருக்கியரே பட்டம் அடைந்தார். அவர் **கில்ஜி** வகுப்பைச் சேர்ந்தவர். ஆகவே அவர் ஸ்தாபித்த வம்சத்திற்குக் **கில்ஜி வம்சம்** எனப் பெயர் வந்தது.

ஜலாலுதீன் கில்ஜி (கி. பி. 1290-1296):

ஜலாலுதீன் கில்ஜி (கி. பி. 1290-1296): பட்டத்திற்கு வரும்பொழுது, ஜலாலுதீனுக்குச் சுமார் 70 வயதிருக்கும். அவர் ஒரு சுத்த வீரர். ஆயினும் அவரிடத்தில் தயை அதிகமாகக் குடிகொண்டிருந்தது. ஆனது பற்றி ஆங்காங்குக் கலகங்கள் எழுந்தன.

அவரது சகோதரரின் மைந்தரான **அலாவுதீன்** அச் சமயம் அவருக்குக் கீழே பிரதிநிதியாக அமைந்திருந்தார். அவர் யுத்தத்தில் நிபுணர். ஆகவே **மாளவத்தில்** எழுந்த கலகத்தை அடக்க அவர் ஜலாலுதீனால் அனுப்பப்பட்டார். அலாவுதீன் மாளவத்தை ஜெயித்தது மன்னியில், தெற்கு நோக்கிச் சென்று, செல்வத்திலும் ஆதிக்கத்திலும் சிறப்புற்றிருந்த **தேவகிரி** மன்னரைத் தாக்கி, அளவற்ற பொருள்களைக் கொள்ளை கொண்டு, அம் மன்னரை ஜலாலுதீனுக்குக் **கப்பம்** கட்டுமாறு ஒப்புக்கொள்ளவும் செய்து, டில்லி திரும்பினர். அதைக் கேள்வியுற்ற ஜலாலுதீன் **அலாவுதீனைத்** தக்க மரியாதையுடன் வரவேற்கச் சென்றார். அவ் வரவேற்பின் பொழுது அலாவுதீன் ஜலாலுதீனைத் தமது சூழ்ச்சியிற் சிக்க வைத்துக் கொன்றார்.

அலாவுதீன் (கி. பி 1296—1316):

அலாவுதீன் பட்டம்பெறுதலும் அதை நிலை நிறுத்தலும்: ஜலாலுதீன் மடியவும் அலாவுதீன் பட்டத்திற்கு வந்தார். தமக்குப் பட்டம் நிலைப்பதற்காக அவர் உடனே சில காரியங்களைச் செய்து முடிக்க வேண்டியதாயிற்று. முதலில் ஜலாலுதீனின் சந்ததி

யாரைக் கொன்ருர். பின்பு ஜலாலுதீனது உற்ருர் உற வினரை இறக்கச் செய்தார். அடுத்தபடியாகப் பிர புக்கள் தம்மீது போர் தொடுக்காதிருக்க அவர்களு க்கு ஏராளமான பொன் வழங்கினர். இத்தனையும் செய்து முடித்த பின்பே அவருக்கு டில்லிப் பட்டம் ஸ்திரமாயிற்று.

அலாவுதீனின் வெற்றிகள்:

(a) வட இந்திய வெற்றிகள்—கூர்ஜரம் பிடிபடல்: அலாவுதீன் தமது அதிகாரத்தைப் பெருக்குவதிலும்



அலாவுதீன்

ராஜ்யத்தை ஓங்கச் செய்வதிலும் மிக்க விருப்பங் கொண்டிருந்தார். ஆகவே, அவர் முதலில் கூர்ஜரத் தைத் தாக்கி அதன் காவலரைக் கொன்ருர். அதன் பின்பு ராஜபுதனத்தில் ஆண்டுவந்த ராஜபுத்திரர்

களைத் தாக்க அவர் முயற்சி கொண்டார். "**ராந்தம்பூர்**" என்னும் கோட்டை நீடித்த முற்றுகைக்குப் பின் பிடிபட்டது. அடுத்தபடியாக கி. பி. 1303-ல் **சித்தூர்** அவருடைய எதிர்ப்புக்கு இலக்காகியது. அதற்கு முக்கியகாரணம் அதன் ராணியாகிய **பத்மினி** என்றவளை அலாவுதீன் அடைய விரும்பியதே யாகும்.

மாளவம் ஜெயிக்கப் பெறுதல்: கடைசியாக அலாவுதீன், வட இந்தியாவில் மிகப் பிரக்கியாதி பெற்றிருந்த **மாளவத்தையும்** ஜெயித்துத் தம் நாட்டுடன் இணைத்துக் கொண்டார்.

(b) தக்ஷிணப் படையெழுச்சி: இச்சமயம் அலாவுதீனுக்கு **இந்தியச் சக்கரவர்த்தி** என்ற பட்டத்தைப் பெறவேண்டுமென்ற ஆர்வம் பிறந்தது. ஆனதுபற்றித் தமது தளகர்த்தரான **மாலிக் காபூர்** என்பவரை ஒரு சேனையுடன் **தக்ஷிணத்தை** ஜெயித்துவர அனுப்பினார். தக்ஷிணத்தின் மீது தொடுக்கப் பெற்ற முகம்மதியப்படையெழுச்சிகளில் அதுவே முதலாவதாகும். முதலில் மாலிக் காபூர் **யாதவர்**களின் ராஜ்யமாகிய **தேவகிரி**யைத் தாக்கி ஏராளமான பொருள்களைச் சேகரித்தார். பின்பு **காகதீயர்**களின் நாடாகிய **தெலங்கானா**வைக் கீழ்ப்படியச் செய்தார். மூன்றாவதாக **ஹொய்ஸலர்கள்** ஆண்டு வந்த**துவார ஸமுத்திரத்தை** ஓர் சிற்றரசு நாடாக்கினார்.

(c) தென் இந்திய வெற்றிகள்: மாலிக் காபூர் பின்பு தெற்கு நோக்கிச் சென்றார். அச்சமயம் தமிழகத்தில் **பாண்டிய நாடே** சிறப்புற்றதா யிருந்தது. ஆனால் அந்நாட்டின் மகுடத்திற்காக **வீரபாண்டியர், சுந்தர பாண்டியர்** என்ற இருவர் போராடிக்கொண்

யிருந்தனர். அப்பொழுது சுந்தர பாண்டியர் மாலிக் காபூரின் உதவியை நாட, அவர் அம் மன்னருக்கு முடி சூட்டி, அவரிடமிருந்து ஏராளமான திரவியத்தைப் பெற்ருர். பின்பு காபூர் **இராமேசுவரம்** வரை சென்று, **மஹாராஷ்டிரம், தேவகிரி** வழியாக டில்லிக்குத் திரும்பினர்.

2-வது அலெக்ஸாண்டர்: மேற் குறிக்கப்பட்டுள்ள அரிய வெற்றிகளுக்காகவும், மாலிக் காபூர் சேகரித்து வந்த மதிப்பற்ற கொள்ளேப் பொருள்களுக்காகவும், தமது வட இந்திய ஜெயங்களுக்காகவும், அலாவுதீன் தமக்குத்தாமே **2-வது அலெக்ஸாண்டர்** என்ற புனைப்பெயர் சூடிக்கொண்டார்.

அலாவுதீனின் ஆட்சி: அலாவுதீனின் ஆட்சி மிகப் பயங்கரமானது. ஆனுல் அது ஆற்றலும், தீர்க்கயோசனையும் அமையப் பெற்றது. ஏராளமாக அதிகாரம் படைத்த முகம்மதியப் பிரபுக்களின்மீது அவர் கடும் நிபந்தனைகள் இட்டார். அவர்கள் தமது அனுமதியின்றிக் கூட்டங்கள் கூடுவதோ, ஆடம்பரச் சடங்குகளைச் செய்வதோ கூடாது எனத் திட்டம் செய்தார். ஹிந்துக்களின்மீதும் கொடும் சட்டங்களையும் அநீதியான வரிகளையும் விதித்தார். அமைதியை எங்கும் நிறுவினர். அரசாக்ஷியைச் செவ்வனே நடத்தினர். விவசாயத்தை விருத்தியடையச் செய்தார். வியாபாரம் ஒழுங்காக நடைபெறத் தக்க ஏற்பாடுகளை யுண்டு பண்ணினர். ராணுவச் செலவை மட்டுப்படுத்த உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைக் குறைத்தது மன்னியில், பொருள்களின் விலைகளையும் திட்டப் படுத்தினர். பின்னு மொன்று; **மதுபானமே நாட்டில்**

பல்வகைக் குழப்பத்திற்குக் காரணம் என எண்ணி, மதுபானத்தைத் தாமும் தவிர்த்துத், தமது குடிகளை யும் விலக்கச் செய்தார்.

அலாவுதீனுக்குப் பின் ஆண்டவர்கள் : அலாவுதீனுக் குப் பின் அவரது 3-வது மைந்தரான **முபாரக்** என்ப வர் பட்டத்திற்கு வந்தார். அவர் ஆற்றலும் அறிவும் அற்றவர்; மூர்க்கர்; பெருங் குடியர்; சிற்றின்பப் பிரியர். ஆதலால் அவரிடத்து மந்திரியாயிருந்த **குஸ்ரு கான்** அவரைக் கொன்று தானே பட்டத்திற்கு வந் தான். அவனுடைய ஆட்சி பின்னும் கேவலமா யிருந் தது. ஆனதுபற்றி ஜனங்களின் விருப்பத்திற் கிணங்கி பஞ்சாபிற்குத் தலைவராயிருந்த **கியாஸுதீன் துக்ளக்** அவனைத் தொலைத்துத் தாமே கிரீடம் தரித்தார். அவர் நிலை நாட்டிய வம்சமே **துக்ளக் வம்சம்** என்பதாகும்.

வினாக்கள் :

1. ஜலாலுதீன் எவ்விதம் டில்லிப் பட்டத்தை யடைந் தார்?

2. அலாவுதீனது வட இந்திய, தக்ஷிண, தென் இந்தி யப் படையெழுச்சிகளில் ஏதாயினும் ஒன்றைப் பற்றிக் கூறுக.

3. அலாவுதீனின் ஆட்சிச் சிறப்பை விவரிக்க.

4. தமக்குப் பட்டம் நிலைக்க அலாவுதீன் என்னென்ன முயற்சிகள் செய்தார்?

7. துக்ளக் வம்சம்

1. **கியாஸுதீன் துக்ளக்** (கி. பி. 1320—25) : கியாஸுதீன் துக்ளக் பட்டத்திற்கு வந்ததும், நாட் டில் எழுந்த கலகங்களை அடக்கி அமைதியை நிலை நாட்டினார். முந்திய அரசர்களின் காலத்தில் குடிக

ளுக்கு உண்டாயிருந்த கஷ்டங்களைப் போக்க முயன் ருர். ஆனுல் அக்காரியம் முடிவடையும் முன்னரே கி. பி. 1325-ல் எதேச்சையாயோ தம் மைந்தரின் சூழ்ச்சியாலோ மாண்டார்.

2. முகம்மது பின் துக்ளக் (கி. பி. 1325—1351): **முகம்மதுவின் குணுதிசயங்கள்—(a) அவரது குறைகள்:** கியாஸுதீனுக்குப் பின் **முகம்மது பின் துக்ளக்** பட்டத் திற்கு வந்தார். அவரைச் சரித்திர ஆசிரியர்கள் **கற்றறிந்த மூடர்** எனக் குறிப்பிடுவது வழக்கம். ஏனெனில் அவரிடத்தில் மூர்க்கத் தன்மையும் மூடத் தனமும் அதிகமாகக் குடிகொண்டிருந்தன. அவ ருடைய பிடிவாதத்திற்கு ஓர் அளவேயில்லை. அவ ருடைய கோபமும் அடக்கச் சாத்திய மற்றது. அவ ரிடம் உலகானுபவம் எள்ளளவும்தென்படவில்லை.

(b) அவரது மேன்மைக் குணங்கள்: ஆயினும் உண்மையில் அவர் சகல கலா வல்லவர். பாரசீகக் கவி இயற்றுவதில் சமர்த்தர். ஓர் அரசருக்குரிய யோசனை யையும், தேர்ச்சியையும், அறிவையும் பெருகப் பெற் றவர். முகம்மதியரா யிருந்தும் பிற மதங்களிடம் வெறுப்பற்றவர். க்ஷாம காலங்களில் சொந்தப் பொருள்களைக் கொண்டு தமது பிரஜைகளுக் குதவு பவர்.

தலைநகரை மாற்ற முயற்சி: அலாவுதீனது காலத் தில் முகம்மதிய ராஜ்யம் தக்ஷிணத்தில் வெகுதூரம் பரவவே, ஏறக்குறைய ராஜ்யத்தின் நடு மய்யத்தி லிருந்த **தேவகிரியை** முகம்மது துக்ளக் தலை நகராக்க வேண்டும் என முயற்சித்தார். அவ் யோசனை சாலவும் பொருத்தமாகும். ஆனுல் அவர் பழைய தலைநகராகிய

டில்லியில் வசித்துவந்த பிரஜைகள் அனைவரையும் தேவகிரிக்குச் செல்ல உத்தரவிட்டார். அக்காலத்தில் போக்கு வரவு சாதனங்கள் ஏற்றவாறு அமையப் பெருததால் ஜனங்கள் பல கஷ்டங்களுக் குட்பட்டனர். தேவகிரியை யடைந்தவர்கள் ஒரு சிலரே யாகும். அவர்களை மாத்திரம் வைத்துக்கொண்டு தலைநகரை

முகம்மது துக்ளக்

எவ்வாறு நிர்மாணிப்பதென மயங்கித் தம் பிரஜைகளை மீண்டும் டில்லிக்கே செல்லும்படி உத்தர விட்டார். என்ன மூடத்தனம்! அவர்களில் எத்தனை பேர் டில்லியைச் சேர்ந்திருக்க முடியும் என நீங்களே ஊகித்துக் கொள்ளலாம்.

அயல் நாடுகளை ஜெயிக்க முயற்சி: முகம்மது தமது பரந்த ராஜ்யத்தைப் பின்னும் பெருக்க நோக்கங் கொண்டார். ஆகவே **பாரசீகம், திபெத், சைனு** முதலான ராஜ்யங்களைக் கைப்பற்ற முயற்சித்தார். ஆனால் இவ்விஷயத்திலும் அவர் மூடத்தனமாக நடந்துகொண்டார். **எகிப்து** மன்னரின் உதவியை நம்பி ஏராளமான பணச்செலவின் பேரில் அவர் பாரசீகத்திற் கனுப்பிய படை முறியடிக்கப்பட்டது. ஏற்ற காலத்தை அறியாது பனி மூடிய இமயமலைகளைக் கடந்து **திபெத்தையும், சைனுவையும்** ஜெயிக்கச் சென்ற லக்ஷம்குதிரை வீரர்களும் வழியில் மடிந்தனர்.

செப்பு நாணயங்கள் அச்சிடுதல்: மேற் குறிக்கப்பட்ட படையெழுச்சிகளாலும், தம்மை அடுத்தடுத்து எதிர்த்துவந்த மங்கோலியர்களுக்கு ஏராளமாய் லஞ்சம் வழங்கியதாலும், தேசத்தில் விவசாயமும் வியாபாரமும் தடைபட்டு, ஒரு கொடிய க்ஷாமம் ஏற்பட்டது. கொள்வன கொடுப்பன முற்றிலும் அற்றுவிடும் போல் ஆயிற்று. ஆனது பற்றிப் பணப் பழக்கத்தைப் போதுமான அளவு நிலைக்கச் செய்யச் **செப்பு நாணயங்களைத்** துக்ளக் அச்சிட்டார். ஆனால் ஜனங்களில் பலர் அதேபோல் நாணயங்களைத் திருட்டுத்தனமாய்த் தயாரித்துத் தேசத்திற் கிடைக்கக் கூடிய பொன், வெள்ளி, நாணயங்கள் அனைத்தையும் சேகரம் செய்துவிட்டனர். அதனால் நாட்டிற் பணமுடை பின்னும் அதிகரித்தது.

மனித வேட்டை: பணக் கஷ்டம் பெருகவே, அரசர் புதிய வரிகளைத் தம் பிரஜைகளின் மீது விதித்தார். கொடுப்பதற்குக் கதியற்ற குடிகள் கானகத்

திற் கேகினர். கோப வெறி கொண்ட துக்ளக் அவர்களை வனங்களில் வசிக்கும் விலங்குகளைப் போல் வேட்டையாட உத்தரவு இட்டார். என்ன கொடுமை! என்ன மதியீனம்!!

துக்ளக்கின் கடைசி நாட்களும் ராஜ்ய க்ஷீணமும்: துக்ளக்கினது கடைசி நாட்களில் எல்லைப்புற மாகாணங்கள் சுயேச்சை யடைந்தன. உதாரணமாக **வங்காளம்** துக்ளக்கின் ஆட்சியை மறுத்தது. மேலும் தக்ஷிணத்தில் **பாமனி விஜய நகரம்** என்ற ராஜ்யங்கள் தோன்றலாயின. முகம்மது துக்ளக் சிந்து நாட்டில் எழுந்த ஓர் கலகத்தை அடக்கச் சென்றிருந்த பொழுது கி. பி. 1351ல் ஜுரங்கண்டு இறந்தார்.

3. பிரோஜ்ஷா துக்ளக் (கி. பி. 1351-1388): முகம்மது துக்ளக்கிற்குப் பின் **பிரோஜ்ஷா துக்ளக்** பட்டத்திற்கு வந்தார். அவருடைய காலத்தில் குடிகளுக்குப் பல நன்மைகள் இயற்றப்பட்டன. ஜனங்களின் அறிவை வளர்க்க அவர் பல பள்ளிகளை அமைத்தார். வாழ்க்கையின் சுகத்தைப் பெருக்க ஆஸ்பத்திரிகள், ஏற்ற திட்டங்கள், நீதி முறைகள் முதலியவற்றை நிறுவினர். நாட்டின் வளப்பத்தை ஓங்கச் செய்யப் பல கால்வாய்களை வெட்டி, தோட்டங்களையும் துரவுகளையும் உண்டாக்கினர். புதிய நகரங்களையும் நிர்மாணித்தார். மேலும் வயதான உத்தியோகஸ்தர்களுக்கும் யுத்த வீரர்களுக்கும் உபகாரச் சம்பளம் வழங்கினர்.

பிந்திய துக்ளக் மன்னர்கள்: பிரரோஜ்ஷாவிற்குப் பின் ஆண்ட துக்ளக் மன்னர்கள் ஆற்றலும், சீலமும் அற்றவர்கள். ஆகவே அவர்களுடைய காலத்

தில் நாடு சீர் குலைந்தது. பல மாகாணங்கள் துக்ளக் ராஜ்யத்தினின்றும் விலகின. அவைகளில் முக்கியமானவை **ஜான்பூர் ,கூர்ஜரம், மாளவம், காஷ்மீர்** முதலியனவாகும்.

தைமூரின் படையெழுச்சி (கி. பி. 1398): கி. பி. 1394ல் **முகம்மது துக்ளக்** பட்டத்திற்கு வந்தார். 4 வருடங்கள் கழியவுமே **ஸாமர்க்கண்டின்** தலைவரான **தைமூர்** என்ற **தார்த்தாரிய மன்னர்** இந்தியாவைக் கொள்ளையடிக்க வந்தார். **பஞ்சாபை** எளிதில் ஜெயித்துப் பின் **டில்லியைத்** தாக்கினார். முகம்மதுஷா ஒரு நொடிப் பொழுதில் தோற்றோடிப்போனார். பின்னர் டில்லி கொள்ளை யடிக்கப்பட்டது. கணக்கற்ற மாந்தர் மடிந்தனர். அதற்குப்பிறகு குழப்பம் மேலிட்டுச் சுல்தானின் ஆட்சி ஒழிந்தது. அப்பொழுது, அதாவது சுமார் கி. பி 1413-ல், பஞ்சாபில் **தைமூரின் பிரதிநிதி**யாக நியமிக்கப்பட்டிருந்த **சையத் கிஸிர்கான்** என்பவர் டில்லியைக் கைப்பற்றி, **சையத் வம்சத்தை** ஸ்தாபித்தார்.

வினுக்கள்:

1. முகம்மது துக்ளக்கின் மதியற்ற செயல்களில் ஏதாவது ஒன்றை விளக்குக.
2. முகம்மது துக்ளக்கிற்குக் கற்றறிந்த மூடர் என்ற இழி பெயர் தோன்றக் காரணம் யாது?
3. பிரோஜ்ஷாவைப் பற்றி ஓர் குறிப்பு எழுதுக.
4. தைமூரின் படையெழுச்சியைக் குறித்துச் சுருங்கக் கூறுக.

8. ஸையத் லோடி வம்சங்கள்

(கி. பி. 1413—1526)

I. ஸையத் வம்சம் (கி. பி. 1413—1451) : **ஸையத்கிஸிர்கான்** தாம் அடைந்த நாட்டைச் சீர்படுத்தும் முயற்சியிலேயே தமது காலம் முழுதும் கழித்து கி. பி. 1421-ல் சிரமமேலீட்டால் காலமானர். அவருக்குப் பின் 3 மன்னர்கள் கி. பி. 1451 வரை ஆண்டனர். அவர்களுடைய காலங்களில் நாட்டில் குழப்பம் பெருகியிருந்தது. ஆகவே பஞ்சாபிற்குக் கவர்னராயிருந்த **பலால் லோடி** என்பவர் கடைசி ஸையத் மன்னரான **அலாவுதீனை** கி. பி. 1451-ல் வென்று டில்லிக் கதிபதியானர்.

II. லோடி வம்சம் (கி. பி. 1451—1526) **லோடி அரசர்கள் :** லோடி வம்சம் 3-அரசர்களைக் கொண்டது. அவர்களுள் **சுல்தான் சிக்கந்தர்** என்பவரே மேன்மை மிக்கவர். தம்மால் இயன்றவரை அவர் ஒழுங்கையும், அமைதியையும் நிலவி, நாட்டிற்கு நன்மையை இயற்றப் பாடுபட்டார். ஆனல் அவருக்குப் பின் ஆண்ட இப்ரஹிம் லோடியினல் அவர் புரிந்த நற்செயல்கள் யாவும் பயனற்றவையாயின.

இப்ரஹிம் லோடியின் கொடுமையும் பாபரின் படையெடுப்பும் : இப்ரஹிம் லோடி ஜனங்களை வாட்டி வருத்தி அவர்கள்மீது வரிகளையும் சுமத்தினர். அவ்வாறு செய்தது குடிகளின் வெறுப்பைக் கிளப்பியது. பின்னும் நாட்டில் பல கலகங்களுக்கும் வழி வைத்தது. அவைகளுக்கிடையே, **பஞ்சாபை** ஆண்டுவந்த **தௌலத்கான் லோடி**, காபூல் மன்னரான **பாபரை**

டில்லியின் மீது படையெடுக்கத் தூண்டினார். பாபருக்கும் செழிப்புற்ற இந்தியாவைக் கைப்பற்ற வேண்டுமென்ற விருப்பம் முன்னமேயே இருந்து வந்தது. அதற்கேற்ப இந்தியாவினின்று அவருக்கு அழைப்பும் ஏற்படவே, கி. பி. 1506-ல், பாபர் நம் நாட்டின்மீது படையெடுத்தார். அவர் இப்ரஹிமினது பெரிய சேனையைப் **பானிபட்** என்னு மிடத்தில் தோற்கடித்து இப்ரஹிமையும் கொன்றார். இதுவே சரித்திரத்திற் பிரசித்தி பெற்ற **முதல் பானிபட் யுத்தம்** எனப்படும். பின்பு பாபர் **டில்லி**யையும் **ஆக்ரா**வையும் கைப்பற்றி **முகலாய ராஜ்யத்தை** இந்தியாவில் **ஸ்தாபித்தார்.**

வினாக்கள் :

1. ஸையத் வம்சத்தைப் பற்றி ஓர் குறிப்பு எழுதுக.
2. இப்ரஹிம் லோடியின் ஆட்சியைப் பற்றியாவது முதல் பானிபட் யுத்தத்தைப் பற்றியாவது வரைக.

9. பாமனி ராஜ்யம் (கி. பி. 1346—1489)

பாமனி ராஜ்யம் தோன்றிய விதம்: **முகம்மது துக்ளக்கி**னுடைய ஆட்சியின் அந்தியகாலத்தில் அவருடைய ராஜ்யத்தில் பலவிடங்களில் குழப்பம் உண்டாயிற்று. அச்சமயம் தெற்குப் பகுதியில் கலகம் ஒன்று எழுந்தது. அதை **ஜாபர்கான்** என்பவர் மிகத் திறமையுடன் அடக்கினார். அச்சமயம் துக்ளக்கின் அதிகாரம் தக்ஷிணத்தில் அழிந்திருந்ததுபற்றி, அங்குச் சுயேச்சையாக (கி. பி. 1346-ல்) ராஜ்ய மொன்றை ஸ்தாபித்தார். அதற்குப் **பாமனி ராஜ்யம்** எனப் பெயர் தோன்றியது.

பாமனி என்ற பெயர் :

அந்த ராஜ்யத்திற்குப் **பாமனி** என்ற பெயர் வரக் காரணம் யாது? பண்டைக் காலத்தில் பாரசீகத்தில் **பாமனி** என்ற வம்சம் வெகு சிறப்புடன் விளங்கி வந்தது. ஜாபர்கான் அவ் வம்சத்தைச் சேர்ந்தவர். அதனாலும், தக்ஷிணத்தில் தம்முடைய வம்சமும் அவ்வாறே புகழ் பெறவேண்டும் என்ற விருப்பத்தாலும், அவர் தம்மை **அலாவுதீன் பாமன்ஷா** என அழைத்துக்கொண்டார். அதை யொட்டி அவர் ஏற்படுத்திய இராஜ்யம் **பாமனி ராஜ்யம்** எனப் பெயர் பூண்டது. ஆரம்பத்தில் **குல்பர்கா** என்பது அதற்குத் தலைநகரா யிருந்தது. தற்பொழுது அது நிஜாம் ராஜ்யத்தைச் சேர்ந்த தோர் நகரமாகும்.

பாமனி மன்னர்கள்: பாமனி ராஜ்யம் 14 சுல்தான்களால் ஆட்சி புரியப்பட்டு வந்தது. 14-வது சுல்தானன **மாமூதுஷா** என்பவருடைய காலத்தில், (கி. பி. 1489-ல்) பாமனி ராஜ்யம் சிதைவுண்டு, **பீரார், பீடார், ஆமதுநகர், பீஜபூர், கோல்கொண்டா** என்ற ஐந்து தனி ராஜதானிகளாகப் பிரிந்தது. இவைகள் தனித் தனியே சொற்ப காலம் ஆளப்பட்டன. பின்னர் தோன்றிய மன்னர்களின் காலத்தில் இவை ஒவ்வொன்ருக முகலாய ராஜ்யத்துடன் இணைக்கப் பெற்றன.

முகம்மது கவான் (கி. பி. 1463—81) **:**

முகம்மது கவான் அயல் நாட்டினராயினும், இந்திய முகம்மதியர்களிடம் பட்சம் கொண்டு, பாமனியில் ராஜ்யபாரம் செவ்வனே நடைபெறும் வண்ணம்

உதவினர். இவருடைய தக்க மந்திராலோசனையின் பயனுய் ஆஸ்பத்திரிகளும், கலாசாலைகளும், அன்ன சத்திரங்களும் உண்டாயின. நீதி ஏற்றவாறு வழங்கப்பெற்றது. பாமனி ராஜ்யத்தின் பெருமை இவருடைய காலத்தில் மிக ஓங்கியது. ஆனல் பொருமையினல் இவர்பால் வெறுப்புற்ற சில பிரபுக்களின் துர்ப்போதனையை ஏற்றுச் சுல்தான், கி. பி. 1481-ல் இவரை அநீதியாகக் கொல்ல உத்தரவிட்டார்.

வினுக்கள் :

1. பாமனி ராஜ்யம் எவ்விதம் தோன்றியது ?

2. பாமனி ராஜ்யத்தின் முக்கியச் சுல்தான்களைக் குறிக்க. அவர்கள் எவ்வண்ணம் முக்கிய மானவர்கள் ?

3. பாமனி ராஜ்யத்திற்கு அப்பெயர் உதிக்கக் காரணம் யாது ?

4. முகம்மது கவானைப் பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

10. விஜய நகர ராஜ்யம் (கி. பி. 1336-1676)

விஜய நகர ராஜ்ய ஸ்தாபனம் : முகம்மது துக்ளக், **வாரங்கல்** என்ற இடத்தை எதிர்த்தபொழுது, அங்கிருந்து **ஹரிஹரர், புக்கர்** என்ற ராஜ வம்சத்தைச் சேர்ந்த இரு சகோதரர்கள் முகம்மதியர்களின் கைகளில் சிக்க மனமின்றித் தெற்கு நோக்கி வந்து, **ஹொய்ஸல மன்னரிடம்** வேலைக் கமர்ந்து, பின்னர் துங்கபத்திரை நதிக்கரையிலுள்ள **ஆனகொந்தி** என்ற இடத்திற்கு அதிபதியானர்கள். அச்சமயம் ஹொய்ஸல ராஜ்யமும் துக்ளக்கால் ஜெயிக்கப்படவே, ஆனகொந்தி சுயேச்சை யடைந்தது.



விஜயநகர பாமனி ராஜ்யங்கள்

இவ் விரு சகோதரர்களும், ஹிந்து ராஜ்யம் ஒன்றை ஸ்தாபிதம் செய்து, முகம்மதியர்களைத் தெற்கில் வரவொட்டாமல் தடுத்து, நாளுக்குநாள் நசித்துக்கொண்டு வரும் ஹிந்து மதத்திற்குப் போதிய ஆதரவு அளிக்கவேண்டும் என்ற தீவிர அபிலாஷை கொண்டிருந்தனர். அதற்கேற்ப இவர்களது மதாசாரியராகிய **வித்யாரண்யரும்** இவர்களைப் புதிதான நகர் ஒன்றைத் துங்கபத்திரை நதிக்கரையில் நிர்மாணிக்கத் தூண்டவே, இவர்கள் அவ்வாறே செய்து அந்நகருக்கு **வித்யாரண்யம்** என்ற பெயர் இட்டனர். பிறகு அது **விஜய நகரம்** என்ற பெயரை ஏற்றது.

விஜய நகரத்தின் பெருமையும், ராஜ வம்சங்களும்: வெகு சீக்கிரத்தில் விஜயநகர ராஜ்யம் விஸ்தீரணத்திலும், வளப்பத்திலும் பெருகித் தனக்கு நிகர் இல்லையென விளங்கலாயிற்று. **விஜயநகரம்** என்ற அதன் தலைநகரம் இயற்கைப் பாதுகாப்புகளைக் கொண்டு ஏழு உயர்ந்த மதில்களாற் சூழப்பெற்று, மிக்க செல்வத்தையும் எழிலையும் உடையதாயிருந்தது.

அது உன்னத ஸ்திதியிலிருக்குங்கால், அதைக் கண்ணுற்றோர், அதைப்போல் வேறு எந்நகரையும் கண்டதில்லை கேட்டதுமில்லை எனப் புகழ்ந்து கூறினர். அதன் கட்டிடங்கள் அழகாகவும், பெரியவையாயும், சிறந்த வேலைப்பாட்டைக் கொண்டவையாயு மிருந்தன. அதன் வியாபாரமும் பெருகி நின்றது. அயல் நாட்டினர் தினந்தோறும் வாணிப நிமித்தம் விஜய நகரத்திற்கு வருவதும் போவதுமாக இருந்தனர். இவ்விராஜ்யம் நான்கு வம்சத்தவர்களால் ஆளப்பட்டது.

முதல் வம்சம் (கி. பி. 1336—1486): விஜயநகரத்தை யாண்ட முதல் வம்சம் ஹரிஹரரது தகப்பனரின் பெயரை யேற்றுச் **சங்கம வம்சம்** என அழைக்கப் பெற்றது. அவ்வம்சத்து முதல் அரசர் **ஹரிஹரர்**. இரண்டாவது மன்னர் **புக்கர்**. இவர்களது காலத்தில் **விஜய நகர ராஜ்யம்** விஸ்தீரணத்தில் பெருகித் தெற்கில் **மதுரை வரையிலும்** பரவலாயிற்று. அதே சமயத்தில் பாமனி அரசர்களுடனும் போர் தொடங்கியது. இவ் விரு அரசர்களுக்குப் பின் நாட்டை ஆண்டவர்கள் பல ஹீனர்கள். ஆகவே கி. பி. 1486-ல் **சந்திரகிரி**க்கு அதிபதியான **நரசிங்கசாளுவர்** விஜயநகர மன்னரைச் சிங்காதனத்தினின்றும் அகற்றித் தாமே அரசரானுர்.

இரண்டாம் வம்சம் (கி. பி. 1486—1505): இரண்டாம் வம்சம் 19-வருடங்கள் வரை நீடித்திருந்தது. அதைச் சேர்ந்த மன்னர்கள், அவ்வம்ச ஸ்தாபகரும் அவருடைய குமாரருமே யாவர். அவ் வம்சத்திற்குச் **சாளுவ வம்சம்** என்ற பெயர் தோன்றியது.

மூன்றும் வம்சம் (கி. பி. 1505—1565): கி. பி. 1505-ல் **துளவ நரசிங்கர்** என்ற தளகர்த்தர் சாளுவ மன்னரைக் கொன்று பட்டமெய்தினுர். அவ் வம்சம் **துளவ வம்சம்** என்னும் பெயரைப் பூண்டது.

அவ் வம்சத்து மன்னர்களில் **கிருஷ்ணதேவ ராயரே** மேன்மை தங்கியவராவர். அவர் ஆற்றலும் பெருமையும் பொருந்தியவராதல்பற்றி அவரைக் குறித்து இங்கு ஆராய்தல் அவசியம் ஆகும்.

கிருஷ்ணதேவரது தோற்றமும் குணதிசயங்களும்: நரச நாய்க்கரது இரண்டாவது புதல்வரே **கிருஷ்ண தேவ ராயர்** ஆவர். அவரது உயர்ந்த உருவமும் விரிந்த

மார்பும் கண்ணியத் தோற்றமும் கம்பீரப் பார்வை யும் வசிகர வனப்பும் பார்த்தவர் மனத்தைப் பரவசப்

கிருஷ்ண தேவ ராயர்

படுத்தின. ஓர் உத்தம சீலனிடமும், ஓர் நீதி வேந்த னிடமும், ஓர் சுத்த வீரனிடமும் காணப்பெறும் அம் சங்கள் அனைத்தும் அவரிடம் ஒருங்கே அமைந்து, அவரது கீர்த்தியைப் பெரிதும் பெருக்கின.

கிருஷ்ண தேவரின் வெற்றிகள்: கிருஷ்ண தேவர் முதல் முதலாகப் **பீஜபூர்** சுல்தானுடன் போர் புரிந்து

ராய்ச்சூர், முட்கல் முதலான கோட்டைகளைப் பற்றினர். பின்பு **மைசூரின்** பெரும்பாகத்தை ஜெயித்தார். அதற்குப் பிறகு **தஞ்சாவூர், செஞ்சி, மதுரை** முதலிய இடங்களைப் பிடித்துத் தம் பிரதிநிதிகள் மூலம் அவற்றை ஆளச்செய்தார். மேலும் **ஓரிஸாவிலும்** சில கோட்டைகளைச் சொந்தமாக்கிக் கொண்டு, தம் ராஜ்யத்தின் வடகிழக் கெல்லையை **விசாகப் பட்டினம்** வரை பரப்பினர்.

கிருஷ்ண தேவர் கல்வியைப் பெருக்குதல்: **கிருஷ்ண தேவர்** ஒரு சிறந்த **கல்விமான்**. ஆகவே அவரது ஆட்சியில் **கல்வி** அபிவிருத்தி யடைந்து, பல புலவர்கள் ஆதரிக்கப்பட்டனர். **தமிழ், தெலுங்கு, ஸம்ஸ்கிருதம்**-இம் மூன்று பாஷைகளிலும் பாண்டித்தியம் மிகுந்தவர்களால் பல நூல்கள் இயற்றப்பட்டன. ஆயினும் தெலுங்கு தமது தாய்ப்பாஷை யானதின் நிமித்தம் வெகுவாகப் போற்றப்பட்டது. **திம்மன்ன, அலஸனி பெத்தன்ன** முதலான **அஷ்டதிக் கஜங்கள்** எனப் புகழ் பெற்ற எட்டு ஆந்திரக் கலைஞர் அவரது சபையை அலங்கரித்தனர்.

கிருஷ்ணதேவரது ஆட்சி: கிருஷ்ணதேவர் **சாளுவ திம்மரசு** அல்லது **அப்பாஜி** என்ற மந்திரியின் ஆலோசனையைக்கொண்டு மிக மேன்மையுடன் **ராஜ்ய பாரத்தை** நடத்தினர். அவரது காருண்யத்தாலும், தீவிரக் கண்காணிப்பாலும் மாகாணப் பிரதிநிதிகள் அவருடைய ஆஞ்ஞைகளுக்கு அடங்கி ஆட்சி புரிந்தனர். அவரது நற்குணங்களையு மேற்றனர். கிருஷ்ணதேவரது ராஜ்யத்தில் அமைதி நிலவிக் குற்றங்கள் குறைந்து, நீதி நேர்மையுடன் நிறுவப்பெற்றது. கிருஷ்ண தேவர்

தீவிர வைஷ்ணவரே யாயினும் மற்ற மதங்களிடை வெறுப்புக் கொள்ளவில்லை. அவருடைய ஆணையின் பேரில் தென்னிந்தியாவில் **பல கோபுரங்கள்** தக்க வேலைப்பாட்டுடன் எழுப்பப்பட்டன. மேலும் வியாபாரம் பெருகி, விவசாயம் விருத்தி யடைந்து ஜனங்கள் சுகமாக வாழ்ந்தனர்.

தலைக்கோட்டைச் சண்டை கி. பி. 1565: கிருஷ்ண தேவ ராயரின் மைந்தர் **அச்சுத ராயர்** அவர் கி. பி. 1530-லிருந்து 1542 வரை ஆண்டார். அவரது புதல்வர் **சதாசிவ ராயர்** எனப்படுவோர். ஆவர். அவருடைய காலத்தில் **ராம ராயர்** என்ற அமைச்சரும் அவருடைய இரு சகோதரர்களுமே ராஜ்ய பாரத்தை வகித்து வந்தனர். ராமராயர் கொடிய சுபாவமும், முகம்மதியர்களிடத்துத் துவேஷமும் உள்ளவர். முகம்மதியச் சுல்தான்கள் அவரால் தோற்கடிக்கப்பட்ட பொழுது, அவர்களுடைய பிரஜைகள் கடுமையான சிக்ஷைக்கும் பெருத்த அவமானத்திற்கும் உள்ளானார்கள். அதைக்கண்ட முகம்மதிய அரசர்கள் ஒன்றுகூடி ராம ராயரை கி. பி. 1565-ல் **தலைக் கோட்டை** என்னுமிடத்தில் எதிர்த்தார்கள். ஆரம்பத்தில் வெற்றி விஜய நகரச் சேனைக்கே உண்டாகும்போல் தோன்றிற்றாயினும், கடைசியில் முகம்மதியர்களே வென்றனர். ஹிந்துக்களது சேனை சின்னாபின்ன மாக்கப்பட்டது. பிறகு முகம்மதியர்கள் விஜய நகரத்திற்குட் புகுந்து சுமார் 5 மாத காலம் கொள்ளை யடித்தும், கட்டிடங்களை யிடித்தும், ஜனங்களைக் கொன்றும், பொருள்களைச் சூறையிட்டும் விஜய நகரத்தைப் பாழாக்கினர். தற்பொழுது **பெல்லாரி ஜில்லாவில்** உள்ள **ஹம்பி** என்ற

விடத்தில் காணப்பெறும் பாழடைந்த நகரமே விஜய நகரத்தின் சின்னங்களாகும்.



ஹம்பியில் காணப்படும் பாழடைந்த சின்னங்கள்

நான்காவது வம்சம்: தலைக்கோட்டை யுத்தத்திற்குப் பின் ராம ராயரின் சகோதரரான **திருமலை ராயர் அனந்தபுரம் ஜில்லாவிலுள்ள பெனுகொண்டா** என்பதைத் தலைநகராகக் கொண்டு, **அர வீடு** என்ற வம்சத்தை ஸ்தாபித்து விஜயநகர ராஜ்யத்தை ஆண்டார். ஆனால் வெகு சீக்கிரத்தில் **மைசூர், தஞ்சாவூர், மதுரை, திருச்சினுப்பள்ளி** முதலியவை சுயேச்சை யடைந்தன. பின்பு ஒரு கிளை வம்சம் **சந்திரகிரியில்** ஆளத் தொடங்கியது. அவ் வம்சத்தைச் சேர்ந்த **ஸ்ரீ ரங்கராயர்** என்றவரிட மிருந்துதான் ஆங்கிலேயர்கள் தற்பொழுது **சென்னைப் பட்டினம்** துலங்கும் கடற்கரையை விலைக்கு

வாங்கினார்கள். முகலாய மன்னர்களின் காலத்தில் இத்தனை தனி ராஜ்யங்களும் அவர்களது ஆளுகையின் கீழ் வந்தன.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 NOV 1942
MADRAS

வினாக்கள் :

1. வித்யாரண்யம் என்பது எது? அது எவ்வாறு உண்டாயிற்று?

2. கிருஷ்ணதேவ ராயரது ஆட்சியைப் பற்றியாவது அவர் கல்விக்கு ஆதரவு அளித்ததைப் பற்றியாவது விவரிக்க.

3. கிருஷ்ண தேவ ராயரின் வெற்றிகளைப் பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

4. தலைக் கோட்டைச் சண்டை எப்பொழுது நிகழ்ந்தது? அது எப்படி முக்கியமானது?

11. சித்தூர் ராஜபுத்திரர்கள்

மீவார் ராஜ்யம் : முகம்மது கோரி இந்தியாவின் மீது படையெடுத்து ஹிந்துஸ்தானத்தை ஜெயித்த பொழுது ராஜபுதனத்தில் புதிதாக ஸ்தாபிதமான ராஜ்யங்களில் **மீவார்** முக்கியமானதாகும். அதை கி. பி. எட்டாம் நூற்றாண்டில் **பாபா ராவல்** என்ற ராஜ புத்திர வீரர் தோன்றச்செய்தார். அவர் தம்மைச் **சூரிய குலத்தவர்** எனக் கூறிக்கொண்டார். அவர் கட்டிய **சித்தூர் கோட்டை** மிக்க வலிமை பொருந்தியதாயும், வனப்பைக் கொண்டதாயுமிருந்தது. அவர் நிலை நாட்டிய வம்சத்தில் அநேக மேன்மை தங்கிய மன்னர்கள் உதித்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் **மஹாராணா** என அழைக்கப்பட்டனர்.

ராணு பீம்ஸிங்: அலாவுதீன் ராஜ புத்திரர்களை யெதிர்த்த பொழுது, கி. பி. 1303-ல் அவர் சித்தூரை முற்றுகை யிட்டுக் கைப் பற்றினர் எனப் படித் தோம். கொஞ்ச காலம் அது, கில்ஜி வம்சத்தவர் வசம் இருந்து **ராணு ஹமீர்** என்பவரால் மீண்டும் ஜெயிக்கப்பட்டது.



ஜெய ஸ்தம்பம்

ராணுகும்பர் (கி.பி. 1419-1469): மீவாரை ஆண்ட ராணுக்களுள் **கும்பர்** என்பவரே பிரசித்தி பெற்றவர். அவருடைய காலத்தில்தான் மீவார் ராஜ்யம் **உன்னத நிலை**யை எய்தியதாகக் கூறப்படுகின்றது. அவர் சித்தூர்க் கோட்டையைப் பின்னும் வலிமையும், அழகும் பொருந்தியதாகச் செய்தார். அக்காலத்தில் மிகவும் பிரக்கியாதி பெற்ற ராஜ்யங்களான **மாளவம், கூர்ஜரம்** என்பனவற்றையும் ஜெயித்தார். பின்பு தமது வெற்றியைக் குறிக்கப் பெரிய **ஜெய ஸ்தம்பம்** ஒன்றையும் நாட்டுவித்தார்.

ராணு சங்கிராம ஸிங் (கி.பி. 1509-1528): சங்கிராம ஸிங் கரே பாபரைக் **கான்வாஹா** என்ற இடத்தில் எதிர்த்த வர். ஆனால் தோல்வியுற்று, இரண்டு வருடங்களுக்குப் பின்பு இறந்தார். பின்னர் **சித்தூர்** கி. பி. 1534ல் **கூர்ஜரத்தை ஆண்ட பகதூர் ஷா**வால் ஜெயிக்கப்பட்டது. ஆயினும் மீளவும் அது சுயேச்சை யடைந்தது.

ராணு உதயஸிங்கும், அவரது மைந்தரும்: மீவாரி னுடைய கஷ்டம் அத்துடன் ஒழியவில்லை. கி. பி. 1567-ல் அது மற்றொரு முறையும் **அக்பரால்** ஜெயிக் கப்பட்டது. அதன் காரணமாகக் கோட்டையினின் றும் தப்பியோடிய **உதயஸிங்** அரவல்லி மலை நடுவே **உதயபுரி** என்ற ஒரு புதிய தலைநகரை அமைத்துக் கொண்டு, ராஜ்ய பாரம் புரிந்தார். அவருக்குப் பின் உதயபுரியில் ஆண்ட அவரது மைந்தரான **ராணு பிர தாப் ஸிங்** கி. பி. 1579ல், அக்பரது தளகர்த்தரான **ராஜா மான்ஸிங்** என்பவரால் தோற்கடிக்கப்பட்டனரே யாயினும், வெகு சீக்கிரத்தில் தாம் இழந்த இடங் களைக் கைப்பற்றி, மற்ற பாகங்களையும் அடைந்தார். **பிரதாபஸிங்** என்ற பெயர் **அவருடைய பிரதாபத்திற்கு** மிகவும் **பொருந்தும்**.

வினாக்கள்:

1. எவருடைய காலத்தில் சித்தூர் உன்னத நிலையை எய்தியது? அவரைக் குறித்து ஒரு குறிப்பு எழுதுக.

2. ராணு பிரதாப ஸிங், ராணு சங்கிராம ஸிங் என் பவர்களைப் பற்றி உங்களுக்குத் தெரிந்தவற்றைக் கூறுக.

12. பாபர்

(கி. பி. 1526—1530)

பாபரின் பெற்ருேரும், குணங்களும்: தாயின் மரபிலும் தந்தையின் மரபிலும் பாபர் மேன்மை மிக்கவர். தந்தையின் வழியில் அவர், டில்லி ஜனங்களைத் திடுக்கிடச் செய்த **தைமூரின் சந்ததியில்** உதித்தவர். தாயின்

பாபர்

வழியில் மத்திய ஆசியாவையும் இதர நாடுகளையும் நடுங்குமாறு ஆட்டிவைத்த **சிங்கிஸ்கான்** என்னும் மங்கோலிய வீரரின் வம்சத்தவர். ஆனதுபற்றி அவ்விரு தீரர்களின் வீரமும், வன்மையும், விடா முயற்சியும் பாபரிடம் குடிகொள்ளலாயின. பின்னும் தயை, அன்பு, சங்கீதத்தில் தேர்ச்சி, துருக்கி, பாரசீக பாஷைகளில் கவியியற்றும் திறன் முதலியவையும் அவரிடத்தில் காணப்பெற்றன.

பாபருக்கு அவரது தந்தை இட்ட பெயர் **ஸஹிர் உதீன் முகம்மது** என்பதாகும். அவர் ஓர் சிங்கத்திற் கொப்பானவலிமையும், பெருந்தன்மையுந் தங்கியவ ராதல்பற்றி அவருக்குச் **சிங்கம்** எனப் பொருள் கொண்ட **பாபர்** என்ற புனைபெயரும் தோன்ற லாயிற்று.

பாபரின் இளமை: பாபர் கி. பி. 1483-ல் **உமர் ஷேக்** என்பவருக்குப் பிறந்தார். 11-வது வயதிலேயே தந்தையை இழந்தார். அது முதற்கொண்டே ராஜ்ய பாரத்தை வகித்துப் பல கஷ்டங்களுக் குள்ளானார். ஆனால் வெகு ஊக்கம் கொண்டவர். தமது மூதாதை யின் ராஜ்யத்தைக் கைப்பற்ற வெண்ணங்கொண்டு ஒன்றிரண்டு தடவைகளில் **ஸாமர்க்கண்டைத்** தாக்கிக் கைவசமாக்கிய போதிலும், பின்னர் அம்முயற்சியால் ஸாமர்க்கண்டையும் தமது ராஜ்யத்தையுமே இழந்து, சில வருடங்கள் நிற்க நிழலின்றித் தம் சிநேகிதர்களு டன் மலைகளிலும், காடுகளிலும் வசித்து வந்தார். அவ்வண்ணம் தங்கி வருங்கால் கி. பி. 1504-ல் **காபூலில்** பட்டத்தைக் குறித்த சண்டை யொன்று உண் டாகவே, பாபர் அதை உபயோகித்து, அந்நாட்டை ஜெயித்து, அங்குத் தமது ஆட்சியை நிலைநாட்டினார். பின்பு **காந்தஹாரையும்** ஜெயித்தார். நாளுக்கு நாள் அவரது ஆதிக்கமும், புகழும் அதிகரித்தன.

இந்தியாவை அடைய முயற்சிகளும், இந்தியாவினின்று அழைப்பும்: காபூலுக்கு மேற்கில் அமைந்திருந்த தம் முன்னோர்களின் ராஜ்யத்தைக் கைவசமாக்க இனி இயலாது என்று எண்ணிப் பாபர் கிழக்கில் தம் நாட் டைப்பரப்ப விருப்பங்கொண்டார். கி. பி. 1519 லிரு

ந்து இந்தியாவின் (மேற்கு) எல்லைப் புற நாடுகளைக் கைக்கொள்ள முயற்சித்தார். அதற் கேற்றாப்போல் கி. பி. 1525ல் பஞ்சாபிற்கு பிரதிநிதியா யிருந்த **தௌலத்கானும்**, இப்ராஹீம் லோடியின் மாமனாரான **அலாவுதீனும்**, டில்லியை எதிர்க்கும்படி பாபரைத் தூண்டினார்கள். அதுவே தக்க சமயமெனப் பாபரும் ஒரு சேனையைத் திரட்டி இப்ராஹீம் லோடியைத் தாக்கப் புறப்பட்டார்.

பானிபட் யுத்தமும் (கி. பி. 1526) முகலாய ஆட்சியின் ஆரம்பமும்: பானிபட் என்னுமிடத்தில் இப்ராஹீம் லோடி தமது பெரிய சேனையுடன் பாபரை எதிர்த்தார். பாபரின் சேனை சிறியதே யாயினும், இப்ரஹீமினிடத்திலில்லாத பீரங்கிகள் அவருக்கு உதவின. மேலும் **நுண்ணிய அறிவுடனும், தக்க யுத்த முறை**யைக் கையாண்டும் பாபர் புரிந்த சண்டை அவருக்கு **அரை நாளிலேயே** வெற்றியை யளித்தது. போர்க்களத்தில் இப்ராஹீம் கொல்லப்பட்டார். உடனே பாபர் **டில்லி**யையும், **ஆக்ரா**வையும் கைப்பற்றி, முடிசூடி, **முகலாய ஆட்சி**யை **இந்தியாவில்** தொடங்கலானார்.

ராஜபுத்திரர்களின் எதிர்ப்பு: ஆயினும் பாபருக்கு இந்திய ராஜ்யம் இவ்வொரு வெற்றியினாலேயே ஸ்திரப்படவில்லை. போரில் வல்லவர்களான ராஜபுத்திரர்களையும் அவர் வெல்லவேண்டிவந்தது. பாபர் இப்ரஹீமை எதிர்த்தபொழுது, டில்லியில் ஏற்பட்டிருந்த கொடுங்கோல் ஆட்சி ஒழியட்டும் என ராஜபுத்திரர்கள் அசிரத்தையா யிருந்தனர். ஆனால் பாபர் நம் நாட்டிலேயே நிலைத்துவிடவே, அவர்கள் ஒன்று கூடி மீவாருக் கதிபதியான **ராணா சங்கரை**த் தலைவரா

கக்கொண்டு பாபரைத் தாக்கச் சென்றனர். முதலில் **ஸிக்ரி** என்னுமிடத்தில் பாபரது சேனை பின்னடைந்து தோற்றது.

அதைக்கண்ட பாபர் மதுவினுல்தான் தமக்கும் தம் வீரர்கட்கும் வன்மை குன்றிவிட்டதென எண்ணித் தம் படைக்கெதிரே, தமது தங்கக் கோப்பைகளைப் போட்டுடைத்து இனித் தாம் மதுபானம் ஒருகாலும் செய்வதில்லையென விருதம் பூண்டார். மேலும் தம் சேனையிடம் மதவுணர்ச்சியைக் கிளப்பி, அப் போர் ஓர் மதப் போராகுமெனவும் உற்சாகத்தை யூட்டினர். ஆகவே ஸிக்ரியை யடுத்த **கான்வாஹா** என்னுமிடத்தில் நிகழ்ந்த மற்ருெரு சண்டையில் பாபரின் வீரர்கள் ஆவேசத்துடன் போரிட்டு ராஜ புத்திரர்களைத் தோற்கடித்தனர். பின்பு **சாந்திரி** என்னும் கோட்டை பிடிபட்டது. **மாளவமும்** பாபர் ஆளுகைக் குட்பட்டது.

ஆப்கானியர் எதிர்ப்பும், மற்ற நாடுகளை ஜெயித்தலும்: பாபருக்கு முன் ஆண்ட **ஆப்கானிய அரச வம்சத்தின ரும்** பாபர் டில்லியைக் கொள்ளையடித்துத் தம் நாடு திரும்பி விடுவாரென நம்பினர். அவ்வெண்ணம் வீணுகவே **பீஹார்** முதலான இடங்களில் அவர்கள் கலகங்களைக் கிளப்பினர். அதைக் கண்ட பாபர் அவர் களை, **கோக்ரா** என்னும் நதிக்கரையில் யெதிர்த்துத் தோற்கடித்தார். பின்பு அப் பிரதேசங்கள் அக்பர் வசமாயின.

ராஜ்ய விஸ்தீரணம்: இவ்வண்ணம் பாபரது ராஜ் யம் சிறுகச் சிறுகப் பரவி **டில்லி, ஆஜ்மீர், ராஜபுதனம்,**

ஜான்பூர், பீஹார், மாளவம், பஞ்சாப், காபூல், காந்தஹார் முதலான நாடுகளைக் கொள்ளலாயிற்று.

வினுக்கள் :

1. பாபரின் பெற்ருேர், ஆப்கானியர்களின் எதிர்ப்பு- இவைகளைப் பற்றிக் குறிப்புகள் எழுதுக.

2. முதற் பானிபட் சண்டையைப்பற்றி அல்லது ராஜ புத்திரர்களின் எதிர்ப்பைப் பற்றிச் சுருக்கிக் கூறுக.

3. பாபரின் ராஜ்ய விஸ்தீரணம், பாபரின் இளமை- இவைகளில் ஒன்றை விளக்குக.

13. ஹுமாயூன் (கி. பி. 1530—1556)

தொடக்கத்தில் ஹுமாயூனுக்கு உண்டான கஷ்டங்கள் : தமது 23-வது வயதில் **ஹுமாயூன்** பட்டத்திற்கு வந்தார். ஆட்சியின் தொடக்கத்தில் அவருக்குப் பல கஷ்டங்கள் நேர்ந்தன. அவருடைய தம்பியாகிய **காம்ரான், காபூல், காண்டஹார், பஞ்சாப்** முதலான நாடுகளை வழங்கப் பெற்றுராயினும், குரோத வெண்ணங்களைக் கொண்டு, ஹுமாயூனுக்கு உதவி புரிவதற்குப் பிரதியாக, அவரை ஹிம்சித்து வந்தான். **ஹிண்டால், அஸ்காரி** என்ற மற்ற இரு உடன்பிறந்தோரும் சகோதர வாஞ்சையற்று இருந்தனர்.

இவை இவ்வாருகக் கிழக்கில் **ஆப்கானியர்**களின் எதிர்ப்பு நீங்கியபாடில்லை. தெற்கில் **பகதூர்ஷா** சுற்றுப் புற நாடுகளை விழுங்கிவிடுவான் போலிருந்தது. நிற்க, ராஜ்யத்தில் அமைதியும், சீர்மையும் ஏற்படும் முன்னமேயே பாபர் இறந்துவிட்டபடியால் டில்லியையும்,

ஆக்ராவையும் தவிர, இதர இடங்களை ஹுமாயூன் புதிதாகவே ஜெயிப்பதுபோல் ஆயிற்று.

ஹுமாயூன்

ஹுமாயூனின் யுத்தங்கள் - (a) ஆப்கானிய எதிர்ப்பு : கி.பி. 1531-ல் பழைய ஆப்கானிய வம்சத்தைச் சேர்ந்த **சுல்தான் மாமூது** என்பவன் **ஜான்பூரைக்** கைப்பற்ற முயற்சித்தான். ஆனால் எளிதில் தோற்கடிக்கப்பட்டு, நாட்டிலிருந்து துரத்தவும் பட்டான். அதே சமயத்தில் படிப் படியாகப் பிரபலமடைந்து வந்த **ஷேர்கானும்** அடிபணிந்தான்.

(b) பகதூர்ஷாவை எதிர்த்தல்: (கி. பி. 1536) கி. பி. 1536-ல் ஹுமாயூன் **மாளவத்தையும், கூர்ஜரத்தையும்** ஆண்டுவந்த **பகதூர்ஷாவை** எதிர்க்கவேண்டி வந்தது. ஆகவே, தக்க யுத்த முஸ்தீப்புகளுடன் ஹுமாயூன் தெற்கு நோக்கிச் சென்றார். அவருக்கு எதிரே சண்டைசெய்ய வியலாமல் பகதூர்ஷா தோற்றுப் போய், **டையூ** என்னும் போர்த்துக்கீசியத் துறைமுகத்தில் ஓடி ஒளிந்துகொண்டார். அதைக்கண்ட ஹுமாயூன் 'எளிதில் நாம் வென்றுவிட்டோம்' என இறுமாந்து, போதிய அரசியல் ஏற்பாடுகள் ஒன்றையும் செய்யாமல் **டில்லி** திரும்பி

விட்டார். ஹுமாயூன் சென்றதுமே, பகதூர்ஷா மீண்டும் தம் நாடுகளுக்கு அரசரானார்.

(c) **ஷேர்கானுடன் போர்** (கி. பி. 1538—1540): கி. பி. 1538-ல், **ஸுர்** வம்சத்தைச் சேர்ந்த **ஷேர்கான்** என்ற ஆப்கானிய வீரர் **பீஹார், வங்காளம்** முதலியவற்றிற் கதிபதியாகி, **சுல்தான்** என்ற பட்டத்தையும் வகித்தார். அவரை அடக்கினாலன்றிக் கிழக்கு எல்லைப்புறம் பலப்படாது போலாயிற்று. ஆகவே ஹுமாயூன் ஷேர்கானை எதிர்த்துச் சென்றார். **சூனார்** என்ற கோட்டையைச் சிரம சாத்தியத்தின்பேரில் பிடித்துப் பின்பு வங்காளத்தினுட் புகுந்தார். அப்பொழுது பயந்து ஓடுவதுபோல் பாசாங்கு செய்து ஷேர்கான் ஹுமாயூனை உள்ளே செல்ல விடுத்து அவர் திரும்பி வரும் பாதைகளைத் தந்திரமாக அடைத்து விட்டார். ஹுமாயூனது சேனைக்கு உணவுப் பொருள்கள் எட்டாவண்ணமும், தடுத்துவிட்டார். இவை நீங்க மழை பொழியத் தொடங்கி, ஆறுகளில் பிரவாகமும் வர ஆரம்பித்தது. அதைக்கண்டு தம் நாடு திரும்பிய ஹுமாயூன் ஷேர்கானால் மறிக்கப் பெற்று, கி. பி. 1539-ல் பக்ஸாருக் கருகில், **சௌஸா** என்ற இடத்தில் முறியடிக்கப்பட்டார். அவருடைய சேனை சின்னாபின்னமாக்கப்பட்டது. அவரே, கங்கையிற் குதித்து நீந்தி உயிர் தப்பவேண்டியதாயிற்று.

அத் தோல்வி ஹுமாயூனது மனத்தை மிகவும் பாதிக்கவே, அவர் அடுத்த வருஷம் மீண்டும் ஷேர்கானைக் **கன்னோசி** என்னுமிடத்தில் தாக்கினார். மறுமுறையும் வெற்றி ஷேர்கானுக்கே கிடைத்தது. அதன் பயனாக ஹுமாயூன் தன் குடும்ப ஸகிதம் நாட்டை விட்டு அகலவேண்டியதாயிற்று.

பிறகு ஷெர்கான் டில்லியில் **ஷெர்ஷா** என்னும் பட்டத்துடன் முடி சூட்டிக்கொண்டார். அவர் ஏற்படுத்திய வம்சத்திற்கு **ஸுர் வம்சம்** எனப் பெயர் வழங்கலாயிற்று.

ஷெர்ஷாவின் ஆட்சி (கி. பி. 1540—1545): ஷெர்ஷாவின் ஆட்சி பல துறைகளிலும் பெருமை வாய்ந்ததா யிருந்தது. முதலில் அவர் **அமைதியை** நிறுவினார். பின்பு நியாயத்தைப் பாரபக்ஷமின்றி வழங்கினார். **விவசாயத்தை** விருத்தி செய்தார். பல நீண்ட சாலைகளை அமைத்தும், நாணயங்களை அச்சிட்டும், கைத் தொழில்களை அபிவிருத்தி செய்தும், உள்நாட்டு **வியாபாரத்தைப்** பெருக்கினார். நிலங்களை அளந்து, அவைகளின்மீது **ஏற்ற வரி**யையே விதித்தார். **குதிரைத் தபாலை**ச் சீர்திருத்தினார். **ராணுவமுறைகளில் ஏற்றச் சீர்திருத்தங்களை** உண்டாக்கினார். **அன்ன சத்திரங்கள்** கட்டிப் பிரயாணிகளுக்கு வசதிகளை யுண்டாக்கினார் அரசியல் சம்பந்தமான பல வேலைகளையும் தாமே நேரில் மேற் பார்வையிட்டு வந்தார்.

அக்பர் பிறத்தல்: ஷெர்ஷா டில்லியில் ஆண்டு வர, நாட்டைவிட் டகன்ற ஹுமாயூன் **சிந்து** தேசத்தவர்களால் உதவி மறுக்கப்பட்டு ராஜபுதனப் பாலைவனத்தில் அலைந்து திரிந்தார். அச்சமயம் **அமரக் கோட்டை** என்னு மிடத்தில் கி. பி. 1542-வருஷம் நவம்பர் மாதம் 23-ம் தேதியன்று, அவரது மனைவிகளில் ஒருவரான **ஹமீதா பீகம்** என்பாருக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. அக் குழந்தையே பின்னர் **அக்பர் மஹா சக்கரவர்த்தி** என்ற புகழ்பெற்றுத் துலங்கியது.

பாரசீகம் அடைதல்: ஓடித்திரிந்த ஹுமாயூன் தமது சகோதரர்களால் உதவி மறுக்கப்படவே, வேறு வழியின்றிப் **பலுசிஸ்தானம்** வழியாக கி. பி. 1544-ல் **பாரசீகம்** அடைந்து, அதை ஆண்டுவந்த **ஷா தாமஸ்ப்** என்ற மன்னரிடம் தஞ்சம் புகுந்தார். அவ்வேந்தரும் ஹுமாயூனை மரியாதையுடன் வரவேற்றுத் தம்மிடம் தங்கச் செய்தார்.

காந்தஹாரையும் காபூலையும் அடைதல்: பாரசீகம் சென்ற சில மாதங்கட்கெல்லாம் ஹுமாயூன் மீண்டும் தமது இந்திய ராஜ்யத்தை யடைய முயற்சித்தார். முதலாவதாகத் தமது சகோதரர்களின் ராஜ்யங்களைப் பெற விரும்பினர். அதற்கேற்பப் பாரசீக மன்னரும் ஹுமாயூன் தமக்குக் **காந்தஹாரை** வழங்குவதுடன், **ஷியர்** வகுப்பைச் சேருவதாயும் ஏற்றால் உதவி புரிவதாக வாக்களித்தார். ஹுமாயூன் அதற்கு இணங்கிப் பாரசீகச் சேனையைத் துணைகொண்டு முதலில் **அஸ்காரி**க்குச் சொந்தமான **காண்டஹாரை** கி. பி. 1545-ல் பிடித்துக்கொண்டார். அதே வருஷம் காம்ரானிடமிருந்து **காபூலை**யும் கைப்பற்றினர். அச்சமயம் பாரசீக மன்னர் இறந்தார். அதனால் ஹுமாயூன் அவருக்குத் தந்த வாக்கை நிறைவேற்றாமல் இருந்து விட்டார்.

மீண்டும் டில்லிச் சக்கரவர்த்தி யாதல்: இவ்வாறிருக்க கி. பி. 1545-ல், காலஞ்சென்ற ஷெர்ஷாவிற்குப் பின், டில்லி சாம்ராஜ்யத்தில் குழப்ப மேற்பட்டு, அது கி. பி. 1555-ல் அதிகரித்தது. அதுதான் தக்க சமயம் என ஓர்ந்து, ஹுமாயூன் தமது படையுடன் ஸிந்து நதியைக் கடந்து, **ஸர்ஹிந்து** என்ற விடத்தில்

தம்மை எதிர்த்து வந்த ஷெர்ஷாவின் சுற்றத்தாரான **ஸிக்கந்தர் ஸுர்** என்பவரைத் தோற்கடித்து விரட்டி யடித்து **டில்லி**யையும், **ஆக்ரா**வையும் அடைந்து, டில்லிப் பட்டத்தையும் எய்தினர்.

ஹுமாயூனின் முடிவு : ஆனல், இம்முறை ஹுமாயூன் நீடித்த காலம் ராஜ்யபாரம் வகிக்கவில்லை. சில மாதங்கள் கழிந்ததும் கி. பி. 1556-ல், ஒரு நாள் புஸ்தக சாலையின் மாடியினின்றும் கீழிறங்கி வருங்கால் அடி சருக்கி வீழ்ந்து திடீரென மாண்டார்.

வினுக்கள் :

1. ஹுமாயூனுக்கும், பகதூர் ஷாவிற்கும், அல்லது ஹுமாயூனுக்கும் ஷெர்கானுக்கும் இடையே நிகழ்ந்த போரை விவரிக்க.

2. ஹுமாயூனுக்குக் காந்தஹாரும், காபூலும் எவ்வாறு கிடைத்தன?

3. ஹுமாயூன் மீண்டும் டில்லியை யடைந்த தெங்ஙனம்?

4. அக்பரின் பிறப்பைப் பற்றி ஒரு குறிப்பு வரைக.

5. ஷெர்ஷாவின் ஆட்சியை விளக்குக.

14. அக்பர் மஹா சக்கரவர்த்தி
(கி. பி. 1556—1605)

1. **அக்பரின் இளமை :** அக்பர் கி. பி. 1542-ல் **அமரக்கோட்டை** என்னு மிடத்தில் தம் தந்தை நாடோடியாய்த் திரியும் காலை பிறந்தார் என முன்பே படித்தோம். அதற்குப் பின் அவர் குழந்தையா யிருக்குங்கால் தமது சிற்றப்பன் கைகளிற் சிக்கி

மிக்க அவஸ்தைக்கும், அபாயத்திற்கும் உள்ளானர். சில ஆண்டுகளுக்குப் பிறகு தமது தந்தையைச் சேர்ந்தாராயினும், பிதா கி. பி 1555 ல் இறந்தது பற்றி ஆட்சிப் பொறுப்பைச் சிறு வயதிலேயே அவர்

அக்பர்

ஏற்கவேண்டியதாயிற்று. ஆயினும் பிறப்பிலேயே வீரமும், தீரமும், சாமர்த்தியமும் பொருந்தியவரான தாலும், இயற்கையறிவைப் பரிபூரணமாய்ப் பெற்றிருந்ததாலும், தமது குருவும் அத்தையின் கணவருமான பைராம்கானின் உதவியைக் கொண்டிருந்த தாலும், அக்பர் தமக்கு நேரிட்ட கஷ்டங்களை வெகு எளிதில் போக்கிக்கொண்டார்.

அக்பர் பட்டம் பெறுதல் (கி. பி. 1556):—இரண்டாவது பானிபட் சண்டை) : அக்பர் தமது குருவுடன்

பஞ்சாபில் ஒரு கலகத்தை அடக்கச் சென்றிருந்த பொழுது திடீரென ஹுமாயூன் மரித்தார். அதைக் கேள்வியுற்ற பைராம்கான் உடனே டில்லிக்குச் செல்ல ஏற்பாடு செய்தார். ஆனால் அதற்குள்ளாகவே ஷெர்ஷாவின் சொந்தக்காரனான **முகம்மது அடில்ஷா**வின் ஹிந்து மந்திரியாகிய **ஹீமு** என்பவன் ஓர் பெருத்த சேனையுடன் **டில்லியையும், ஆக்ரா**வையும் பிடித்துக்கொண்டு, **விக்ரமஜித்** என்ற பட்டப் பெயருடன் தானே அரசன் எனப் பறை சாற்றுவித்தான். ஆனதுபற்றி அக்பர் அவனை முதலில் தோற்கடித்துத் தலைநகரைக் கைப்பற்ற வேண்டியதாயிற்று.

கி. பி. 1556-ல் **பானிபட்** என்னுமிடத்தில் இருவருக்கும் சண்டை நடந்தது. அதில் வெகு சிரமத்தின்பேரிலும், பைராம்கானின் பேருதவியைக் கொண்டும் அக்பர் ஜெயம் பெற்றார். எதிரியின் சிரம் கொய்யப்பெற்று டில்லியின் கோட்டைவாயிலில் நாட்டப் பெற்றது.

இந்த இரண்டாவது **பானிபட் சண்டை** இந்துதேச சரித்திரத்திலேயே மிக முக்கியமானது. இதில் அக்பர் தோற்றுப்போயிருந்தால் சரித்திரப் போக்கே முற்றிலும் மாறுபட்டிருக்கும். முகலாய ராஜ்யம் அழிந்துபட்டிருக்கும். நாடெங்கும் குழப்பம் மேலிட்டிருக்கும். அக்பருடைய ஆட்சியின் பயனை இந்தியா அடையாது போயிருக்கும். முகலாயக் கலைகள் விருத்தியடையாமல் நசித்திருக்கும்.

பிரதிநிதி பைராம்கானது ஆட்சி (கி.பி. 1556—1660): பட்டத்திற்கு வரும்பொழுது அக்பர் சிறு வயதினரானதுபற்றி அவருக்குப் பதிலாகப் **பைராம்கான்**

ராஜ்யபாரம் நடத்திவந்தார். அவர் எதிரிகளை யடக்கி, அமைதியை நிறுவிச் செவ்வனே ஆட்சி புரிந்தாராயினும், பிரபுக்களைத் துன்புறுத்தி, ஜனங்களை வருத்தித் **தாம்** என்ற மகத்துவத்தால் அக்பரையே மதிக்காமலிருந்தார். அது அரசரது மனதைப் புண்படுத்தியது. ஆகவே அவர் கி. பி. 1560-ல் ராஜரீகத்தைத் தாமே ஏற்றுக்கொண்டார். அதை விரும்பாத பைராம்கான் அக்பரை யெதிர்க்கத் துணிந்தார். ஆயினும் தயை நிறைந்த மன்னர் அவரைத் தமது குரு என்ற காரணத்தால் பெருந்தன்மையுடன் மன்னித்து **மெக்கா**விற்கு அனுப்பினார். ஆயினும் பயன் என்ன? வழியில் பைராம்கானது பல சத்துருக்களில் ஒருவன் அவரைக் கொன்றான்.

அக்பரது ஆப்கானிய எதிரிகள் ஒழிதல்: பைராம்கான் தேச போஷகரா யிருந்தபொழுது ஆப்கானிய எதிர்ப்பு முற்றிலும் போக்கப்பட்டது. **ஸிக்கந்தர் ஸுர்** தோற்கடிக்கப்பட்டு, வங்காளத்தில் ஒரு சிறு மாகாணத்தை யடைந்தான். **முகம்மது அடில்ஷா** வங்காள ஸுல்தானுக் கெதிரே நிகழ்ந்த போரில் மடிந்தான். **குவாலியரும், ஆஜ்மீரும்** பிடிக்கப்பட்டன.

அக்பரது வெற்றிகள். அக்பர் அடைந்த வெற்றிகளை நான்கு பாகுபாடுகளின் மூலம் விவரமாய் அறிந்துகொள்ளலாம்.

(a) அக்பரும் ராஜபுத்திரர்களும் (கி. பி. 1564-1570): ராஜ புத்திரர்களிடம் அக்பர் வைத்திருந்த மதிப்பும், அவர்கள்பால் அவர் நடந்துகொண்ட விதமும் ஆழ்ந்த யோசனையைப் பொருந்தியவையா யிருந்தன. தாம் **இந்தியச் சக்கரவர்த்தி** யாக விளங்கவேண்டுமென்

ருல் ராஜபுத்திரர்களைத் தம் ஆதீனத்தை யேற்கச் செய்து அவர்களது நட்பை யடைந்து, அவ் வீர சிம்மங்களை வசியப்படுத்தினாலன்றித் தாம் கொண்ட எண்ணம் நிறைவேறாது என அக்பர் தெள்ளென அறிந்தார். ஆகவே அவர் ராஜ புத்திரர்களை அன்பாலும், உறவாலும், ஆதரவாலும், அவசியமேற்பட்ட பொழுது யுத்தத்தாலும் வெல்லக் கருதினார். கி. பி. 1561ல் அவர் **ஜெய்பூர்** அரசரான **பீஹார்மல்** என்பாரின் புதல்வியை மணந்து அவருடைய ஸ்நேகத்தைப் பெற்றார். பின்பு அதேபோல், **பிகனீர், ஜெய்ஸல்மீர்** ராஜபுத்திரிகளையும் விவாஹம் செய்துகொண்டார். இவை கி பி. 1564-க்குள் நிகழ்ந்தன. ஆனால் இவ் விவாஹங்களையும்,அக்பரின் ஆதிக்கத்தையும் ஏற்காத **சித்தூர்ராணா** கி.பி. 1567-ல் தீவிர முற்றுகைக்குள்ளாகி, ஒரு வருஷத்திற்குள் பிடிக்கப்பட்டார். அடுத்தபடியாக **ரான்தம்பூரும்** கைப்பற்றப்பட்டது. அதற்குப் பின் அக்பர் **ராஜபுதனத்தை** ஒரு தனி மாகாணமாக்கி, **ஆஜ்மீரை** அதற்குத் தலைநகராக்கினார். எனினும் சித்தூர் முற்றுகைக்குப் பின் புதிதாகத் தோன்றிய **உதயபுரி** என்னுமிடத்தில் **ராணா உதய ஸிங்கும், பிரதாப ஸிங்** என்ற அவரது குமாரரும் தங்களது சுயேச்சாதிகாரத்தை விடாது நாட்டி வந்தனர். ஆனால் கி. பி. 1576-ல் **பிரதாப ஸிங்** அக்பரது தளகர்த்தரான **ராஜாமான் ஸிங்**கால் ஜெயிக்கப்பட்டார். கி. பி. 1569-ல் **பண்டெல்கண்டும்** அக்பர் வசமாயிற்று.

(b) மற்ற வட இந்திய நாடுகள் ஜெயிக்கப்படுதல் (கி. பி. 1570-1580): பின்பு கி. பி. 1573-ல் **கூர்ஜரம்** ஜெயிக்கப்பெற்று மு க லா ய ஸாம்ராஜ்யத்துடன்

இணைக்கப்பெற்றது. அவ் வெற்றியால் போர்த்துக்கீசியர்களின் போக்கு வரவும், வியாபாரமும் பெருகின. இரண்டாண்டுகளுக்குப் பின் **வங்காளம்** அக்பருக்குச் சொந்தமாயிற்று. அடுத்த வருஷம் **பீஹாரும் ஓரிஸாவும்** அடி பணிந்தன. இவ்வாறு கி. பி. 1580-க்குள் **ஸிந்துவிலிருந்து வங்காளம்** வரையிலும், **காபூலிலிருந்து விந்தியமலை** வரையிலும் உள்ள பிரதேசங்கள் அனைத்தும் அக்பரின் அதிகாரத்தையேற்றன.

(c) **தலை நிமிர்ந்த நாடுகள் மீண்டும் அடக்கப் பெறுதல் (கி. பி. 1580-1595)**: மேற்கூறப்பட்டுள்ள வெற்றிகளை அக்பர் அடைந்தாரேயாயினும், சில வருடங்களுக்குப் பின் **காபூல், ஸிந்து, காஷ்மீரம், ஓரிஸா பலுசிஸ்தானம், காண்டஹார்** முதலியவை சுயேச்சை பெற முயன்றன. அந்நாடுகளை அக்பர் மீண்டும் எதிர்த்து அடக்கினார்.

(d) **தக்காண வெற்றிகள்** (கி. பி. 1595-1601): இவ்வண்ணம் **வட இந்திய நாடுகளை** ஸ்திரப்படுத்திக் கொண்டு அக்பர் தக்ஷிண ராஜ்யங்களைத் தாக்கத் தொடங்கினார். கி. பி. 1595-ல் **ஆமது நகரம்** முற்றுகையிடப்பட்டது. அப்பொழுது அந்நாட்டு இளவரசனின் அத்தையான **சாந்த் பிபி** என்ற பீஜபூர் ராணியவர்களின் ஆற்றலாலும் வீரத்தாலும் முற்றுகை தகர்க்கப்பட்டு ஆமத் நகரம் காக்கப்பட்டது. ஆனால் பின்னர் சாந்த்பிபி சில பொறாமை கொண்ட பிரபுக்களால் கொல்லப்படவே, ஆமது நகரம் திக்கற்றுத் திரும்பவும் அதை முற்றுகையிட்ட முகலாய சேனைக்கடிபணிந்தது. 1601-ல் **காண்டேஷ்** என்ற தேசமும் கைப்பற்றப்பட்டு, அதன் முக்கியக் கோட்டையாகிய

ஆஸீர்காரும் பிடிபட்டது. அதற்குப் பின் **காண்டேஷ், ஆமத்நகரம், ஆஸீர்கார்** என்றவை மூன்று தனி மாகாணங்களாகத் தொகுக்கப்பெற்றன.

இத் தக்ஷிண வெற்றிகளே அக்பரது கடைசி வெற்றிகளாகும். இவைகளால் அவரது ஆட்சிக்குட்பட்ட மாகாணங்கள் **பதினெட்டாகப்** பெருகின.

அக்பரின் நோக்கங்கள் : தம் ஆட்சியைச் சிறப்புற நடத்த வேண்டும் என அக்பர் விரும்பினராதல் பற்றி, ஓர் செங்கோல் மன்னருக் கேற்ற நோக்கங்களையும் முயற்சிகளையும் தம்மிடத்தே பெருக்கினார். தம் பிரஜைகளனைவரையும் பாரபக்ஷமின்றி நடத்த ஊக்கங்கொண்டார். நியாயத்தை நேர்மையுடன் வழங்க நோக்கங்கொண்டார். தீர்க்காலோசனைகளையேற்ற திட்டங்களை இயற்ற இச்சை கொண்டார். பரிபாலன முறையை ஏற்றவாறு அமைக்க ஆவல் கொண்டார். பல் கலையை விருத்தி செய்ய முயற்சி கொண்டார். மதச் சகிப்பைப் போக்க விருப்பங் கொண்டார்.

அக்பரின் அரசியல் முறை : அக்பரது அரசியல் திட்டங்களைச் சில முக்கியப் பாகுபாடுகளாகப் பிரித்துக் கற்றோமாகில் அதனுடைய விசேஷ அம்சங்களைத் தவறவிடாது கற்க இயலும். அதை இனி அறிய முயலுவோம்.

(a) **ராஜ்யப் பிரிவுகளும் ஆட்சியும் :** அக்பரது ஸாம்ராஜ்யம் 18 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. **மாகாணம்** ஜில்லாக்களாகவும், **ஜில்லா** மஹால்களாகவும், **மஹால், கிராமங்கள்** ஆகவும் பிரிக்கப்பட்டிருந்தன.


பெஷாவர்
காஷ்மீரம்
லாகூர்
முல்தான்
ஸர்ஹிந்த
பானிபட்
டில்லி
ஆக்ரா
ஸிந்துநதி
சிந்து
ஆஜ்மீர்
அமரக்கோட்டை
சித்தூர்
ஆமதாபாத்
கூர்ஜரம்
குவாலியர்
அலகாபாத்
காசி
அயோத்தி
பீஹார்
மாளவம்
காலிஞ்சர்
வங்காளம்
நர்மதை நதி
காந்தஷ்
ஆஸீர்கார்
ஒரிஸ்ஸா
தபதிநதி
மஹாநதி
ஆமதுநகரம்
பீரார்
கோதாவரி
பீடார்
கோலகொண்டா
பீஜபுரி
கிருஷ்ணா
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
மைசூர்
காவேரி
இந்து மஹா சமுத்திரம
ஸிலோன்

அக்பர் ஸாம்ராஜ்யம்

(b) **அரசரின் நேர் ஆட்சி**: அக்பர் எல்லைப்புற மாகாணங்களுக்கு நம்பிக்கையான பிரதிநிதிகளை நியமித்து, அவர்கள் நேர்மையுடன் ஆளுகின்றனரா என்பதைத் தாமே அவ்வப்பொழுது கண்காணித்து வந்தார். மேலும் தம்முடைய ஆட்சியைச் சீர்மை யுறும்படி செய்ய, அவர் அமைச்சர்கள் அடங்கிய **ஸபை** ஒன்றைக் கலந்து, அதன் தேர்ந்த யோசனையை யேற்று வந்தார். ஒவ்வொரு இலாகாவிற்கும் ஒவ் வொரு மந்திரியே தலைமை வகிக்கலானர்.

(c) **ராணுவச் சீர்திருத்தங்கள்**: அக்பரின் ராணுவச் சீர்திருத்தங்கள், ஷெர்ஷாவால் ஏற்படுத்தபட்டவை களைப் பொதுப் படையில் அனுசரிப்பனவாகும் வீரர் களும் அதிகாரிகளும் அரசரை ஏமாற்ரு வண்ணம் தகுந்த சீர்திருத்தங்கள் இயற்றப்பட்டன.

(d) **வரிகள்**: அக்பரது காலத்தில் பல வரி கள் வசூலிக்கப் படவில்லை. அவரால் கொள்ளப் பட்டவைகளில் **நிலவரி**யே முக்கியமானது. அவ் வரி ஒரு நிலத்தின் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டதாகும். நிலங்கள் **ராஜா தோடர்மால்** என்ற மந்திரியின் செவ்விய ஏற்பாட்டால் ஜாக்கிரதையாக அளக்கப்பட்டும், தரவாரியாகத் தொகுக்கப்பெற்றும் அவைகளின் பத்து வருட வருமானத்தின் சராசரி விகிதப்படி வரி விதிக்கப்பட்டும் வந்தன. அத்தொகை க்ஷாம காலங்களில் குறைக்கப்பெற்ரே, நிதானமாக வோ குடிகளிடமிருந்து வசூலிக்கப்பட்டது. மேலும் குடிகள் அந்நில வரியைத் தங்கள் சௌகரியத்திற்கேற் றவாறு **நாணயமாகவும் தானியமாகவும்** செலுத்தலாம்.

(e) **விவஸாயமும் வாணிபமும்** : **விவஸாயம்** விருத்தியடைந்தாலே **வாணிபம்** உயரும், நாடும் செழிக்கும் என்றதை அக்பர் நன்குணர்ந்தார். ஆகவே அவர் விவஸாயிகளுக்கு வேண்டிய வசதிகளை உண்டுபண்ணி அவசியமான காலங்களில் கடனும் தந்து உதவினர். வியாபாரத்திற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்யப்பட்டன. வெள்ளி நாணயங்களும் அச்சிடப்பட்டன.

(f) **அக்பரும் கலைகளும்**: ஒரு ராஜ்யத்தின் பெருமை வளர வேண்டுமானல், அதனிடத்துக் **கலைகள்** சிறந்து விளங்கவேண்டும். அவ்வுண்மையை யறிந்த அக்பர் அவைகளைப் பெரிதும் போற்றினர். கல்வியை பெருக்கப் பல வித்துவான்களை ஆதரித்தார். உதாரணமாக, **அபுல் பாஸல்** அக்பர் நாமா, அயினி அக்பரி என்ற புஸ்தகங்களை எழுதினர். அவை அக்பரைப் பற்றியும் அவரது அரசியலைப்பற்றியும் கூறுபவையாகும். **அபுல் பெய்ஸி** அநேக பாரசீகக் கவிகளை இயற்றினர். **துளசி தாஸர்** ஹிந்தியில் இராமாயணத்தை எழுதினர். அது இன்னும் சிறந்த நூலாகக் கருதப்படுகிறது.

அக்பர் **சிற்பத்தையும்** ஓங்கச் செய்தார். **பதேக்பூர் ஸிக்ரி** என்ற பட்டினமும் **ஹுமாயூன் ஸமாதியும்** அரசரது **தர்க்க மண்டபமும்** அக்காலத்துச் சிற்பிகளின் தேர்ச்சியை விளக்கின. **ஸங்கீதமும்** அக்பரது ஆதரவை அடைந்தது. **தான்ஸன்** என்றவர் ஸமஸ்தான வித்வானாக நியமிக்கப்பட்டார்.

(g) **அக்பரும் இந்துக்களும்** : இந்துக்கள் நிறைந்த தமது ஸாம்ராஜ்யத்தில் அவர்களை எவ்வண்ணமாகிலும் திருப்தி செய்தல் அவசியமாகும் என்ற விஷயத்தை அக்பர் அறிந்தார். ஆகவே அவர் இந்து சமூகச்

சீர்திருத்தங்களை யியற்றினர். இந்துக்களின்மீது விதிக்கப்பெற்ற **ஜஸியா**, (தலைவரி), **யாத்திரை வரி** போன்ற அநீதியான வரிகளை நீக்கினர். இந்துக்கள் மனதைப் புண்படுத்தக்கூடிய பழக்க வழக்கங்களையும் போக்கினர். பாரபக்ஷமின்றி ஆண்டார். இந்துக்களுக்கு உயர்ந்த உத்தியோகங்கள் வழங்கினர். உதாரணமாக **ராஜ மான்ஸிங்** சேனதிபதியாக நியமிக்கப்பட்டார். **ராஜா பகவன் தாஸ்** என்பாருக்குத் தளகர்த்தர் பதவி அளிக்கப்பட்டது. **ராஜா பீர்பால்** ஸமஸ்தான பண்டிதரும் விகட கவியும் தளகர்த்தருமாக வேலை பார்த்து வந்தார். மேலும் அக்பர் யுத்தத்தில் இந்துக்களை அடிமை கொள்ளவில்லை. அவர்களது மனதைப் புண்படுத்தக்கூடிய காரியம் எதுவும் செய்யவில்லை.

அக்பரும் மதமும்: முகம்மதியராயிருந்தும் மத விஷயத்திலும் அக்பர் பரந்த நோக்கத்தைக் கொண்டிருந்தார். ஒவ்வொரு மதமும் **பரமபதம்** பெறுவதற்கு உண்மை வழியைப் போதிக்கும் ஓர் உயர்ந்த ஸாதனம் என அவர் கொண்டார். அதனல் எல்லா மதத்தினரையும் வரவழைத்து, அவர்களைத் தமது தர்க்க மண்டபத்தில் உபந்நியஸிக்கச் செய்தார். அதன் பயனக கி. பி. 1582-ல் **தீன் இலாஹி** அல்லது **தேவமதம்** என்ற ஒரு புதிய மதத்தை ஸ்தாபித்தார். அது எல்லா மதங்களினுடைய முக்கியச் சமரஸக் கொள்கைகளை ஏற்ற ஒரு புதிய மதம் ஆகும். அது அக்பருடைய காலத்திலேயே ஒரு சிலரால்தான் பின்பற்றப்பட்டது. அவர் இறக்கவுமே அதுவும் அற்றது.

அக்பரது கடைசி நாட்கள் : தமது ஆற்றலின் காரணமாக அக்பர் **மஹா சக்கரவர்த்தி** என்ற பட்டம்

பெற்றனரே யாயினும், அவரது கடைசி நாட்கள் துக்ககரமானவை. **மூரத், தானியால்** என்ற இரு குமாரர்கள் இறந்தனர். அவருடைய மூத்த மைந்த ரான **ஸலீம்** அக்பருக் கெதிரே போர் தொடுத்துத் தாம்தான் **சக்கரவர்த்தி** எனப் பறை சாற்றுவித்தார். அக்பரின் ஆப்த நண்பரான **அபுல் ப்ாஸலேயும்** அவர் கொன்றார். இச்சம்பவங்களால் அக்பர் மனமுடைந்து வருந்தி கி. பி. 1605-ல் இறந்தார்.

வினுக்கள் :

1. அக்பரும், கலேயும், ஜன ஸமூக முன்னேற்றத் திட் டங்கள், இந்துக்களுடன் இணைப்பு, அக்பரும் மதமும்—இவை களில் ஏதாவது இரண்டினைப் பற்றிக் கூறுக.

2. அக்பருக்கு **மஹா சக்கரவர்த்தி** என்ற பட்டம் எவ்வாறு பொருந்தும்?

3. பைராம்கானைப் பற்றி ஒரு குறிப்பு வரைக.

4. 2-வது பானிபட் யுத்தம் அல்லது தக்ஷிணப் படை யெழுச்சியைப் பற்றி விளக்குக.

15. ஜஹாங்கீர் (கி. பி. 1605—1627)

ஜஹாங்கீரின் குணாதிசயங்கள்: அக்பர் கி. பி. 1605-ல் இறக்கவும், அவரது மூத்த குமாரர் **ஸலீம் ஜஹாங்கீர்** என்ற பட்டப் பெயருடன் சிங்காதன மேறினார்.

ஜஹாங்கீர் நல்ல சுபாவமுள்ளவர். அக்பரைப் போலவே அவரும் ஹிந்துக்களைப் பிரியமாக நடத்தினார். உதார குணம் அவரிடத்தில் மிகுந்து விளங்கியது. ராஜ்யத்தைச் செவ்வனே ஆளவேண்டும் என்ற ஊக்கமும் நிறைந்திருந்தது. பிரஜைகளிடத்து அன்பும் பெருகி நின்றது. ஆனால் சிற்சில சமயங்களில் கொடூர சுபாவத்தையும் வெளிப்படுத்தினார். மேலும் மதுபானத்தில் மூழ்கி, அடிக்கொரு தடவை தம் நினைவற்றுக் கிடந்தார். அவருக்கு மனைவியர் பலர்.

ஜஹாங்கீரின் ஆட்சி: ஒன்றிரண்டு விஷயங்களைத் தவிர, ஜஹாங்கீரது ஆட்சி விசேஷம் பொருந்தியதாயில்லை. அதைப்பற்றி இங்குச் சுருங்கக் கற்போம்.

(a) சுய ஆட்சி (கி. பி. 1605—1611):

ஜஹாங்கீர் தாமே ஆட்சி புரியும்பொழுது, இரண்டு முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்தன.

குஸ்ருவின் கலகம்: (கி. பி. 1506)

கி. பி. 1666-ல் ஜஹாங்கீரின் மூத்தகுமாரன் **குஸ்ரூ** என்பவன் **பஞ்சாபில்** பட்டத்திற்காகத் தந்தைக்கெதிரே போர் தொடுத்தான். ஆனால் எளிதில் வெல்லப்பட்டுக் கண்களை இழந்து சிறையில் அடைபட்டான். பின்னர் சுமார் 1622-ல் ஜஹாங்கீரின் மூன்றாவது குமாரனான **குர்ரம்** என்பவனால் அவன் இரகசியமாகக் கொல்லப் பட்டான்.

ஆங்கிலேயர் வியாபார உரிமை பெறுதல்:

ஆங்கிலேயர் ஜஹாங்கீரின் ஆட்சியின் பொழுதுதான் அவரிடமிருந்து, இந்தியாவுடன் வியாபாரம் செய்ய உரிமை பெற முயற்சித்தனர். கி. பி. 1608-ல் **ஸர் ஜான் ஹாகின்ஸ்** என்ற ஒரு ஆங்கிலக் கப்பற்றலைவன் வியாபாரச் சுதந்திரத்தைப் பெற விரும்பி ஜஹாங்கீரது தலைநகரில் மூன்று வருடங்கள் தங்கி மிக முயன்றான். ஆனால் **போர்த்துகீசியரின் போதனை**யால் ஜஹாங்கீர் ஆங்கிலேயருக்கு வியாபார உரிமை வழங்க இசையவில்லை. ஆயினும் கி. பி. 1615-ல் இங்கிலாந்து மன்னரான முதலாம் ஜேம்ஸால் அனுப்பப்பட்ட ராயபாரி, **ஸர் தாமஸ் ரோ** என்பவர் ஜஹாங்கீரின் ஸமஸ்தானத்தை யடைந்து, 3-வருஷ காலம் அவருடன் நெருங்கிப் பழகி, இறுதியில் அவரிடமிருந்து **ஸூரத்** முதலான ஸ்தலங்களில் பண்டக சாலைகள் கட்டிக்கொள்ளவும், சிற்சில இடங்களில் வியாபாரம் செய்யவும் உரிமை பெற்றுத் தம் நாடு திரும்பினார். இதுவே பின்னர் பிரபலமாக ஓங்கி வளர்ந்த ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு ஆரம்பம் ஆகும்.

(b) நூர்ஜஹானின் ஆட்சி (கி. பி. 1611—1622):

i. **நூர்ஜஹானின் முந்திய சரித்திரம்**: அக்பர் ஆட்சி புரியும் கால், அவரது ராணியாரின் தாதிகளில் ஒருத்திக்கு **மெஹர் உன் னிஸா** என்ற அழகிற் சிறந்த கன்னி ஒருத்தி இருந்தாள். ஓர்நாள் **ஸலீம்** அக்காரிகையின் எழிலைக்கண்டு கருத்தழிந்தார். அதை அறிந்த அக்பர் அவளை **ஷெர் ஆப்கன்** என்றவனுக்கு மணம்

செய்வித்து, அவனுக்கு **பர்துவான்** என்ற இடத்தில் ஒரு ஜாகீரை வழங்கி, அவனுடன் அப் பெண்மணி யையும் அனுப்பிவிட்டார். ஆயினும் தாம் பட்டத் திற்கு வந்த கொஞ்ச காலத்திற்கெல்லாம் ஜஹாங்கீர்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28NOV1942
MADRAS

நூர்ஜஹான்

அவளது கணவனைத் தம் சூழ்ச்சிகளி லொன்றிற் சிக்கவைத்துக் கொன்று, அவளைத் தம்மிடம் வரச் செய்து, தம்மை கி. பி. 1611-ல் மணக்கும்படியும் செய்தார். அப்பொழுது அவளுக்கு **நூர்ஜஹான்** என்றும் **நூர்மஹால்** என்றும் பெயர்கள் இடப்பட் டன. அது முதற்கொண்டு ஜஹாங்கீர் அவளுடைய வலையிற் சிக்குண்டவராய், அவளுடைய சாமர்த்தி

யத்தைக் கண்டு மெச்சி, அவளையே ராஜ்யபாரம் வகிக்க விடுத்துத் தாம் சிற்றின்பத்தில் மூழ்கலானார்.

ii **நூர்ஜஹானின் ஆட்சி:** (கி. பி. 1611—1622): நூர்ஜஹானின் ஆட்சியானது திறன் வாய்ந்ததாயிருந்தது. ராணியார் தமது தந்தைக்கும், சகோதரருக்கும் உயர்ந்த உத்தியோகங்களை வழங்கி, அவர்களது உதவியைக்கொண்டும், யோசனையின் பேரிலும், ஆட்சியை நடத்தலானார். தாம் சிறுவயதில் ஏழையாயிருந்ததுபற்றி, எளியோருக்கும், திக்கற்றவருக்கும் தம்மால் கூடுமானவரை உபகாரஞ் செய்தார். நாட்டில் அமைதியை நிறுவி, ஜனங்களின் சுகத்தைப் பெருக்கி, அவர்களுடைய அன்பிற்குப் பாத்திரரானார். மேலும் **நியாயமணி** ஒன்றைக் கோட்டைவாயலிற் கட்டி நீதியைச் செவ்வனே வழங்கினார்.

அவருடைய ஆட்சியின் பொழுது மூன்று முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்தன. சுமார் 1612-ல் ஜஹாங்கீரை அலட்சியம் செய்துவந்த **வங்காள கவர்னர்** அடக்கப்பட்டார். கி. பி. 1614-ல் முகலாயச் சேனையைப் பல தடவைகளில் வென்ற, **அமர்ஸிங்** என்ற மீவார் நாட்டு ராணு, இளவரசர் **குர்ரம்** என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். அவ்வெற்றியை அடைந்ததற்காக ஜஹாங்கீர் தமது குமாரருக்கு **ஷா ஜஹான்** அல்லது **உலகத்திற்கு அரசர்** என்னும் பட்டப்பெயரை அளித்தார். பின்பு இரண்டு வருடங்களுக்கெல்லாம் ஆமத் நகரைச் சுயேச்சை யடையச்செய்த **மாலிக் ஆம்பர்** என்ற ஒரு **அபிஸீனிய வீரருக்கு** எதிரே ஷா ஜஹான் போர்தொடுத்தார். அவரை அடக்குவதற்குச் சுமார் நான்கு ஆண்டுகள் ஆயின. அடுத்த வரு

ஷம் **ஆமத் நகரம்** மறு முறையும் **முகலாயர் வசம்** வந்தது.

சதிகளும் கலகங்களும் (கி. பி. 1622—1627): கி. பி. 1622 லிருந்து 1627 வரை ஆட்சி செவ்வனே நடைபெறவில்லை. நாட்டில் குழப்பமும், கலகமுமே குடிகொண்டிருந்தன.

(a) **குர்ரத்தின் கலகம்**: சுமார் கி. பி. 1623ல் **தக்ஷிணத்தில் பிரதிநிதி**யாய் ஆண்டு வந்த **குர்ரம்** காண்டகாருக்குச் செல்லும்படி உத்திர விடப்பட்டார். **அதற்குக் காரணம் பின் வருமாறு**:

நூர்ஜஹானுக்கு முதற் கணவன் மூலம் ஒரு பெண் இருந்தாள். அவளை அவர் ஜஹாங்கீரின் கடைசி மைந்தனான **ஷாரியருக்கு** மணஞ் செய்வித்துத் தம் மாப்பிள்ளைக்கு ராஜ்யத்தைச் சித்திக்கச் செய்ய முயன்றார். அது கைகூட வேண்டுமாயின் சாமர்த்தியம் மிகுந்த குர்ரத்தை அப்புறப்படுத்த வேண்டியதவசியமாயிற்று. ஆகவே நூர்ஜஹான் **காண்டஹாருக்குச்** செல்ல குர்ரத்திற்குக் கட்டளையிட்டார். அதன் தத்துவத்தை யறிந்த குர்ரம் காண்டஹாருக்குப் போக மறுத்துக் கலகம் ஒன்றைக் கிளப்பினார். மூன்று வருடகாலம் அக் கலகம் நடந்து வந்தது. ஆனால் கடைசியில் குர்ரம் **மஹபத் கான்** என்ற தளகர்த்தனால் துரத்தப்பட்டு, **மாளவம்**, **தக்ஷிணம்**, **வங்காளம்** முதலான இடங்களுககு ஓடி ஒளிந்துகொண்டார்.

(b) **மஹபத்கானின் கலகம்** (கி. பி. 1626) **இது** இவ்வாறாக, ஜஹாங்கீரின் இரண்டாவது மைந்தனான **பார்விஸ்** என்பவனைச் சிங்காதனமேற்ற வேண்டு

மென்ற கருத்துக்கொண்டிருந்த மஹாபத்கான் மீதும் நூர்ஜஹானுக்கு வெறுப்பு உண்டாயது. அவனையும் சிறையிலடைப்பிக்க வேண்டுமென்று விரும்பி, ராணியார் குர்ரத்தைத் துரத்தியடித்துக் கொண்டிருந்த தளகர்த்தனைத் திடீரென அரசரைச் சந்திக்கக் கட்டளையிட்டார். இவ்வுத்திரவு ஏதோ சூழ்ச்சியைப் பொருத்ததாகுமென்று ஊகித்த மஹாபத்கான் எதிர்பாராத வண்ணம் ஜஹாங்கீரைக் கைதியாக்கினான். நூர்ஜஹான் உடனே தம் கணவரை மீட்பதற்கு முயன்றார். ஜஹாங்கீரும் சிறையினின்று தப்பினார். அதைக் கண்ட மஹாபத்கான் குர்ரத்துடன் சேர்ந்து கொண்டார். அது நிகழ்ந்த சில மாதங்கட்கெல்லாம் (கி. பி. 1627) ஜஹாங்கீர் இறந்தார்.

(c) **பட்டத்திற்குச் சண்டை:** உடனே நூர்ஜஹானின் சகோதரர் தமது மருமகனான குர்ரத்திற்குப் பட்டம் கட்ட முனைந்து, குஸ்ருவின் மைந்தனைத் தாற்காலிகமாகச் சிங்காதனத்திலேற்றிக் குர்ரத்திற்குச் செய்தியனுப்பினார். அவர் வந்தவுடனே, அவர் அச்சிறுவனை அரசபதவியினின்றும் நீக்கிக் குர்ரத்திற்கே முடிசூட்டினார்.

வினாக்கள்

(1) ஆங்கிலேயர் ஜஹாங்கீரைத்தேடி வந்தது எதற்கு? அவரிடமிருந்து என்ன பெற்றனர்?

(2) நூர்ஜஹானின் ஆட்சியைப்பற்றி ஓர் குறிப்பு வரைக,

(3) குர்ரம் ஏன் தமது தந்தைக்கெதிரே கலகம் செய்தார்?

(4) குர்ரத்திற்கு ஷாஜஹான் என்ற பெயர் எங்ஙனம் ஏற்பட்டது?

16. ஷாஜஹான்

(கி. பி. 1627 — 1658).

ஷாஜஹானின் குணம்:—புகழ்பெற்ற முகலாய மன்னர்களுள் ஷாஜஹான் ஒருவர். **அரசர் என்ற முறையில்** அவர் ஆட்சியை ஊக்கத்துடன் செலுத்தி, நியாயத்தைப் பாரபக்ஷமின்றி நிறுவி, சிக்ஷைகளைக் கொடியன வாக்கிக் குற்றங்களைக் குறைத்து, கல்வியைப்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28NOV1942
MADRAS

ஷாஜஹான்

பெருக்கி, சிற்பம் சித்திரம்போன்ற கலைகளுக்கு ஆதரவு அளித்துத் தேசத்தில் சுபிக்ஷம் குடிகொள்ளுமாறு, விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியனவற்றை விருத்தி செய்தார்.

அவருடைய **குணங்களை ஆராயுங்கால்**, தயை உதாரம், மதச்சகிப்பு, மதுபானத்தின்கண் வெறுப்பு, நியாய சிந்தனை, வீரம் முதலியவை அவரிடத்துச் சிறந்து விளங்கின. ஆனால் டாம்பிகத்தில் பிரியம் அதிகம். சில சமயங்களில், ஹிந்துக்களைக் கடுமையாக நடத்தினர். உதாரணமாக கி. பி. 1632ல் சுமார் எழுபது ஹிந்துக்கோயில்களை இடிக்கச்செய்து அவற்றை மீண்டும் கட்டக்கூடாது எனவும் திட்டம் செய்தார்.

பத்தினி யிடத்தில் அவரது பக்ஷம் எவ்வாறு யிருந்தது என்பதைக் கருதுமிடத்து, **ஷாஜானுக்கு இணை எவரும் இலர்** எனக் கூறுதல் மிகையாகாது. தம் மனைவி **மும்தாஜ் மஹால்** என்ற கட்டழகி உயிருடன் இருக்குங்கால் ஷாஜஹான் அவளிடத்தில் **அதிப்பிரேமை** கொண்டு, அவள் இறந்தபின், வருத்த மேலீட்டால் மறுமுறை விவாகம் செய்துகொள்வதில்லை எனப் பிரதிக்ஞை செய்துகொண்டார்.

பட்டத்தைப் பலப்படுத்துதல்:—இத்தகைய மன்னர் பட்டத்திற்கு வந்ததும், சுயநலத்தால் தூண்டப்பெற்றுத் தமது சகோதரர்களையும், குஸ்ருவின் குமாரனையும் கொன்று தமது **வார்சுரிமையைப் பலப்படுத்திக் கொண்டார்**. பின்பு **ஆமத் நகரத்தில்** கி. பி. 1628 லிருந்து 1631 வரைக் கலகத்தைக் கிளப்பிவந்த ஆப்கானிய அரச வம்சத்தைச் சேர்ந்த **கான் ஜஹான் லோடி** என்பவனைத் தோற்கடித்தார். இவ் வெதிர்ப்பு ஒழிந்ததுமே ஷாஜஹானுக்குப் பட்டத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ளும் கவலை நீங்கிற்று.

யுத்தங்கள் :

(a) **தக்ஷிண வெற்றிகள் :**—இளவரசரா யிருக்கும் பொழுதே **ஷா ஜஹான் ராஜ புதனத்திலும், ஆமத் நகரத்திலும்** பெருமை மிக்க வெற்றிகள் அடைந்தார் எனப் படித்தோம். தாம் பட்டம் அடைந்த பின் அவர் தக்ஷிணத்தில் இருந்த மற்ற நாடுகளையும் கைப் பற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். ஆகவே அவர் **ஆமத் நகரத்தை** 1632 ல் பலப்படுத்திக் கொண்டு **கோல்கொண்டா**வையும் அடிபணியச் செய்தார். பின்பு பீஜபூரும் முகலாய அதிகாரத்திற் குட் பட்டது. கடைசியாக அம் மூன்று ராஜ்யங்களையும், ஏற்கனவே முகலாயர்களுக்குக் கட்டுப்பட்டிருந்த **காண்டேஷ், பீரார்** என்ற நாடுகளையும் ஒன்று சேர்த்து மூன்று மாகாணங்களாக்கி, ஔரங்கசீப்பை கி. பி. 1636 ல் அவைகளுக்குப் பிரதிநிதியாக்கினர்.

(b) **எல்லைப்புற வெற்றிகள் :**—அடுத்தபடியாக ஷா ஜஹான் **பதக்ஷான், பால்க்** என்ற மலை நாடுகளைப் பிடிக்க ஆயத்தம் செய்தார். அம் முயற்சியிலும் ஷா ஜஹானுக்கே வெற்றி கிடைத்தது.

(c) **ஒரு தோல்வி :**-ஆனால் **பாரசீகம், துருக்கி ஸ்தானம்** முதலிய இடங்களுக்குச் செல்ல மிக உபயோக மாயிருந்த **காண்டஹாரைக்** கைப்பற்ற வேண்டும் என்ற பிரயத்தனம் மட்டிலும் **வீணாயிற்று.**

ஷா ஜஹானது கட்டிடங்களும், ஆடம்பர வாழ்க்கையும் :—ஷா ஜஹான் ஓர் **கட்டிடப்பிரியர்.** கி. பி. 1631ல் இறந்துபட்ட தமது மனைவியின் கோரிக்கைக் கிணங்கி, **உலக அதிசயங்களில் ஒன்று** ஆனதும், சுமார் 30 லட்சம் ரூபாய் செலவின் பேரில் அமைக்கப்

பெற்றதுமான **தாஜ்மஹால்** என்ற கோரியைத் தமது மனைவியின் சமாதிக்குமேல் கட்டுவித்தார். அது வெள்ளைப் பளிங்குக் கற்களால் ஆக்கப்பட்டு, இன்று கட்டியதுபோல் இன்னும் துலங்குகிறது. அதன் உட்புறத்தில் பல நிறங்கள் கொண்ட பளிங்குக் கற்கள் உயர்ந்த வேலைப்பாடுடன் சுவர்களில் பதிக்கப் பெற்றிருக்கின்றன. நவரத்தினங்களும் இழைக்கப்பட் டிருக்கின்றன. **அக் கட்டிடத்தைக்கண்டு வியக்காதார் எவரும் இலர்.** அது ஆக்ராவில் **யமுனை நதிக்கரை யில்** அமையப் பெற்றிருக்கிறது.

பின்னும் ஷாஜஹானால் டில்லியில் கட்டப்பெற்ற **ஜும்மா மசூதியும்,** ஆக்ராவில் தோன்றிய **மோதி மசூதியும் திவானிகாஸ்** அல்லது **பூலோகச் சுவர்க்கம்**



தாஜ் மஹால்

என்ற பெயரைக் கொண்ட கொலு மண்டபமும், கண்ணைப் பறிக்கக்கூடியவையா யிருந்தன. அதே

போல் அவர் டில்லிக் கருகில் நிர்மாணித்த **ஷாஜஹாஞ பாத்** என்ற நகரமும் வனப்பு மிக்கதாயிருந்தது.

ஷாஜஹானது ஆடம்பர ஆட்சியை அவரது மற்ெருரு செயலும் குறிக்கிறது. அதாவது தாம் உட்கார்ந்து ராஜரீகம் செலுத்த ஒரு கோடி ரூபாய் செலவு செய்து மயிலாஸனம் ஒன்றை அவர் தயாரித்தார். அதைச் செய்விக்கச் சுமார் ஏழு வருடங்கள் பிடித்தன. அவ்வாஸனம், இரத்தின கசிதமான இரண்டு மயில்களை அமையப்பெற்று, அவைகளின் இடையே நவரத்தினங்களால் ஆக்கப்பட்ட ஒரு விருக்ஷத்தையும் கொண்டு, பார்ப்போர் மனத்தைப் பரவசப்படுத்தும் வண்ணம் ஜ்வலித்தது.

பட்டத்திற்காகப் போரும், ஷாஜஹானின் முடிவும்:— கி. பி. 1657 ல் ஷாஜஹான் ஒரு கொடிய நோயால் பீடிக்கப்பட்டார். அச்சமயம் அவரது மூத்த புதல்வரும் பஞ்சாபிற்குப் பிரதிநிதியுமான **தூரா** அவருடன் இருந்தார். ஷாஜஹானின் இரண்டாவது மைந்தரான **ஷுஜா** வங்காளத்திலும், மூன்றும் மைந்தரான **ஒளரங்கசீப்** தக்ஷிணத்திலும், கடைசிக் குமாரரான **மூரத்** கூர்ஜரத்திலும் இருந்தார்கள்.

தகப்பனாரின் வியாதியைப்பற்றிக் கேள்வியுற்ற ஒளரங்கசீப்பிற்கு ராஜ்யத்தைப்பெறவேண்டும் என்ற ஆசை பிறந்தது. ஆகவே மூரதை நயவஞ்சகமாகத் தம் வலைக்குட் சிக்கவைத்து, அவருக்கே பட்டத்தைச் சூட்டுவதாகப் பொய் வார்த்தைகூறி, அவரைத் தம்முடன் சேரச் செய்தார். பின்பு இருவருமாக டில்லிக்குச் சென்று **தூராவைத் தோற்கடித்து விரட்டினர்.** அடுத்தபடியாக **ஆக்ரா**வைக் கைப்பற்றி ஷாஜஹானை

அந்தப் புறத்தில் சிறை செய்தனர். பின்னர் தங்களை எதிர்த்துவந்த **ஷுஜாவைத்** தோற்கடித்து **அரகானுக்கு விரட்டி யடித்தார்கள்.** அங்கு அவர் **மடிந்தார்.** அதற்குப் பின் ஓர் நாள் ஔரங்கசிப் விருந்தொன்றைத் தயாரித்து **மூரத்தை** மிதமிஞ்சி குடிக்கச்செய்து, அவர் மதியிழந்து இருக்குங்காலை அவரைச் **சிறையிலிட்டார்.** கடைசியாக **தாராவையும்** பிடித்து மிக்க **அவமரியாதைக்குள்ளாக்கிக் கொன்றார்.** இவ்வனைத்தையும் செய்து முடித்தபின்னர் தாம்தான் அரசர் என **டில்லியில் முடிசூட்டிக் கொண்டார்.** கொஞ்சகாலத்திற்கெல்லாம் **மூரத்தும்** கொல்லப்பட்டார்.

நிற்க, ஷாஜஹானின் கதி என்ன வாயிற்று? அவர் எட்டுவருஷகாலம் **சிறையிலடைபட்டுக்** கிடந்து, அங்கேயே வருந்தி உயிர் நீத்தார்.

வினாக்கள்

(1) ஷாஜஹான் கட்டிய கட்டிடங்களில் மூன்றின் பெயர்களைக் குறிக்க.

(2) ஷாஜஹானின் கடைசிக் காலத்தில் எப்போர் நிகழ்ந்தது? எதற்காக? அதன் முடிவு என்ன?

(3) ஷாஜஹானது வெற்றிகளைப்பற்றி ஒரு குறிப்பு வரைக.

(4) ஷாஜஹானின் குணாதிசயங்களைக் குறித்துத் தெரிந்ததைக் கூறுக.

(5) தாஜ் மஹால் ஏன் கட்டப்பட்டது என்பதை விவரித்து அதைச் சுருக்கமாக வருணிக்க,

17. ஔரங்கசீப்

(கி. பி. 1658 — 1707)

ஔரங்கசீப்பின் நற்குணங்கள்: ஔரங்கசீப் பல நற்குணங்கள் படைத்தவர். கல்வி, கேள்விகளிற் சிறந்தவர். ஊக்கம், விடாமுயற்சி, கடமையிற் குன்ருமை, நீதி வழுவாமை, டாம்பீக மின்மை, மது பருகாமை, புலால் உண்ணுமை, முதலிய குணங்களை

ஔரங்கசீப்

ஒருங்கே பொருந்தியவர். தைரியம், வீரம், ராஜதந்திரம், குடிகளிடத்தன்பு, ஆகிய அம்சங்களையும் பெற்றவர். புத்தி கூர்மை மிக்கவர். பக்தி மிகுந்தவர். ஜெப, தப நிஷ்டைகளை விடாது கைக்கொள்பவர். **குர்ஆன்** அவருக்கு மனப்பாடம். சுய சம்பாதனையைக்

கொண்டே வாழ்க்கையை நடத்துபவர். உதாரண மாகக் குல்லாய் தைத்தும், குர் ஆனுக்குப் பிரதிகள் எழுதியும் பணம் சேர்த்து அதைக்கொண்டே தமது ஜீவனத்தை நடத்தினர்.

ஔரங்கசீப்பின் குறைகள்: ஆனல் ஔரங்கசீப் பிடம் சில குறைகளும் தென்பட்டன. அவநம்பிக்கை, பிடிவாதம், ஆடல் பாடல்களில் வெறுப்பு, மதத்துவே ஷம் முதலியன அவருக்குச் சத்துருக்களாகத் தோன்றி அவருடைய மேன்மையை முற்றிலும் மங்கச் செய்தன.

இந்துக்களிடத்துத் துவேஷம்: ஔரங்கசீப் யோ சனையின்றி இந்துக்களை வெறுத்தார். அவர்கள் மீது **ஜஸியா** போன்ற அனுவசிய வரிகளை விதித்தார். அவர் களது பள்ளிக்கூடங்களை இடித்துக் கோயில்களைத் தகர்த்து, உத்ஸவங்களைத் தடைசெய்து, அவர்களது தீராப்பகைக் காளானர்.

ராஜபுத்திரர்களை எதிர்த்தல்: அக்பரின் புகழ் ராஜ புத்திரர்களின் ஆற்றலினலும், ஆதரவினலேயுமே உண்டாயிற்றென்பதைச் சற்றுஞ் சிந்தியாது ஔரங்க சீப் அவர்களை எதிர்த்தார். **ஜோதிபுரியின் இளவரசர் களை முகம்மதியர்களாக்க** முயன்று ராஜபுத்திரர்களின் கோபத்தைப் பெருக்கினர். **மார்வார், மீவார்** முதலிய நாடுகளைப் பாழாக்கினர்.

சீக்கியர்கள்: **பஞ்சாப், லாகூர்** முதலிய இடங் களில் வசித்து வந்த சீக்கியர்களையும் ஔரங்கசீப் விரோதித்துக் கொண்டார். அவர்களுடைய குரு **தேஜ் பஹதூரைப்** பிடித்து முகம்மதியர் ஆகும்படி வற்புறுத்தினர். அதற்கிணங்காததால் அவரைச் சித்

திரவதை செய்து சீக்கியர்களின் சீற்றத்தை வளர்த் தார். ஆகவே அவர்கள் ஔரங்கசீப்பினிடம் மிக வெறுப்புற்று அவருடைய கஷ்டங்களைப் பலவழிகளி லும் அதிகரிக்கச் செய்தனர்.

தக்ஷிண முகம்மதிய நாடுகள் வெல்லப்படுதல்: தமது நாட்டின் விஸ்தீரணத்தைப் பெருக்கவேண்டுமென்ற நோக்கம் ஒரு புறமிருக்க, மஹாராஷ்டிரர்களின் உபத் திரவத்தைப் போக்கிக்கொள்ள வேண்டுமென்ற எண் ணத்தையும் ஏற்றவராய், ஔரங்கசீப், கி. பி. 1681ல் பெருத்த சேனையுடனும், தகுந்த முஸ்தீப்புக்களுட னும் தக்ஷிணத்தின் மீது படையெடுத்தார்.

முகம்மதிய நாடுகளை வெல்லுதல்: முதலாவதாக ஔரங்கசீப் தமது கவனத்தை முகம்மதிய நாடுகளின் மீது செலுத்தினர். கி. பி. 1686ல் **பீஜபூர்** ஔரங்க சீப்புக்குக் கட்டுப்பட்டது. பின்னர் **கோல்கொண்டா** வும் ஜெயிக்கப்பட்டது.

இனித் தாம் மஹாராஷ்டிரர்களைத் தம்மிஷ்டம் போல் தாக்கி வெல்லலாம் என நினைத்தார்.

மஹாராஷ்டிரர்களுடன் போராடுதல்: பீஜபூர், கோல் கொண்டா முதலிய ராஜ்யங்களைத் தோற்கடித்தது, **ஷெயிஸ்டாகானை** எளிதில் வென்றவர்களும், பேராற் றல் படைத்தவர்களுமான மஹாராஷ்டிரர்களுக்குக் குளிர் விட்டதுபோல் ஆயிற்று. தங்களுக்குத் தக்ஷி ணத்தில் தோன்றியிருந்த எதிர்ப்பு நீங்கியதால் அவர் கள் வருஷக்கணக்கில் ஔரங்கசீப்புடன் போராடி அவரைக் கடைசியாக வெல்லவும் சாத்தியமாயிற்று.

ஆனல் ஔரங்கசீப் மஹாராஷ்டிரர்களைத் தாக் கியபொழுது அவருக்கெதிரே சரிசமானமாய் நின்று

யுத்தஞ்செய்ய வல்ல **சிவாஜி** இல்லை. அவருடைய திறமையற்ற குமாரராகிய **சாம்பாஜியும்**, பேரராகிய **ஸாஹு**வுமே இருந்தார்கள். அவர்களிருவரும் ஓர் சண்டையில் சிறைபிடிக்கப்பட்டனர். சாம்பாஜி முகம்மதிய மதத்தைத் தழுவ மறுத்ததால் கொல்லப் பட்டார்.

அதற்குப் பின் நாட்டையாள **ராஜாராம்** என்ற சிவாஜியின் சகோதரர் நியமிக்கப்பட்டார். அவர் சிலகாலம் **மஹாராஷ்டிரத்திலும், ஜிஞ்சிக்கோட்டையிலும்** தங்கி, ஔரங்கசீப்பை எதிர்த்தார். ராஜாராம் காலமான பின்பு அவருடைய மனைவி **தாராபாய்** வெகு திறமையுடன் அமர் புரிந்தார். ஔரங்கசீப் அவருடைய எதிர்ப்பைப் போக்க முடியவில்லை.

ஔரங்கசீப்பின் தொல்லைகளும் முடிவும் : இதற்குள் பல வருடங்கள் கழிந்தன. ஔரங்கசீப்பிற்கும் மூப்பு அதிகரித்தது. சுமார் 20 வருடங்களாகியும் மஹராஷ்டிரர்களை வெல்ல இயலவில்லையே என்ற ஏக்கம் அவரை வாட்டி வருத்தியது. அத்துடன் அவருக்கு ஓர் வியாதியுங் கண்டது

மேலும் நெடுநாளாக ஔரங்கசீப் தமது ராஜதானியில் இல்லாததால், வட இந்தியாவில் ஆங்காங்குக் **கலகங்கள்** எழுந்தன. **சீக்கியர்களும், ராஜபுத்திரர்களும் ஸாத்நாமிகளும்** தீவிரமாக எதிர்க்கத் தொடங்கினர். தமது சொந்த உத்தியோகஸ்தர்களே ராஜபக்தியிலும், கடமையிலும் குன்றத் தலைப்பட்டனர். இந்நிகழ்ச்சிகள் ஔரங்கசீப்பின் வியாதியை அதிகமாக்கின. அவர் கி. பி. 1707ல் ஆமத் நகரில் காலமானார்.

வினுக்கள்

(1) ஒளரங்கசீப் மஹாராஷ்டிரர்களுக் கெதிரே நேரில் தொடுத்த போரைப் பற்றிச் சுருக்கிக் கூறுக.

(2) ஒளரங்கசீப்பின் நற்குணங்களை அல்லது அவரது குறைகளைக் குறிப்பிடுக.

(3) ஒளரங்கசீப் இந்துக்களைப் பகைத்துக்கொண்டது எவ்வண்ணம் ஓர் மதியீனச் செயலாகும்?

18. முகலாய ராஜ்ய க்ஷீணம்

பெருமை மிக்க முகலாய ராஜ்யம் க்ஷீணிக்கப் பல காரணங்கள் தோன்றின.

ஒளரங்கசீப்பின் மதியீனம்: ஒளரங்கசீப்பினது மதியீன ஆட்சியால் முகலாய ராஜ்யம் வெகு சீக்கிரத்தில் க்ஷீணிக்கத் தலைப்பட்டது. பரந்த சாம்ராஜ்யத்தை ஆளும் ஓர் சக்கரவர்த்தி தம் உத்தியோகஸ்தர்களை நம்பினுலேயே ராஜ்யபாரத்தைச் செவ்வனே நடத்த இயலும். அதற்கு மாருக ஒளரங்கசீப் ஒருவரிடமும் நம்பிக்கை வைக்காமல் தாமே சகல காரியங்களையும் கவனித்து வந்தார். அவ்வாறு செய்தது அவருக்கு அதிக சிரமத்தை உண்டாக்கியதுமன்னியில் அவருடைய கண்காணிப்பு இல்லாத சமயத்தில் ஒழுங்கின்மைக்கும் வழி வைத்தது.

பின்னும் இந்துக்களிடத்து அவர் கொண்ட பகைமை, அவருடைய ஆட்சியைப் பயன் பெருது செய்தது. ஏனெனில் இந்துக்கள் நிறைந்த சாம்ராஜ்யத்தில் இந்துக்களை விரோதித்துக் கொள்ளுதல் எத்துணைப் பயனைத் தரும்! அதிருப்திக்கும், கலகத்திற்கும் வழிவைக்கும் அன்ருே? மேலும் இருபத்

நூறு வருஷகாலம் ஔரங்கசீப் தலைநகரை விட்டுத் தக்ஷிணத்தில் காலங்கழித்தது ஓர் மதியற்ற செயலாய் முடிந்தது. ஒழுங்கு எவ்வளவு செம்மையாய் நாட்டப் பட்டபோதிலும்கூட நீண்ட காலம் தலை நகரை விட்டு அரசர் அகன்றிருத்தல் நாட்டில் கலகங்களை விளைவிக்கும் என்பது அனைவரும் அறிந்த விஷயம். அதேபோல் ஔரங்கசீப் தக்ஷிணத்தில் இருந்தபொழுது **சாதர்களும், சாத்னுமிகளும், சீக்கியர்களும், ராஜ புத்திரர்**களும் குழப்பத்தை உண்டுபண்ணினார்கள்.

பின்னும் அவர் தக்ஷிண முகம்மதிய ராஜ்யங்களை வென்றதும் மிகவும் யோசனை அற்ற காரியமாகும். மஹாராஷ்டிரர்கள் எட்டாக் கையிலிருந்துகொண்டு அவர்களுடைய அதிகாரத்தை நாளுக்குநாள் வளர்த்துக்கொண்டு வரும் வேளையிலே, அவர்களுடைய அதிகார வளர்ச்சிக்குத் தடையாயிருந்த முகம்மதிய மன்னர்களைக் கேவலம் **ஷியர்கள்** என்ற காரணத்தினால் தாக்கி அவர்களுடைய பகையை உண்டுபண்ணிக் கொண்டது எவ்வளவு மௌட்டிகம்! அவர்களை விரோதித்துக் கொண்டதே ஔரங்கசீப்பின் நீடித்த தக்ஷிணப் போருக்கும், தோல்விக்கும், ராஜ்ய க்ஷீணத்திற்கும் முக்கிய காரணமாயிற்று.

ஔரங்கசீப்பிற்குப் பின் ஆண்ட அரசர்களின் பலஹீனமும், சாமர்த்தியக் குறைவும்: ஔரங்கசீப்பிற்குப் பின் ஆட்சி புரிந்த எம் மன்னரும் திறமை வாய்ந்தவராயில்லை. அதனாலேயே நாடு க்ஷீணித்தது.

பஹதூர்ஷா *(கி. பி. 1707—1712)*: ஔரங்கசீப்பின் மூத்த குமாரர் **முவாஸாம்** என்பவர் **பஹதூர்ஷா** என்ற பட்டத்துடன் சிங்காதன மேறினார். அவர்

5 வருடங்கள் ஆட்சி புரிந்தார். அவருடைய காலத்தில் **சீக்கியர்கள் டில்லி** வரை கொள்ளையிட்டார்கள். அவர்களைச் சிரமசாத்தியத்தின் பேரிலேயே அடக்கச் சாத்தியமாயிற்று. **உதயபுரி, ஜோதிபுரி, ஜெயபுரி** முதலிய ராஜபுத்திர ராஜ்யங்கள் சுயேச்சை யடைந்தன. **ஸாஹு** சிறையினின்றும் விடுவிக்கப்பட்டு, **மஹாராஷ்டிர அரசர்** என ஏற்கப்பட்டார்.

பஹதூர்ஷா கி. பி. 1717 ல் இறந்தார்.

சையத் சகோதரர்கள் :—(1712—1720 கி. பி.): பஹதூர்ஷாவுக்குப் பின் முகம்மதுஷா பட்டம் பெறும் வரைச் சில அரசர்கள் ஆண்டார்கள். அவர்களில் ஒருவராவது ஆற்றல் வாய்ந்தவராயில்லை. அப்பொழுது **சையது சகோதரர்கள்** என்ற இரு பிரபுக்களே மன்னர்களைப் பட்டத்திலின்று நீக்கியும், அல்லது பட்டம் பெறச்செய்தும் தங்களுடைய அளவற்ற அதிகாரத்தைச் செலுத்தி வந்தனர். அவர்களை முகம்மதுஷா சமயம் பார்த்துக் கொன்று விட்டார்.

முகம்மது ஷாவும், நாதர்ஷா கொள்ளையும்:-முகம்மதுஷாவும் சக்தியற்றவர். அவருடைய காலத்தில் **அயோத்தி, வங்காளம், தக்ஷிண நாடுகள்** முதலியவை சுதந்திரம் அடைந்தன.

பின்னுமோர் சம்பவமும் நிகழ்ந்தது. கி. பி. 1739 ல் பாரசீக மன்னரான **நாதர் ஷா** என்றவர் டில்லியின் மீது படையெடுத்து வந்து, அந் நகைரக் கைப்பற்றி அங்குத் தங்கிவந்தார். அவரைத் தோற்கடித்துத் துரத்தவோ, நகரத்தை விட்டகற்றவோ முகம்மதுஷாவுக்குச் சக்தி இல்லை. இவ்வாறு இருக்குங்கால் நாதர் ஷா இறந்துவிட்டதாக ஒரு பொய்

வதந்தி கிளம்பியது. டில்லி ஜனங்கள் அதுதான் சமயமென அவரது சேனையை எதிர்த்துச் சிலரைக் கொன்றனர். அதைக்கண்டு வெகுண்ட நாதர்ஷா டில்லியைத் தாக்கி அந்நகர வாசிகளை வேட்டையாட உத்திரவிட்டார். அவரது படை இழைத்த துன்பத்திற்கும் அது இட்ட கொள்ளைக்கும் எல்லையே

நாதர்ஷா

இல்லை. எங்கு நோக்கிய போதிலும் எரியும் இல்லங்களும், கோவென்ற அழுகையும், ரத்தவெள்ளமும், பிணக்குவியலுமே. கடைசியாக, நாதர்ஷா கொள்ளை கொண்ட பொருள்களையெல்லாம் சேகரித்து, ஷாஜ

ஹானின் **மயிலாஸனத்துடனும், கோஹினூர்** என்னும் உலகத்திலேயே சிறந்த வைரத்துடனும் தம் நாடு திரும்பினர்.

முகம்மது ஷா கி. பி. 1748ல் இறந்தார்.

அஹமது ஷா: இவர் முஹம்மதுஷாவின் குமாரர். தம் தந்தையின் ஆட்சியின்பொழுது தொடங்கிய ராஜ்ய க்ஷீணம் அஹமதுஷாவின் காலத்தில் மிகவும் விரைந்து நிகழ்ந்தது. **மாளவம், கூர்ஜரம், பீரார், ஓரிஸா** முதலியன மஹாராஷ்டிரர்களுக்குக் கட்டுப்படலாயின. **ரோஹில்கண்டு** என்ற நாடு **ரோஹில்லர்கள்** என்னு மோர் முகம்மதியக் கூட்டத்தினற்குச் சொந்தமாயிற்று. **பஞ்சாப், சீக்கியர்** வசமாயிற்று. **சிந்து நதிக்கு** மேற்புறம் உள்ள நாடு **நாதர் ஷா**வால் பிடித்துக் கொள்ளப்பட்டது. தக்ஷிணத்தின் பெரும் பாகமாகிய **ஹைதராபாத், அஸப்ஷா** அல்லது **நிஜாம்-உல்-முல்க்** என்ற முகம்மதியத் தளகர்த்தரைத் தலைவராக ஏற்று ஓர் தனி ராஜ்யமாக மாறியது. கர்நாடகமோ, **அன்வாருதீன்** என்ற ஒரு சுயேச்சையான நவாபால் பரிபாலிக்கப்பட்டு வந்தது.

இவ்வளவு நாடுகளும் தனித் தனி மன்னர்களால் ஆளப்பட்டு வந்தன வென்றால், டில்லி சாம்ராஜ்யத்தில் மீந்ததுதான் என்ன? டில்லியும் அதைச்சுற்றியிருந்த சில இடங்களுமே.

ஷா ஆலம் (கி. பி. *1759 — 1806*):

(a) **ஷா ஆலமும் ஆங்கிலேயர்களும்**:-ஷா ஆலம் கி. பி. 1759ல் பட்டத்திற்கு வந்தார். அவர் பெயருக்கு மாத்திரமே **சக்கரவர்த்தி**. அவர் ஆரம்பத்தில்

ஆங்கிலேயர் வசம் இருந்து தம் அதிகாரத்தை யிழந் தார். பின்னர் மஹாராஷ்டிரர்களுடன் சேர்ந்து டில்லியைப் போக்கிக்கொண்டு, ரோஹில்ல வீரனான **குலாம் காதர்** என்பவனால் தம் கண்களையு மிழந்தார். அதற்குப்பின் டில்லி ஆங்கிலேயர்கள் வசமாகவே ஷா ஆலம் மீண்டும் அவர்கள் கைகளிற் சிக்கினார். அவர் கி. பி. 1806ல் உயிர் துறந்தார்.

(b) **ஆமது ஷா துரானியின் கொள்ளை**:—கி. பி. 1761ல் அதாவது ஷா ஆலம் பட்டத்திற்கு வந்த இரண்டு வருடங்களுக் கெல்லாம் **ஆப்கானிஸ்தான மன்னன், ஆமது ஷா துரானி** என்பவன் இந்தியாவின் மீது படையெடுத்து, கி. பி. 1761ல் **பானிபட்** என்ற இடத்தில் மஹாராஷ்டிரர்களை முறியடித்து டில்லி யைக் கொள்ளையிட்டான். அதுவே மூன்றும் பானி பட் யுத்தம் எனக் குறிக்கப்படும். டில்லியில் வசித்து வந்த ஜனங்களின் நிலை அதோகதி யாயிற்று.

முகலாயரது வம்சம் அற்றுப்போதல்:—ஷா ஆலத் திற்குப் பிறகு முகலாய வம்சம் வெகு விரைவில் க்ஷீணித்தது. **பஹதூர் ஷா**வே முகலாய வம்சத்துக் கடைசிச் **சக்கரவர்த்தி**. அவர் கி. பி. 1857ல் நடந்த சிப்பாய்க் கலகத்திற்குத் தலைவர் ஆக வரிக்கப்பட் டார். அதன் காரணமாய், அக் கலகம் அடக்கப் பட்டதுமே, அவர் **ரங்கூனுக்கு** அனுப்பப்பட்டார். அங்கே அவர் கி. பி. 1862ல் இறந்தார். மேலும் அக்கலகத்திற் கலந்து கொண்டதற்காக அவரது இரு குமாரர்களும் தூக்கிலிடப்பட்டனர். அத்துடன் **முகலாய வம்சம்** அழிவுற்றது.

முகலாய ராஜ்யம் க்ஷீணிக்கச் சில பொதுக் காரணங்கள்: இந்தியாவிற்கு வருவதற்கு முன் முகலாயர்கள் குளிர்ச்சி மிகுந்த மலைப் பிரதேசங்களில் வசித்து வந்தவர்கள். அன்னவர்கள் உஷ்ணம் பெருகிய இந்தியாவில் வசித்து வந்ததால் தங்களுடைய பலத்தில் குன்றினார்கள். மேலும் இந்தியா வளப்பத்தில் சிறந்த நாடாதல் பற்றி, முகலாயர்கள் சுகத்தையே நாடி, விடா முயற்சியை முற்றிலும் போக்கிக்கொண்டனர். நிற்க நாதர்ஷா, ஆமதுஷா துரானி என்பவர்களின் படையெழுச்சிகள் சாம்ராஜ்யத்தின் நிலையைக் குலைத்தன. சுற்றுப்புற மாகாணங்கள் சுயேச்சையை நாட்டின. ஆங்கிலேயரின் அதிகாரப் பெருக்கும் முகலாயரின் க்ஷீணத்தை வளரச் செய்தது.

வினாக்கள்

(1) ஔரங்கசீப்பின் மதியற்ற ஆட்சி முகலாய ராஜ்ய க்ஷீணத்திற்கு அடிகோலிற்று எனக் கூறுதல் எத்துணை பொருந்தும்?

(2) முகலாய ராஜ்ய க்ஷீணத்திற்குப் பொதுப்படையான காரணங்கள் சிலவற்றைக் குறிக்க.

(3) முகம்மது ஷா அல்லது ஷா ஆலம் என்பவரைக் குறித்து ஒரு குறிப்பு வரைக.

(4) நாதர் ஷா, அல்லது ஆமதுஷா துரானியின் கொள்ளையைப் பற்றிச் சுருக்கி எழுதுக.

19. மஹாராஷ்டிரர்களின் சரித்திரம்

A. மஹாராஷ்டிரர்கள்

பூர்வீக நாடு: மஹாராஷ்டிரர்களின் ஆதி வாசஸ்தலம் வடக்கே **சூரத்திலிருந்து** தெற்கே **கோவா** வரையிலுமுள்ள கடற்கரைப் பிரதேசமும், மேற்கு மலைத்தொடரில் காணப்பெறும் கிராமங்களும் ஆகும்.

சிவாஜிக்கு முன் மஹாராஷ்டிரர்களது நிலை:—ஆரம்பத்தில் மஹாராஷ்டிரர்கள் கூட்டங் கூட்டங்களாகப் பிரிந்து வாழ்ந்து வந்தனர். அவர்களுக் கிடையே அடிக்கடிச் சண்டைகள் நிகழ்ந்து வந்தன. அண்டை அயல் நாடுகளைக் கொள்ளை யடித்தல் அவர்களுடைய ஜீவனோபாயங்களில் ஒன்றாயிருந்தது.

ஆனால் அவர்கள் பொது எதிரியின் முன் ஒன்று சேர்ந்தார்கள். மேலும் அவர்கள் ஒரே பாஷையைப் பேசி வந்ததாலும் ஒரேவித பழக்க வழக்கங்களைக் கைக் கொண்டிருந்ததாலும் அவர்களை ஒற்றுமைப் படுத்துதல் சுலபமான காரியமாயிருந்தது. அவர்கள் பால் அத் திவ்விய ஸேவையைப் புரிய **சிவாஜி** என்ற ஒரு ஆற்றல் அமைந்த அரசர் அவர்களிடையே அவதரித்தார்.

B. சிவாஜி மஹராஜ்

சிவாஜியின் பெற்றோரும் இளமையும்: (கி. பி. 1627 லே, **சீவனேர்** என்னும் கோட்டையிலே, **பான்ஸ்லே** என்னும் மஹாராஷ்டிர வம்சத்திலே உதித்த **ஷாஜி** என்ற பீஜபூர் தளகர்த்தருக்கும் **ஜீஜிபாய்** என்ற மாது சிரோமணிக்கும் ஓர் ஆண் மகவு பிறந்தது. **"விளையும் பயிர் முளையிலே"** என்பது

போல் அச்சிறுவர், இளவயதில், ராஜ தேஜஸையும், யுத்தத்தில் அரிய தேர்ச்சியையும், உயரிய குணங்களை யும் உன்னத லக்ஷியங்களையுங் கொண்டு மேம்பட விளங்கினார். அது எவ்வாறு சாத்திய மாயிற்றெனின், அவரது தாய் அவரிடத்தே வேரூன்றச் செய்த உயர்ந்த எண்ணங்களாலேயும், அவருடைய அந்த ணக் குரு தாதாஜீ கொண்ட தேவர் அவருக்குப் பயிற்று வித்த யுத்தப் பயிற்சியாலேயும், துகாராம், ராம்தாஸ் என்ற மஹான்கள் அவருள்ளத்தே வளரச் செய்த சீலம், தயை, பக்தி, தேசாபிமானம், ஸமூக ஸேவை என்ற மேன்மைக் குணங்களாலேயுமாம்.

சிவாஜியின் நோக்கங்கள்: சிவாஜிக்குப் பாலியம் மாறியவுடன் தம் குருவாகிய ராம்தாஸ் தமக்குப் போதித்த வண்ணம் ஹிந்து தர்மத்தைக் கைக் கொள்ள வேண்டுமென்றும், தமது தேசத்தை மேன்மையுறச் செய்யவேண்டுமென்றும், தாம் மஹா ராஷ்டிர ராஜ்யத்திற் கதிபதியாகிச் செவ்வனே ஆட்சிபுரிய வேண்டுமென்றும் விருப்பங்கொண்டார். அதற்காக அவர் தமக்குச் சம வயதினரான பலரை ஒன்று கூட்டித் தக்கதோர் சேனையைத் திரட்டித் தம்முடன் அவர்களையும் தேச முன்னேற்றப் பணியில் ஈடுபடச் செய்தார்.

பீஜபூருடன் சண்டை: (a) எல்லைப்புறக் கோட்டை கள் பிடிபடல்: முதலில் பிற நாடுகளைத் தாக்கத் தமக் குப் போதிய சக்தி யுண்டாயிருக்கிறதா என்பதைப் பரீட்சிக்க, அண்டையிலிருந்த பீஜபூரின் எல்லைக் கோட்டைகளான புரந்தர், ராய்கார், தோர்ணு என்றவை களை சிவாஜி கைப்பற்ற முயன்றார். வெற்றி எளிதில்

கிடைத்தது. பின்னும் சில கோட்டைகள் சுலபமாக ஜெயிக்கப்பெற்றன.

(b) **அப்ஸல்கானது தோல்வியும் சிவாஜி கொங்கணம் பெறுதலும்:** அதற்குப் பின்பு பீஜபூருக்குச் சொந்தமான **கொங்கணம்** என்ற பிரதேசத்தையும் பிடிக்க வேண்டுமென்ற பேரவா சிவாஜிக்கு உண்டாயது. அதற்காக அவர் பீஜபூருடன் மீண்டும் யுத்தத்தைத் தொடுத்தார். மறுபடியும் பீஜபூர் சேனை முறியடிக்கப்படவே, அத்தேசத்துச் சுல்தான், **அப்ஸல் கான்** என்ற புகழ் மிக்க தளகர்த்தனொருவனை கி. பி. 1659ல் சிவாஜியை யெதிர்த்துப் போரிட அனுப்பினார். வஞ்சனையாய் சிவாஜியை இறுகத் தழுவித் தன் வாளுக்கிரையாக்குவதெனச் சதிசெய்து, ராஜி பேசுவதாகக்கூறித் தன்னிடம் அப்ஸல்கான் தனியே மஹாராஷ்டிர வீரரை வரவழைத்தான். எச் சூழ்ச்சிக்கும் தயாராயிருந்த சிவாஜி அச்சமயம் தாம் அணிந்திருந்த புலி நகங்களால் அவனைக் கொன்று வீழ்த்தினார். பெருத்த மேனியனான அஸல்கான் இடியால் வீழ்த்தப்பட்ட மரம்போல் சாய்ந்தான். அதற்குப்பின் பீஜபூர் சுல்தானால் தொடுக்கப்பெற்ற மற்ற முயற்சிகளும் வீணடையவே, அவர் சிவாஜீயைக்கொங்கணத்திற் கதிபதியென ஏற்றார்.

சிவாஜியும் முகலாயரும்:

(a) **ஷெயிஸ்டகானின் தோல்வி:** அடுத்த படியாக மதாபிமானம் மிகுந்த சிவாஜி இந்துக்களுக்குத் தீங்கிழைத்து வந்த ஔரங்கசீபிற்குச் சொந்தமான தக்ஷிண மாகாணங்களை வெல்லத் தலைப்பட்டார். அதைக் கேள்வியுற்ற முகலாய மன்னர் கி. பி. 1663ல்

சிவாஜி

தமது மாமனுரான **ஷேயிஸ்டகான்** என்பவரின் வசம் போதிய சேனை யொன்றை யனுப்பிச் சிவாஜியைத் தண்டித்து வருமாறு உத்தரவிட்டார். ஷேயிஸ்ட கான் சிவாஜியை எவ்வண்ணம் எதிர்த்து வெல்லுவது எனச் சிந்தித்து பூனுவில், (தற்செயலாகச் சிவாஜி தமது இளமையைக் கழித்த இல்லத்தில்) தங்கியிருக்குங்கால், மஹாராஷ்டிர மஹிபதி சில தேர்ந்த வீரர்களுடன் பரதேசிகளைப்போல் மாறு வேடம் பூண்டு ஒரிரவில், எதிர்பாராத சமயத்தில் ஷேயிஸ்டகானைத் தாக்கினுர். தலை தப்பியது தம்பிரான் புண்ணியம், என ஷேயிஸ்டகானும் தனது மூன்று விரல்களை யிழந்ததுடன் ஓட்டம் பிடித்தார். அவருடைய சேனையும் துரத்தியடிக்கப்பட்டது.

(b) **ஜெயஸிங்கின் வெற்றியும் அவருடன் சமாதானமும்:** அடுத்த வருஷம் சிவாஜி போர்த்துகீசியருக்குச் சொந்தமான சூரத் பண்டகசாலையை யெதிர்த்து ஏராளமான பொருள்களைக் கொள்ளைகொண்டார். மேலும் மெக்காவிற்கு முகம்மதிய யாத்திரீகர்களை யேற்றிச்சென்ற கப்பல்களையும் வழிமறித்து அவற்றில் அகப்பட்டதை அபகரித்தார்.

அதையறிந்த ஔரங்கசீப் சிவாஜியைத் தண்டிக்க, ஓர் பெரும்படையை கி. பி. 1665ல் **ஜெயஸிங்** என்ற ராஜபுத்திர தளகர்த்தரின் தலைமையின் கீழ் அனுப்பினுர். போரில் ஜெயஸிங்கின் ஆற்றலையறிந்த சிவாஜி பின்னும் சண்டைசெய்ய விரும்பாமல் அவருடன் ஒரு கண்ணியமான உடன்படிக்கையைச் செய்து முடித்தார். அவ்வுடன் பாட்டின்படி

சிவாஜி, ஜெயஸிங்கிற்கு ஆறுமாதகாலம் உதவி, பீஜபூரை முகலாயர்களுக்கடங்கச் செய்தார்.

(c) **ஆக்ராவில் நடந்த சம்பவம்:** (கி. பி. 1666) அதன் பின்பு ஜெயஸிங்கினது யோசனையின் பேரில் கி.பி. 1666ல் சிவாஜி ஔரங்கசீப்பை அவரது தலைநகரத்தில் சந்தித்துச் சிநேகம் செய்து கொள்ள ஆக்ராவிற்குச் சென்றார். ராஜசபையில் ஔரங்கசீப் தம்மை ஓர் சாமானிய தளகர்த்தரைப்போல் நடத்தியதற்காகச் சீற்றங்கொண்டு தம்முடைய அதிருப்தியைப் பகிரங்கமாயும், கோபக்குறிகளுடனும் தெரிவித்துச் சரேலென வெளிக்கிளம்பினார். அதனால் ஔரங்கசீப் அவரை, அவர் தங்கியிருந்த இடத்திலேயே ஓர் கைதியைப்போல் தமது ஆட்களைக் கொண்டு காத்து வந்தார். அச்சமயம் தமக்கு ஓர் வியாதி பீடித்திருப்பதாயும், தமது பீடா பரிகாரத்திற்காக ஏழைகளுக்குப் பழங்களும் பலகாரங்களும் தானஞ்செய்ய விரும்புவதாயும் கூறிப் பெரிய பழக்கூடைகளைச் சிலநாட்கள் தமது அரைக்கு எடுத்துவரவும் போகவும் செய்து, கடைசியாக ஓர் நாள் தந்திரமாய் சிவாஜி அப் பழக்கூடைகளில் ஒன்றில் மறைந்து கோட்டையினின்றும் வெளியேறி உருமாறித் தம் நாட்டிற்குத் தப்பிச் சென்றார். கிலேசத்தில் ஆழ்ந்து கிடந்த அவரது பிரஜைகளுக்கு அவரைக் கண்டதுமே உண்டான குதூகலத்திற்கு அளவே இல்லை!

மகுடாபிஷேகமும் இதர வெற்றிகளும்: உடனே தக்க வீரர்களின் பலத்தைக் கொண்டு சிவாஜி தாம் இழந்த நாடுகளை எல்லாம் மீண்டும் கைப்பற்றினார். அதைக்கண்ட ஔரங்கசீப் சிவாஜியை ஜெயிக்கப்

பிறிதொரு படையை யனுப்பினர். ஆனால் அது எளிதில் முறியடிக்கப்பட்டது அதற்குப்பின் கி.பி. 1669ல் **பீஜபூரையும் கோல்கொண்டாவையும்,** வருஷா வருஷம் தமக்குச் **சௌத்** என்னும் வரியைக் கப்பமாகக் கட்டுமாறு ஒப்புக் கொள்ளச் செய்தார். பிறகு 1674-ல் **ராய்கார்** என்ற கோட்டையில் அவர் **சிவாஜி மஹாராஜ்** என்ற பட்டப்பெயருடன் முடிசூட்டிக் கொண்டார். கடைசியாக **மைசூரும் கர்நாடகமும்** அவரால் பிடிக்கப் பட்டன. கர்நாடகத்தில் தமது **தம்பியைச்** சிற்றரசராக்கித் தமக்கு அடங்கி ஆளும்படி செய்தார்.

சிவாஜியின் முடிவு: (கி. பி. 1680) ஆனால் மஹாராஷ்டிரப் பட்டம் அடைந்தபின் சிவாஜி 6 வருஷ காலமே ஜீவித்திருந்தார். கி. பி. 1680 அதாவது **தமது 52-வது** வயதில் காலமானர். அவர் தம் பூதவுடலை நீத்தாராயினும் புகழுடம்பை என்றும் அடையப் பெற்றார்.

சிவாஜியின் ஆட்சி:

(a) ராஜ்யப் பிரிவுகள்: சிவாஜியின் சாம்ராஜ்யம் **14** ஜில்லாக்களை அடங்கப் பெற்றது. ஒவ்வொரு ஜில்லாவும் பல கிராமங்களைக் கொண்டிருந்தது. சிவாஜியினது நாடு மஹாராஷ்டிரமாகிய **ஸ்வராஜ்** என்றும் முகலாய மாகாணங்களாகிய **முகலாய்** என்றும் பிரிக்கப் பட்டிருந்தது. **தஞ்சாவூர்** அவரது சாம்ராஜ்யத்திற்குத் தலைநகராக்கப்பட்டது.

(b) பரிபாலன முறை: ஸ்வராஜ் என்பதைச் சிவாஜி **அஷ்டப்ரதான்** (எட்டு அமைச்சர்கள் அடங்கிய சபை) என்பதின் ஆலோசனையை யேற்றே

ஆண்டு வந்தார். எல்லைப்புற நாடுகளை மேற்பார்வையிட அவர் பகிரங்கமாயும் மாறுவேடம் பூண்டும் செல்வதுண்டு. சில சமயங்களில் ஒற்றர்கள் மூலமும் கண் காணிப்பதுண்டு. ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஓர் முக்கிய கோட்டையின் தலைவன் அதிகாரி. கிராமங்கள் பஞ்சாயத்துச் சபைகளின் மூலம் பரிபாலிக்கப்பட்டு வந்தன.

(c) **சேனை:** சிவாஜியின் சேனை நிலப்படையையும் கடற்படையையும் கொண்டிருந்தது. அது ஏற்ற அதிகாரிகளால் நடத்தப் பெற்று வந்தது. வீரர்களுக்குப் போதிய சம்பளம் அளிக்கப்பட்டுக் கொள்ளைப் பொருள்களிலும் பங்கு தரப்பட்டது ஆனால் கொள்ளையிடுங்காலத்தில் வீரர்கள் மூர்க்கத்தனமான செயலகளைப் புரியக் கூடாது. **ஸ்திரீகள், பசுக்கள், சிசுக்கள், வயோதிகர், பிணியாளர், ஹிந்து ஆலயங்கள், மசூதிகள், மாதாகோயில்கள்** முதலியன ரக்ஷிக்கப்பெற வேண்டும்.

(d) **ஆட்சியின் பொதுச்சிறப்பு:** நில வருமானத்தில் மூன்றில் 1 பங்கு வரியாக வசூலிக்கப் பட்டது. ஆனால் க்ஷாம காலங்களில் பிரஜைகள் அரசரால் உதவப் பட்டனர். நியாயம் செவ்வனே நிறுவப்பட்டது. குற்றங்கள் இழைத்தவர்கள் கடுமையாகத் தண்டிக்கப் பட்டனர். சிவாஜி இந்து மதத்தினிடத்து மிகுந்த அன்பு வைத்திருந்த போதிலும், முகம்மதிய மதத்தினிடம் துவேஷம் கொள்ளவில்லை.

C. சிவாஜிக்குப் பின் வந்தவர்கள்

(a) **சாம்பாஜி**: (கி. பி. 1680—1689) சிவாஜி இறந்தபின் அவருடைய குமாரர் **சாம்பாஜி** பட்டத்திற்கு வந்தார். அவர் தம் தந்தையைப் போன்று திறமை வாய்ந்தவரன்று. ஔரங்கசீப் நேரில் அவரை எதிர்த்தபொழுது அவரும் அவரது குமாரரும் தோற்கடிக்கப்பட்டு, சிறையிலும் அடைக்கப் பட்டனர். பிறகு சாம்பாஜி கொல்லப் பட்டார். அவருடைய குமாரர் சிறையிலேயே வைக்கப்பட்டார்.

(b) **ஸாஹு**: (கி. பி. 1708—49) ஔரங்கசீப் இறந்த பிறகு அவருடைய குமாரர் பஹதூர் ஷா சாம்பாஜியின் புத்திரரான **ஸாஹு**வைச் சிறையினின்றும் விடுவித்து மஹாராஷ்டிரத்திற்கு அரசராக ஏற்றார். அவர் விடுவிக்கப்படும் முன்பும் சாம்பாஜி இறந்த பின்பும் முறையே சிவாஜியின் சகோதரரான ராஜாராம் என்பவரும் அவரது மனைவியாராகிய தாராபாய் என்பவரும் ராஜ்ய காரியங்களைக் கவனித்து வந்தனர்.

சிறு வயது முதற்கொண்டே ஸாஹு சிறையில் அடைக்கப்பெற்றுக் காலத்தைக் கழித்துவந்ததால் அவருக்கு நேர்மையுடன் ராஜ்யபாரத்தை நடத்த முடியவில்லை. ஆகவே அவர் **பாலாஜி விஸ்வநாத்** என்ற ஓர் அந்தணரைத் தமது அமைச்சராக ஏற்று அவரிடமே ஆட்சிப்பொறுப்பை ஒப்புவித்தார். அவ்வாறு நியமிக்கப்பட்ட மந்திரி **பீஷ்வா** என அழைக்கப் பட்டார்.

அதற்குப் பின் பீஷ்வாக்களின் அதிகாரம் ஓங்கி லார்ட் ஹேஸ்டிங்ஸின் காலத்தில் அழிவுற்றது. ஆயினும் ஆங்கிலேயர் மஹாராஷ்டிரர்களைத் திருப்தி செய்ய விரும்பி, சிவாஜியின் பரம்பரையினரில் ஒருவரை **சதாராவிற்கு** அதிபதியாக்கி அரச பதவியை வகிக்குமாறு செய்தனர். அப் பிரதேசமே தற்பொழுது சிவாஜியின் பரந்த சாம்ராஜ்யத்தில் எஞ்சிய பாகமாகும்.

D. பீஷ்வாக்களும் மஹாராஷ்டிரத் தலைவர்களின் ஐக்கியமும்

இனி மேற் குறிக்கப்பட்டுள்ள பீஷ்வாக்களுள் முக்கியமானவர்களின் சரித்திரத்தை இங்குச் சுருங்கக் கற்போம்.

பாலாஜி விஸ்வநாத் (கி.பி. 1714—1720):-பாலாஜி விஸ்வநாதர் முதல் பீஷ்வா ஆவர். அவர் ஓர் கிராமக் கணக்குப் பிள்ளையின் வேலையிலிருந்து, படிப்படியாக உயர்ந்து, முதல் மந்திரி ஸ்தானத்தை வகிக்கலானார். அவர் ஒரு சிறந்த தளகர்த்தர். ராஜ தந்திரத்திலும் நிபுணர். சையத் சகோதரர்களின் காலத்தில் அவர் அவர்களுக்குதவி, **கான்தேஷ், பீரார், பீடார், பீஜபூர், ஹைதராபாத்** முதலிய நாடுகளினின்றும் **சௌத்** என்னும் வரியை வசூலிக்க அனுமதி பெற்றார்.

அவர் கி. பி. 1720 ல் காலமானார்.

பாஜிராவ் I (கி. பி. 1720—1740): பாஜிராவ் பாலாஜி விஸ்வநாதரின் குமாரர். தந்தையைக் காட்டிலும் இவர் எல்லாத் துறைகளிலும் மேம்பட்டவர். இவருடைய காலத்தில்தான் மஹாராஷ்டிர ராஜ்யம் பலர் அதிசயிக்குமாறு அதிகாரத்தில் ஓங்கியது. கி. பி.

1736ல் இவர் **டில்லியின்** மீது படையெடுத்து முகம்மதுஷாவினிட மிருந்து, அந் நகரைக் கைப் பற்றினர். பின்பு இரண்டு வருஷங்களுக்குள் ளாகச் சாம்பல் நதியிலிருந்து நருமதை நதிவரையிலு முள்ள நாடுகளை மஹாராஷ்டிர அதிகாரத்திற்குட் படுத்தினர். இவருடைய ஆட்சியின் பொழுதுதான் மஹாராஷ்டிர ராஜ்யம் ஐந்து தனி மாகாணங்களாகப் பிரிந்தது. **பூனு** பீஷ்வாவின் அதிகாரத்திற்குட்பட்ட தாயிற்று. நிற்க, இந்தூரில் ஹோல்கார் வம்சத்தின ரும், பரோடாவில் கெயிக்வார் பரம்பரையும், நாகபுரி யில் பான்ஸ்லே என்னும் சந்ததியாரும், குவாலியரில் ஸிந்தியா என்னும் வகுப்பினரும் தத்தம் ஆட்சிகளை ஸ்தாபித்தனர்.

பீஷ்வாவே இம் மாகாணங்களுக்கு ஆதீனத் தலை வர் ஆவர்.

பாலாஜி பாஜி ராவ் (கி. பி. 1740—1761): பாஜி ராவின் குமாரராகிய பாலாஜி பாஜிராவும் வெகு சமர்த்தர். அவரது காலத்தில் **கூர்ஜரம், மாளவம், பஞ் சாப்** முதலிய இடங்கள் மஹாராஷ்டிரர்களுக்குச் சொந்தமாயின. **வங்காளத்திலும் தக்ஷிணத்திலும், சௌத்** வரியை வசூலிக்கும் உரிமையையும் அவர் பெற்றார். மேலும் கி. பி. 1748ல் இறக்குந் தருவாயிலிருந்த ஸாஹூ விடமிருந்து, தம் (பீஷ்வாவின்) சந்ததி யாருக்கு அரசுரிமைச் சாசனத்தைப் பெற்றார்.

அவர் ஆண்டுவரும் வேளையிலேதான் **மூன்றும் பானிபட் யுத்தம்** கி. பி. 1761ல் நடைபெற்றது. அதற் குக் காரணம் டில்லிச் சக்கரவர்த்தியினுல் தூண்டப்

பெற்று, ஆப்கானிய மன்னனான ஆமத்ஷா துரானி யால் ஜெயிக்கப்பெற்றிருந்த பஞ்சாபை மஹாராஷ்டிரர்கள் கைப்பற்றியதேயாகும். அப் பானிபட்டுச் சண்டையில் தம் இனத்தவர் தோல்வியுற்றன ரென்றும் இரண்டு லக்ஷம் மஹாராஷ்டிரர்கள் மடிந்தன ரென்றும், தமதருமைத் தம்பி ரகுநாதராவும், தமதன் பார்ந்த புதல்வர் விசுவாஸராவும் தம் புகழ்பெற்ற சேனுதிபதி சதாசிவராவும் உயிர் துறந்தனரென்றும் கேட்டதுமே, இடியேறுண்ட நாகம்போல் நிலை தளர்ந்து, மனம் நொந்து, வேதனை வாய்ப்பட்டு பீஷ்வா உயிர் நீத்தார். அச் சண்டையினுல் ஏற்பட்ட முக்கிய விளைவு யாதெனின் அது முதற்கொண்டு மஹாராஷ்டிர அதிகாரம் மட்டுப்பட்டு ஆங்கிலேய ரின் ஆதிக்கம் வளரத் தலைப்பட்டது.

பாலாஜி பாஜிராவிற்குப்பின் ஒவ்வொரு மஹாராஷ்டிர மாகாணமும் சுயேச்சை யடைந்தது.

E. பிந்திய பீஷ்வாக்களும், மஹாராஷ்டிர ஆதிக்கத்தின் சிதைவும் : பாலாஜி பாஜிராவுக்குப்பின் ஆண்ட பீஷ்வாக்கள் பலமற்றவர்கள். அவர்களுடைய காலத்தில் மஹாராஷ்டிர ராஜ்யம் சிதைவுற்று நாளாவட்டத்தில் ஆங்கிலேயர் வசமாயிற்று. அதைப் பற்றிய தெளிவான விவரத்தைப்பின் நாம் அறிந்து கொள்ளப் போகின்ருே மாகையால் இங்குச் சரித்திரப் போக்கை மாத்திரம் குறிப்பிட்டு நிறுத்திக் கொள்வோம்.

மாதவராவ் I: பாலாஜி பாஜிராவுக்குப்பின் அவரது குமாரர் **மாதவராவ்** கி. பி. 1761 லிருந்து கி. பி. 1772

வரை மந்திரிப் பதவியை வகித்தார். அவர் அச்சமயம் 16 வயதினரே யாதலால், அவருடைய சிறிய தந்தை **ரகுநாத ராவ்** அல்லது **ரகோபா** என்பவர் பீஷ்வா பதவிக்காகப் போரிட்டார். பீஷ்வா அதிக சாமர்த்தியம் வாய்ந்தவராதல்பற்றி ரகோபாவை கி.பி. 1768ல் தோற்கடித்துச் சிறையுஞ் செய்தார். பின்னர் நாட்டில் எழுந்த கலகங்களை யடக்கித் தம்மை யெதிர்த்து வந்த நிஜாமையும், ஹைதர் அலியையுந் தோற்கடித்துத் தமது கீர்த்தியை நிலை நாட்டினார்.

மாதவராவ் கி. பி. 1772 ல் இறந்தார்.

நாராயண ராவ் (கி. பி. 1772—1773): மாதவ ராவுக்குப் பின் அவரது சகோதரர் **நாராயண ராவ்** பீஷ்வா ஆனார். அவருக்கெதிரேயும் ரகோபா பட்டத்திற்காகப் போர் தொடுத்தார். நாராயண ராவ் கொலை செய்யப்பட்டார். **ரகோபா, பீஷ்வா ஆனார்.**

ரகுநாத ராவ்: நாராயண ராவ் இறக்குந் தருவாயில் அவரது மனைவி கர்ப்பமா யிருந்தாள். சில மாதங்களுக்கெல்லாம் ஒரு ஆண் மகவு பிறந்தது. அச்சமயம் **பூனாவில் நானா பர்னவிஸ்** என்ற மஹாராஷ்டிர வீரர் ஒருவர் இருந்தார். அவர் அக்குழந்தையை முன்னிட்டு ரகோபாவிற் கெதிரே போரிட்டார். அதன் முடிவில் (கி. பி. 1782ல்) நாராயண ராவின் புதல்வர் **மாதவராவ் II** என்ற பட்டப் பெயருடன் பீஷ்வாவாக ஏற்கப்பட்டார்.

மாதவராவ் II (கி. பி. 1774—1795): இவருடைய காலம் முழுதும் நானாபர்னவிஸ் ராஜ்ய பாரத்தைக்

கண்காணித்து வந்து பீஷ்வாவின் அதிகாரம் க்ஷீணிக்காமல் பார்த்துக் கொண்டார்.

பாஜிராவ் II (கி. பி. 1796 ல்—1818) : இரண்டாவது பாஜிராவ் ரகுநாத ராவின் புதல்வர். அவர் பல ஹீனராயும், . ஆழ்ந்த யோசனையற்றவராயும் இருந்தார். அவருடைய காலத்தில் பீஷ்வாவின் அதிகாரம் பின்னும் குறைந்து, கி. பி. 1818 ல் ஆங்கிலேயருக்கெதிரே தொடுத்த சண்டையுடன் மறைந்தது. பீஷ்வா உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டார். அவருடைய நாடுகளும் ஆங்கில சாம்ராஜ்யத்துடன் இணைக்கப்பெற்றன. அதற்குப் பின் ஏற்கனவே வளர்ந்து வந்த ஆங்கில ஆதிக்கம் இன்னும் ஓங்கியது.

வினாக்கள்

A

1. மஹாராஷ்டிரர்களின் பூர்வீக நாடு எது?

2. சிவாஜிக்குமுன் மஹாராஷ்டிரர்களது நிலை எவ்வாறிருந்தது?

B

1. சிவாஜியின் இளமையைக் குறித்தாவது அவரது நோக்கங்களைப் பற்றியாவது ஒரு குறிப்பு வரைக.

2. சிவாஜி பீஜபூருடனேயாவது, முகலாயருடனேயாவது தொடுத்துப் போரைப்பற்றிச் சுருங்கக்கூறுக.

3. சிவாஜி ஆக்ராவில் சிறைப்பட்டதேன்? அங்கிருந்து எவ்வண்ணம் தப்பினார்?

4. சிவாஜியின் ஆட்சி இராணுவத் துறையிலாவது, பொதுநலத் துறையிலாவது எவ்விதம் இருந்தது?

C

1. சாம்பாஜி மடிந்தவித மெப்படி?

2. ஸாஹு ஏன் ஆட்சித்திறமை கொண்டவராயில்லை?

3. தற்பொழுது ஸதாராவில் எவ்வம்சத்தினர் ஆளு கின்றனர்? அவர்களுக்கு ஆட்சிப்பொறுப்பு எவ்வாறு கிடைத்தது?

D

1. 1-வது பாஜிராவின் ஆட்சியின் பெருமையை விளக்குக.

2. பாலாஜி பாஜிராவினுடைய காலத்தில் நிகழ்ந்த ஓர் முக்கிய சம்பவம் யாது? அதைப்பற்றி ஓர் குறிப்பு வரைக.

E

1. முதலாவது மாதவராவின் ஆற்றலை விவரிக்க.

2. நானு பர்னவிஸ் என்பவரைபபற்றி ஒரு குறிப்பு வரைக.

3. பீஷ்வாவின் அதிகாரம் யாருடைய காலத்தில் எவ்வண்ணம் மறைந்தது?

20. சீக்கியர்கள்

சீக்கியர்கள் யார்? சீக்கியர்கள், ஜாதர்களும், ராஜ புத்திரர்களும் கலந்ததனுல் உண்டான ஒரு கலப்பு ஜாதியினர் ஆவர். **சீக்கியர்கள்** என்ருல் **சீடர்கள்** எனப் பொருள்படும். ஆகவே இஜ்ஜாதியினர் சீக்கிய மதக் கட்டுப்பாட்டால் ஒன்றுசேர்ந்த ஓர் வகுப்பினர் எனக் கூறுதல் பொருந்தும். இவர்கள் 15ம் நூற்ருண்டின் இறுதியில் தோன்றினர்.

சீக்க மதம் தோன்றக் காரணம்: கி. பி. 15ம் நூற்ருண்டில், நீண்ட முகம்மதிய ஆட்சியின் பயனுக ஹிந்து மதம் க்ஷீணித்து, இஸ்லாம் அரசர்களின் மதமாக ஏற்பட்டது பற்றி, அது நாடெங்கும் பரவத் தலைப்பட்டது. மேலும் இவ்விரு மதஸ்தர்களுக் கிடையே அமைதியற்றுக் குழப்பம் உண்டாகும் போல் இருந்தது. அச்சமயம் வட இந்தியாவில் **கபீர்** போன்ற மதபோதகர்கள் உதித்து, இஸ்லாமும், ஹிந்து மதமும் உண்மை மதங்கள் எனவும், இவ்விரு மதங்களைக் கடைப்பிடிப்போர் கடவுளுடைய குமாரர் கள் என்றும், ஆகவே சகோதரர்களாகிய இவர்கள் தங்களிடையேயுள்ள வேற்றுமையைக் களைந்து, ஒற்றுமையை வளர்த்துச் சமரசக் கொள்கைகளை யனுசரிக்க வேண்டும் என்றும் போதித்தனர். கபீரி னுடைய சிஷ்யர்களில் ஒருவராகிய **நானக்** என்பாரும் அதேவித எண்ணங்களைக்கொண்டு, இரு மதத்தினர்க் கும் ஏற்றதான **சீக்கிய மதம்** என்ற ஓர் புதிய மதத் தைப் போதிக்கலுற்ருர்.

நானக் தேவரின் சரித்திரம்: நானக் கி. பி. 1469ல் லாகூருக்கருகிலுள்ள **தால்வந்தி** என்னும் கிராமத்தில் **காலு** என்ற ஓர் க்ஷத்திரிய வியாபாரிக்குக் குமாரராய் அவதரித்தார். வியாபாரத்தை நடத்துவதில் ஊக்கங் கொள்ளாது, முஹம்மது நபியைப்போலவே, இவரும் முக்தியை யளிக்கும் மார்க்கத்தைத் தேடலுற்றார். முஹம்மதுவைப் போலவே இவரும் மணந்தார். ஞானோதயம் பெறப் புத்தரைப்போல் இவர் ஹிந்து முகம்மதியப் பண்டிதர்களை யண்டிப் பாடங் கற்றார். அதனால் பிரயோஜனம் சிறிதும் ஏற்படாதுபோகவே, சுயமாகவே கடவுளைப்பற்றிச் சிந்திக்கலுற்றார். அப் பொழுது ஓர் நாள் உண்மை மதத்தின் தத்துவம் திடீரெனத் தம் மனக்கண்ணிற்குப் புலப்பட்டு விட்ட தென இவருக்குத் தோன்றியது. அதைத் தம்மைப் பின்பற்ற விரும்பினோர்க்குப் போதித்தார். கி. பி. 1538ல் இவர் காலமானார்.

நானக் போதித்த நீதிகள்: "எம்மதத்தினர்க்கும் கடவுள் ஒருவரே. அவர் எல்லோர் மாட்டும் ஒரேவித அன்பைச் செலுத்துபவர். ஆகவே ஜாதி, மத வேற் றுமைகளை யுண்டாக்குதல் மதியீனச் செயலாகும். மேலும் **லோக பிதா**வான கடவுளுக்குத் தனித் தனிப் பெயர்களிடுதலோ, ரூபங்கள் அளிப்பதோ ஏற்ற தாகாது. பின்னும் கடவுளின் அன்பைப்பெற யாகங் களை இயற்றுவதாவது, வேதம் முதலிய நூல்களை ஓதுதலாவது அவசியமில்லை. **நல்வாழ்க்கை, நல்லெண் ணம், நல்வார்த்தை, நற்றியானம்** முதலியனவே முக்தி யையளிக்கவல்லவை என ஓர்தல்வேண்டும். மோக்ஷம் அடையச் சந்நியாசம் பூணுதல் அவசியமில்லை."

(a) குரு அமர்தாஸ் (கி. பி. 1552—1574) : **அமர்தாஸ்** சீக்கியர்களின் மூன்ருவது குரு. அவர் அக்பரிடமிருந்து ஓர் மானிபம் பெற்று அதில் ஒரு பொற் கோயிலையும், ஒரு குளத்தையுங் கட்டுவித்தார்.



அமிர்த ஸரஸ்

அதுவே தற்காலத்தில் **அமிர்த ஸரஸ்** என்னும் சீக்கியப் புண்ணிய ஸ்தலமாக விளங்குகிறது.

(b) தேஜ் பஹதூர் (கி. பி. 1664—1675) : சீக்கியர்களின் ஒன்பதாவது குருவான **தேஜ் பஹதூர்** இரும்பினும் வலியதான மனோ திடத்தைக் கொண்டவர். ஔரங்கசீப் அவரை முகம்மதியர் ஆகுமாறு வற்புறுத்தியபொழுது, அவர், "நான் உயிரையாவது இழக்கச் சம்மதிப்பேனே யொழிய, என் மதத்தை இழக்க விரும்பமாட்டேன்", எனக் கூறிவிட்டார். அதனல்

சித்திரவதைக்குள்ளானர். ஆனல் முகலாயச் சக்கர வர்த்தியின் கொடூரச் செய்கையானது சீக்கியர்களின் சீற்றத்தைச் சாலவும் வளர்த்தது.

(c) குரு கோவிந்த ஸிங் (கி. பி. 1675—1708): தேஜ் பஹதூரின் குமாரர் **கோவிந்த ஸிங்** அடுத்தபடியாகக் குரு ஸ்தானம் வகித்தார். தம் தகப்பனரைக் கொன்றதற்காகப் பழிக்குப் பழி வாங்கவேண்டி அவர் **கால்ஸா** என்னும் படையொன்றைக் கூட்டி, அதைச் சார்ந்த ஒவ்வொரு வீரனுக்கும் **சிங்கம்** எனப் பொருள்படும் **ஸிங்** என்ற பெயரைத் தந்தார். பின்னும், சீக்கிய வீரர்களுக்குச் சிலத் தனித் திட்டங்கள் அமைத்தார். அவ்வண்ணம் தயாரித்த சேனையைப் பின்பு கோவிந்தர் முகலாய மன்னருக்கெதிரே இட்டுச் சென்ருர். அப்பொழுது நிகழ்ந்த எதிர்ப்புகளிலொன்றில் கோவிந்தர் தக்ஷிணத்திற்குத் தப்பியோடினர். ஆனல் அங்கு ஒரு ஆப்கானியனது கையால் மரணமடைந்தார்.

ரஞ்சித் ஸிங்

சீக்கியர்களின் பின் சரித்திரம்: கோவிந்த ஸிங்கிற்குப்பின் குருமார்களின் அதிகாரம் ஒழிந்துச் சீக்கியர்கள் 12 கூட்டத்தினராகப் பிரிந்தனர். **ரஞ்சித்ஸிங்** எனப் பெயர்பெற்ற சீக்கியவரசர் அத் தொகுதிகளில் ஒன்றைச் சேர்ந்தவர். அவருடைய காலத்தில் சீக்கி

யர்களின் அதிகாரம் ஓங்கி வளர்ந்தது. அவருக்குப் பின் சீக்கியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே யுத்தங்கள் நிகழ்ந்து, 1849ல் ஆங்கிலேயர்கள் பஞ்சாபைப் பிடித்துக் கொண்டதுடன், சீக்கியர்களின் ஆதிக்கத்தையும் மறையச் செய்தனர்.

ஆனால் தற்காலத்தில் பெரும்பாலும் கூர்க்கர்களும், சீக்கியர்களும் நம் நாட்டு வீரத்தை நிலைநிறுத்திப் பிரதாபத்தை எய்தி வருகின்றனர்.

வினாக்கள்

1. நானக் தேவரின் ஜீவிய சரித்திரத்தைச் சுருக்கிக் கூறுக.

2. நானக் போதித்த கொள்கைகளை விவரிக்க.

3. சீக்கிய குருக்களில் மதஸ்தாபகரைத் தவிர வேறு எவர்களாயினும் இருவரைப்பற்றிக் குறிப்புகள் வரைக.

4. குருமார்களின் ஆட்சிக்குப் பின் சீக்கியர் சரித்திரம் எவ்வாறாக இருந்தது?

21. இந்தியாவுடன் ஐரோப்பியரின் வியாபாரம்

பண்டை இந்தியாவுடன் ஐரோப்பியரின் வியாபாரம் : பண்டைக்காலத்தில் இந்தியாவிற்கும் மேல் நாடுகளுக்கும் செழிப்பான வியாபாரம் நடந்து வந்தது. இந்தியாவில் கிடைக்கக்கூடிய சந்தனக்கட்டை, பருத்தி ஆடைகள், சரிகை, பட்டு ஆடைகள், முத்து, பவழம், ரத்தினம், அவுரி, வாசனைத் திரவியங்கள் முதலியவற்றை அராபியர்கள் மேல் நாடுகளுக்குத் தங்கள் கப்பல்களில் ஏற்றிச் சென்று ரோமானியர்களுக்கு விற்றார்கள். பின்பு, அவர்களிடமிருந்து இரும்பு, தாமிரம், வெள்ளி, பொன், கம்பளம், கண்ணாடிச் சாமான்கள் முதலியவைகளை வாங்கி இந்தியர்களிடம் விலையாக்கினார்கள். இவ்வியாபாரத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் தக்க லாபம் கிடைத்தது.

பழைய மார்க்கங்கள் : இவ்வியாபாரம் பண்டைக் காலத்தில் மூன்று முக்கிய மார்க்கங்களின் மூலம் நடந்து வந்தது.

முதல் மார்க்கமானது நிலமார்க்கமா யிருந்தது. அது **வடமேற்குக் கணவாய்**களைக் கடந்து **ஆப்கானிஸ்தானம், பாரசீகம்** முதலிய நாடுகளின் வழியாய் அமையப்பெற்று **கான்ஸ்டாண்டிநோபிள்** என்ற முக்கிய வியாபார ஸ்தலத்தில் முடிவடைந்தது.

இரண்டாவது கடலும், நிலமும் கொண்ட வழியாகும். அதாவது வியாபாரிகள் இந்தியாவின் **மேற்குக் கடற்கரை**யினின்றும் புறப்பட்டுப் **பாரசீக வளை**குடாவை யடைந்து அங்கிருந்து நில மார்க்கமாய்ப் **பாலஸ்தீனம், ஸிரியா** முதலிய இடங்களை அடைந்தனர்.



பழைய வியாபார வழிகளும் புதிய கடல் மார்க்கமும்

மூன்ருவது அரபிக்கடல் வழியாய்ச் செங்கடலி லுள்ள ஸுயெஸ் துறைமுகத்தின் வரை எட்டிற்று. அது முழுக்கடல் மார்க்கமாகும்.

புது மார்க்கம் கண்டுபிடிக்க அவசியம்: இம்மார்க் கங்கள் யாவும் கி. பி. 15ம் நூற்ருண்டின் தொடக் கத்தில் அடைபட்டன. எவ்வாறெனில் **துருக்கியர்கள்** அச்சமயம் முன்னேற்றமடைந்து ஸிரியா, எகிப்து, கான்ஸ்டாண்டிநோபிள் முதலிய இடங்களைக் கைப் பற்றினர். எல்லா வியாபார மார்க்கங்களும் இந்த ஸ்தலங்கள் வழியேதான் சென்றன எனக் கண்டோம். ஆகவே துருக்கிய ஆதிக்கம் இந்தியாவுடன் நடை பெற்றுவந்த வியாபாரத்தை அறவே போக்கி விட்டது. ஆனதுபற்றி நம் நாட்டுடன் பின்னும் வியாபாரம் செய்ய விரும் பியவர்கள் துருக்கியரின் தடைக்குள்ளாகாத புதிய தோர் மார்க்கத்தைக் கண்டு பிடிக்க முயன்ற னர்.

வாஸ்கோட காமா

புதிய மார்க்கம் தோன்றுதல்: அக் காலத்தில் போர்த்துகீசியர் கடல் வலிமை கொண்டிருந்த னர். ஆகவே அவர்களின் அரசர் இந்தியாவிற்குப் புதிய மார்க்கமொன்றை யேற்படுத்தப் பல மாலுமிகளைக் கடல் வழியே

யனுப்பினுர். அவர்களில் ஒருவரேனும் ஜெயம்பெற வில்லே. ஆனுல் அவருக்குப் பின் கி. பி. 1498 ல் **வாஸ்கோட காமா** என்னும் ஓர் போர்த்துகீசிய மாலுமி, **பார்த்தாலமியூடயஸ்** என்றவர் அடைந்த ஆப்பிரிக்காவின் தென் கோடியாகிய **நன்னம்பிக்கை முனை** வழியாய், இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் அமையப்பெற்றிருக்கும் **கள்ளிக்கோட்டை**யைச் சேர்ந் தார். போர்த்துகீசியரால் பல வருடங்களாகச் செய்து வந்த பிரயத்தனம் அப்பொழுதுதான் பயனடைந்தது.

விஞக்கள்

1. பண்டைககாலத்தில் இந்தியாவுடன் நடைபெற்று வந்த அயல் நாட்டு வியாபாரத்தைப்பற்றிச் சுருக்கிக் கூறுக.

2. வாஸ்கோட காமா கண்டுபிடித்த மார்க்கத்தை விவரிக்க.

3. புதிய மார்க்கம் தோன்றுமுன் வியாபாரிகளால் உபயோகிக்கப்பட்டு வந்த பண்டை மார்க்கங்களேப் படத் தில் குறிப்பிடுக.

4. போர்த்துகீசியர் புதிய மார்க்கமொன்றைக் கண்டு பிடிக்கக் காரணத்தை விளக்குக.

22. ஐரோப்பியர் வருகை

A போர்த்துகீசியர்களும் டச்சுக்காரர்களும்

போர்த்துகீசிய அதிகார வளர்ச்சி: இந்தியாவில் வாஸ்கோடகாமா கால் வைத்த முகூர்த்தம் நல்ல முகூர்த்தமாயிருந்தது. ஆரம்பத்தில் அவர்களுக்கு அராபியர்களிடமிருந்தும் இந்தியச் சிற்றரசர்களிடமிருந்தும் எதிர்ப்புகள் தோன்றினவாயினும், கி. பி. 1505ல் இந்தியாவிற்குவந்த **ஆல்மெய்டா** (கி. பி. 1505-1509) என்னும் போர்த்துகீசிய கவர்னருடைய காலத்தில் **டயூ** என்ற துறைமுகப்பட்டினத்திற்கருகே நிகழ்ந்த வலுத்த கப்பற் சண்டையில் எதிரிகள் முறியடிக்கப்பட்டு, போர்த்துகீசியருக்குக் கடல் ஆதிக்கம் ஏற்பட்டது. அதற்குப்பின் போர்த்துகீசிய ராஜ்யமும் தோன்றலாயிற்று.

ஆல்புகர்க்கும் உன்னதநிலையும் (கி. பி. 1509-1515) ஆல்மெய்டாவிற்குப் பின் **ஆல்புகர்க்** வைஸ்ராயாக நியமிக்கப் பெற்று இந்தியாவிற்கு வந்தார். அவருடைய காலத்தில்தான் போர்த்துகீசிய ஆதிக்கம் உன்னத நிலையை எய்தியது. அவர் **பாரசீக வளைகுடா, செங்கடல்** முதலியவைகளின் முகத்துவாரங்களைக் கைப்பற்றி முகம்மதிய எதிர்ப்பை முற்றிலும் போக்கினார். பாரசிக வளைகுடாவிலுள்ள **ஆர்மஸ்** என்ற தீவையும் பிடித்தார். **மலேயா** தீபகற்பத்திற்குச் செல்ல வசதி தரும் **மலாகா** என்னும் துறைமுகப் பட்டினத்தைப் போர்த்துகீசியரின் ஆதீனத்துக்குட்படுத்தினார். கி. பி. **1510**ல் **கோவாவைப்** பிடித்தார். பின்பு **விஜயநகரத்தையும் பீஜபூரையும்** ஆண்டு

வந்த மன்னர்களுடன் சிநேக உடன்பாடுகள் செய்து முடித்தார். போர்த்துகீசியரை இந்தியர்களுடன் கலந்து, அவர்களுடைய அன்பைப் பெறவும் தூண்டினர்.

போர்த்துகீசியரின் க்ஷீணம் : ஆல்புகர்க்குக்குப் பின் வந்த பிரதிநிதிகள் ஊக்கமும், மதியும் அற்றவர்கள். சுயநலத்தைக் கொண்டவர்கள். மேலும் அவர்களுடைய காலத்தில் போர்த்துகல் ஸ்பெயினுடன் இணைக்கப்பெற்றுத் தன் சுயேச்சையை இழந்தது. இது நிற்க போர்த்துகீசியர்கள் இந்தியர்களைக் கொடூரமாக நடத்தினர். அவர்களைக் கிறிஸ்துவர்களாக்கவும் முயன்றனர். இவையனைத்தும் ஒன்று சேர்ந்து இந்தியாவில் போர்த்துகீசிய அதிகாரத்தைப் போக்கிவிட்டன. தற்பொழுது இவ் வைரோப்பியருக்குச் சொந்தமாயிருக்கும் இடங்கள் **கோவா, டயூ, டாமன்** என்ற துறைமுகங்களேயாகும்.

டச்சுக்காரர்களின் வருகை (கி.பி. 1600) : போர்த்துகீசியருக்கு அடுத்தபடியாக ஐரோப்பாவில் அக்காலத்தில் கடல் வலிமை கொண்டிருந்தவர்கள் **டச்சுக்காரர்**கள் ஆவர். போர்த்துகீசியரின் இந்திய வியாபாரப் பெருக்கைக் கண்டு அவர்களும் நம் நாட்டுடன் வியாபாரம் செய்யத் தலைப்பட்டனர். ஆனால் டச்சுக்காரர்களுக்கு அராபியர்களிடமிருந்து எதிர்ப்பு உண்டாகியது. அதை அவர்கள் எளிதில் போக்கிக்கொண்டனர்.

டச்சுக்காரரின் வியாபாரப் பெருக்கு : பின்பு டச்சுக்காரர்கள் இந்தியாவில் தங்களுடைய வாணிபத்தை ஊன்றச் செய்தனர். **சூரத், பழவேற்காடு, மசூலிப்**

பட்டணம், ஹூக்ளி, காஸிம்பஜார், டாக்கா, பாட்ன முதலிய இடங்களில் அவர்கள் வியாபாரத்தை நடத்த லாயினர். மலாகா போர்த்துகீசியரிடமிருந்து கைப் பற்றப்பட்டது. ஆனல் இந்திய வியாபாரத்தைக் காட்டிலும் கிழக்கிந்தியத் தீவுகளுடன் நடத்திய வர்த்



ஐரோப்பியரின் வியாபார ஸ்தலங்கள்

தகமே டச்சுக்காரர்களுக்கு மிகுந்த லாபத்தையும், செல்வாக்கையுமளித்தது. ஆகவே அவர்கள் அங்கு வியாபாரத்திற்காக வந்த ஆங்கிலேயர்களை அம்பாய்ன படுகொலை போன்ற சதிகளின்மூலம் விரட்டியடித்துத் தங்கள் வாணிபத்தைப் பலப்படுத்திக் கொண்டனர்.

டச்சு ஆதிக்கத்தின் க்ஷீணம்: டச்சுக்காரர்கள் இந்தியாவை யடைந்த பின்னர், ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் அவர்களுக்குப் போட்டியாகத் தோன்றினர். மேலும் இந்தியர்களை டச்சுக்காரர்கள் ஏளனம் செய்து இகழ்ந்தனர். கடைசியாய்த் தங்களுடைய சொந்த நாட்டிலேயே அவர்களுக்குப் பல எதிர்ப்புகள் தோன்றின. இக் காரணங்களால், கிழக்கிந்தியத் தீவுகள் தவிர மற்ற இடங்களில் டச்சுக்காரர்கள் தங்களது ஆதிக்கத்தை நிலைநிறுத்த முடியவில்லை.

B. ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும்

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி (கி. பி. 1600): போர்த்துகீசியரும், டச்சுக்காரரும் இந்தியாவுடன் வியாபாரம் செய்ததால் அடைந்த லாபத்தைக் கண்ட ஆங்கிலேயரும் இந்நாட்டுடன் வியாபாரம் செய்ய விரும்பினர். அதற்காக அவர்கள் கி. பி. 1600-ல் தங்களுடைய மஹாராணியார் **எலிஸபெத்** என்பாரிடமிருந்து இந்தியாவுடன் வியாபாரம் செய்ய ஓர் சாஸனத்தைப் பெற்று ஒரு வர்த்தகச் சங்கத்தை ஸ்தாபித்தனர். அதற்குக் **கிழக்கு இந்தியக் கம்பெனி** எனப் பெயரிடப்பட்டது. அதுவும் ஆரம்பத்தில் மற்ற ஐரோப்பிய வர்த்தகச் சங்கங்களைப் போலவே எதிர்ப்புகளைப் போக்கிக்கொண்டு வியாபாரத்தை நீடிக்கச் செய்யவேண்டியதாயிற்று. பின்னர் அது இந்தியாவின் மேற்குக் கரையிலும், கிழக்குக் கரையிலும், பண்டகசாலைகள் அமைத்துக்கொள்ள அனுமதி பெற்று, உள்நாட்டுடன் வியாபாரமும் நடத்தத் தலைப்பட்டது.

பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி (கி. பி. 1664): இந்தியாவில் டச்சுக்காரர்களுடையவும், ஆங்கிலேயர்களுடையவும் வியாபாரம் பெருகவே, அவர்களைப் போல் தாங்களும் லாபத்தைப் பெற விரும்பி கி. பி. 1664-ல் **கால்பேர்ட்** என்ற பிரதம மந்திரியின் முயற்சியின்பேரில் **பிரான்ஸில்** ஒரு இந்திய வர்த்தகச் சங்கம் ஸ்தாபிதமாயிற்று. அது மற்றத் தனிப்பட்ட பிரஞ்சியரின் சங்கங்களைக் காட்டிலும் வலிவான ஏற்பாட்டைப் பெற்று ஆரம்ப முதற்கொண்டே திறமான வாணிபத்தையும் கொள்ளலாயிற்று. சீக்கிரத்தில் அநேக வியாபார ஸ்தலங்களையும் அடைந்தது.

வினாக்கள்

1. போர்த்துகீசிய அதிகார வளர்ச்சியைப்பற்றியாவது ஆல்புகர்க்கின் ஆட்சியைப் பற்றியாவது சுருக்கிக் கூறுக.

2. போர்த்துகீசிய அதிகாரம் குன்றக் காரணங்களைக் குறிக்க.

3. டச்சுக்காரர்களின் வியாபாரப் பெருக்கைக் குறித்து ஒரு குறிப்பு வரைக.

4. ஆங்கிலேயர்களது அல்லது பிரெஞ்சியருடைய கிழக்கிந்தியக் கம்பெனி எப்பொழுது, எப்படி உண்டாயிற்றென்பதைப் பற்றிச் சுருக்கமாய் எழுதுக.

23. ஆங்கிலேய பிரேஞ்சு வியாபாரப் பெருக்கு

இந்த அத்தியாயத்தில் ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் எவ்வண்ணம் தத்தம் வியாபாரத்தைப் பெருக்கினுர்கள் என்பதைக் கற்போம்.

A. ஆங்கிலேயரின் முன்னேற்றம்

ஆங்கிலக் கிழக்கிந்தியச் சங்கத்தின் வியாபார வளர்ச்சி : கி.பி. 1600-ல் ஆரம்பிக்கப் பெற்ற வியாபாரச் சங்கம் நாளுக்கு நாள் வியாபாரத்தையும், அதிகாரத்தையும் ஒருங்கே வளர்த்துக்கொண்டு வந்தது. கி. பி. 1608-ல் **ஹாகின்ஸ்** என்ற ஓர் ஆங்கிலக் கப்பற்றலைவன் **ஜஹாங்கீரின்** ஸமஸ்தானத்தை யடைந்து ஆங்கில வியாபாரிகளுக்கு வர்த்தக உரிமையைப் பெற முயன்ருர். ஆனுல் போர்த்துகீசியரது கோட்சொற்களால் அவர் ஒரு சாஸனமும் பெறமுடியாமல் போயிற்று. இருந்தபோதிலும் ஜஹாங்கீரிடம் மறுமுறையும் அனுப்பப்பட்ட **ரோ** என்னும் ஆங்கில ராயபாரி, கி. பி. 1618ல் சூரத் முதலான இடங்களை வியாபார ஸ்தலங்களாக உபயோகிக்க உரிமை பெற்றுத் தம் நாடு திரும்பினுர். அடுத்தாற்போல் **சூரத், மசூலிப்பட்டணம், சென்னப்பட்டணம், பம்பாய், கல்கத்தா** முதலிய இடங்களில் அவர்கள் பண்டகசாலைகளைக் கட்டினுர்கள். அவ்விடங்களில் கோட்டைகளையும் எழுப்பினுர்கள்.

இவ்வியாபார ஸ்தலங்களில் முக்கியமானவற்றை ஆங்கிலேயர் எவ்வாறு அடைந்தனர் என்பதைப் பற்றி இங்கு அறிவோம்.

மதராஸை அடைந்த விதம் (கி. பி. 1639) : மசூலிப்பட்டணத்தில் ஆங்கிலேய வியாபாரத்திற்கு **டச்சுக்காரர்களின் போட்டி** ஏற்பட்டது. ஆகவே ஆங்கிலப் பிரதிநிதியான **ஸர் பிரான்ஸிஸ் டே** என்பவர் தற்பொழுது **சென்னபப்பட்டணம்** என்று சொல்லப் பெறும் கடற்கரையைக் கண்டு, அது ஆங்கிலேயரின் தனி வியாபாரத்திற்குப் பொருத்தமான இடமாகும் என ஓர்ந்து, அதைப்பெற விரும்பினர். அது அப்



ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டை

பொழுது **ஸ்ரீ ரங்கராயர்** என்ற **சந்திரகிரி** மன்னருக்குச் சொந்தமாயிருந்தது. அதையறிந்த டே அச்சிற்றரசரின் காரியஸ்தர் மூலம் முதலில் அம்மணற் பாங்கை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, பின்பு விலைக்கும் வாங்கினர். அதற்குப்பின் அவ்விடத்தில் ஒரு பெரிய பண்டகசாலை கட்டப்பட்டது. அதுவே தற்பொழுது நாம் சென்னையிற் காணும் **ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டை**

யாகும். அவ்விடத்தில் பிறகு ஒரு பெரிய பட்டணம் தோன்றி, அதற்குச் சந்திரகிரி அரசரின் தந்தையாராகிய **சென்னப்பர்** என்பாரின் ஞாபகார்த்தமாகச் **சென்னப்பட்டணம்** என்னும் பெயரும் இடப்பட்டது.

பம்பாய் அடைதல் (கி. பி. 1668): இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் **சூரத்தில்,** ஆங்கிலேயர்கள் தங்களுடைய பண்டகசாலையைப் பெற்றிருந்தனரேனும், மற்ற ஐரோப்பியர்களின் வியாபாரப் போட்டியால் அவதிப்பட்டுத் தங்களுக்கென ஓர் தனி இடத்தைத் தேட லுற்றனர். கி. பி. 1661ல் ஆங்கில மன்னரான **இரண்டாவது சார்ல்ஸுக்குப்** போர்த்துகீசிய இளவரசியும், அவரது மனைவியுமான ராணியாரின் மூலம் **பம்பாய்** என்னும் தீவு சீதனமாகக் கிடைத்தது. அதை அவர் கி. பி. 1668ல் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வருஷ மொன்றிற்குப் **பத்து பவுன்** வாடகைக்கு தந்தார். பின்பு அது ஆங்கிலக் கம்பெனியாரால் விலைக்கு வாங்கப்பெற்றது. அதுவே தற்காலத்தில் இந்தியாவின் முதன்மையான துறைமுகப் பட்டினமெனப் பிரபலம் அடைந்திருக்கிறது.

கல்கத்தா கிடைத்தல் (கி. பி. 1690): ஆங்கிலேயர்களுக்குக் கல்கத்தா கிடைப்பதற்குப் பல வருடங்களுக்கு முன்பே அவர்கள் வங்காளத்தில் **ஹூக்ளி, புரி, பாட்னு, டாக்கா** முதலான இடங்களில் வியாபாரம் செய்து வந்தனர். கி. பி. 1690ல் **ஜாப் கார்னுக்** என்ற ஒரு ஆங்கில வியாபாரி வங்காள நவாபிடமிருந்து மூன்று கிராமங்களை விலைக்கு வாங்கினர். அவைகளில் ஒன்று **காளிகட்டம்** என்பதாகும். அங்கு பின்பு ஒரு கோட்டை யுண்டாயிற்று. அச்சமயம் இங்கி

லாந்தை ஆண்டுவந்த வில்லியம் என்பாரைப் பெரு மைப் படுத்தக்கருதி அக்கோட்டைக்கு **வில்லியம்** என்ற பெயர் தரப்பட்டது. தற்பொழுது அக்காளி கட்டமே **கல்கத்தா** என்ற விசேஷ நகரமாக விளங்கு கிறது.

ஐக்கியக் கிழக்கிந்தியக் கம்பெனி (கி. பி. 1708) : மேற்குறிக்கப்பட்டுள்ள இடங்கள் கிடைப்பதற்குள் ளாக ஆங்கிலேயரின் வியாபாரம் பெருக ஆரம்பித்தது. லாபமும் அதிகம் கிடைத்தது. அதைக்கண்ட மற்ற ஆங்கில வியாபாரிகள் இந்தியாவுடன் வியாபாரம் செய்யத் தங்களுக்கும் உரிமை வழங்கப் பெறவேண்டு மென்று வாதாடினார்கள். ஆனதுபற்றி ஆங்கிலப் பார்லிமெண்டார் கி. பி. 1698ல் **ஜெனரல் ஸொஸைட்டி** என்ற ஒரு புதுச் சங்கத்திற்கு இந்தியாவுடன் வர்த் தகஞ் செய்ய உரிமை தந்தனர். சில நாட்களுக்கெல் லாம் இரண்டு கம்பெனிகளுக்கு மிடையே **கடும் போட்டி** யெழுந்தது. அதை அறிந்த ஆங்கிலக் கவர்ன் மெண்டார் கி. பி. 1708ல் இரு சங்கங்களையும் ஒன்று படுத்தி, **ஐக்கியக் கிழக்கிந்தியக் கம்பெனி** என்ற ஒரு கூட்டு ஸ்தாபனத்தை யுண்டாக்கினர். அதுவே பின் னர் பிரபலமடைந்து (இந்தியாவில்) ராஜ்யத்தையும் ஏற்படுத்திக்கொண்டது.

B. பிரெஞ்சியரின் முன்னேற்றம்

பிரெஞ்சியர் பலமடைதல் : ஆங்கிலேயர்களைக் காட்டிலும் பிரெஞ்சியர் எளிதாகவும் சீக்கிரத்திலே

யும் தங்களுடைய வியாபாரத்தைப் பெருக்கிக்கொண்டனர். காரணம் யாதெனில் ஆங்கிலக் கம்பெனி தனிப்பட்ட வர்த்தகர்களால் ஏற்படுத்தப் பட்டது; பிரெஞ்சுக் கம்பெனியோ சர்க்காரால் ஏற்படுத்தப் பெற்றுச் சர்க்காரிடமிருந்து ஏராளமாகப் பண உதவியையும் பெற்றது. பிரெஞ்சுக் கம்பெனிக்குக் கிடைத்த முக்கிய வியாபார ஸ்தலங்கள் **சந்திரநாகூர், காரைக்கால், புதுச்சேரி, மாஹி** என்பன வாகும். அவற்றில் புதுச்சேரி பிரஞ்சியருக்குக் கிடைத்த விதத்தை மாத்திரம் இங்கே விவரிப்போம்.

புதுச்சேரி பிரெஞ்சியர் வசமாதல் : மேற்குக் கரையில் **சூரத்** என்ற துறைமுகப் பட்டணத்தில் பல ஐரோப்பியச் சங்கங்கள் வியாபாரத்தை நடத்தி வந்ததுபோல், கிழக்குக் கடற்கரையிலும் **மசூலிப்பட்டணம்** என்னுமிடத்தில் பிரெஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் முதலாயினோர் ஒருங்கே தங்களது வர்த்தகத்தை நடத்திவந்தனர். அதனால் பிரெஞ்சுக்காரர்களுக்கு அங்கு வியாபாரம் மிக மட்டுப்பட்டது. ஆகவே அவர்களுடைய பிரதிநிதி **மார்ட்டின்** என்பவர் **பீஜபூருக்குக்** கட்டுப்பட்ட **கர்நாடக நவாப்** இடமிருந்து தற்போது **புதுச்சேரி** என அழைக்கப்படும் கடற்கரையை விலைக்கு வாங்கி அதை ஓர் துறைமுகப் பட்டினமாகச் செய்து, பிரெஞ்சு இந்திய ராஜ்யத்திற்குத் தலைநகராகவும் ஆக்கினர். அது முதற்கொண்டு இதுவரையிலும் அந் நகரே இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் ராஜதானியாக இருந்து வருகிறது.

வினாக்கள்

(1) ஆங்கிலேயர்கள் மதராஸையாவது, பம்பாயை யாவது, கலகத்தாவையாவது அடைந்த விதத்தை விளக்குக.

(2) ஐக்கியக் கிழக்கிந்தியச் சங்கம் தோன்றிய தெங்ஙனம் ?

(3) பிரெஞ்சுக்காரர்களுக்குப் புதுச்சேரி எவ்வண்ணம் ராஜதானியாக ஏற்பட்டது ?

24. தென்னிந்தியாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் இடையே நடந்த போர்கள் (கி. பி. 1745—1763)

A. இப்போர்கள் தொடங்கும் காலே இந்தியாவின் நிலைமை

தக்ஷிணத்தின் நிலைமை: கர்நாடக யுத்தங்கள் தொடங்கும்பொழுது வட இந்தியாவில் **முகமது ஷா** என்ற டில்லிச் சக்கரவர்த்தி ஆண்டு வந்தார். அவர் பலஹீனர். ஆகவே தக்ஷிணத்தில் **ஹைதராபாத்** என்ற ராஜ்யம் **நிஜாம் உல்முல்க்** என்ற தளகர்த்தரால் சுயேச் சையாய் ஆளப்பட்டுவந்தது. **மஹாராஷ்டிரர்களும்** தங்களது சொந்த ஆட்சியைச் செலுத்தி வந்தனர். கர்நாடகத்திலோ **அன்வார் உதீன்** என்ற நவாப் நிஜா முக்கு அடங்கி ராஜ்யபாரம் நடத்திவந்தார். இவ் விராஜ்யங்களில் அடிக்கொரு தடவை மகுடத்திற்கா கவும் மற்ற காரணங்களுக்காகவும் யுத்தங்கள் நடந்து வந்தன. அச் சமயம் ஆங்கிலேயரும், பிரெஞ்சுக் காரரும் சுதேச மன்னர்களிடையே வசித்து வந்தது பற்றி, இந்தியச் சிற்றரசர்கள் அவர்களது உபகாரத் தைக் கோரினர்.

ஐரோப்பியர்களின் மனப்பான்மை : ஐரோப்பியர்களுக்குமே சொந்தத்தில் தங்களுடைய அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்றும், தங்களது ஐரோப்பிய எதிரிகளை இந்தியாவினின்றும் துரத்தியடிக்க வேண்டுமென்றும் நோக்கங்கள் இருந்து வந்தன. ஆகவே அவர்கள் வெகு இஷ்டத்துடன் உள்நாட்டுச் சண்டைகளில் கலந்து கொண்டனர். சுயேச்சையாகவும் சண்டைகள் புரியத் தொடங்கினர்.

B. கர்நாடக யுத்தங்கள்

1. முதல் கர்நாடக யுத்தம் (கி. பி. 1745-1748)

(a) காரணங்கள் : ஆங்கிலேயர்களும் பிரெஞ்சியரும் முக்கியமாக இந்தியாவில் வியாபாரத்தை நடத்த வந்தவர்கள். ஆகவே வலுத்த வியாபாரப் போட்டியுண்டாகி அவர்களுக்கிடையே மனஸ்தாபமும் ஏற்பட்டது.

அச்சமயம் பிரெஞ்சு ஸ்தலங்களுக்கு **டியூப்ளே** என்பவர் கவர்னராக நியமிக்கப்பட்டிருந்தார். அவர் இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை யொழித்துப் பிரெஞ்சு சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் பெரிதும் முயன்று வந்தார்.

அதற்கேற்றாற்போல் கி. பி. 1744ல் ஐரோப்பாவில் ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஓர் யுத்தம் நிகழ்ந்தது. அது இந்தியாவிலும் இரு திறத்தாருடைய பிரதிநிதிகளால் தொடங்கப் பெற்றது.

(b) சண்டைகள் :

i. **பிரெஞ்சியர் ஆங்கிலேயரைத் தாக்குதல் :** கி. பி. 1744ல் ஐரோப்பாவில் இங்கிலாந்துக்கும் பிரான் ஸுக்கும் இடையே ஒரு போர் தொடங்கியது.

ட்யூப்ளே

அதனது அதிர்ச்சி இந்தியாவிலும் இரு திறத்தினர் இடையேயும் ஏற்பட்டது.

முதலில் பிரெஞ்சுக்காரர்களே யுத்தத்தை ஆரம் பித்தனர். கி. பி. 1746ல் **லாபோர்டினே** என்னும் பிரெஞ்சுக் கப்பற்றலைவர் ஒரு படையுடன் பிரெஞ் சுக்காரர்களின் உதவிக்காக இந்தியாவிற்கு வந்தார். உடனே அவரும் பிரெஞ்சுக் கவர்னர் ஜனரலும்

சேர்ந்துகொண்டு சென்னையைத் தாக்கினார்கள். சென்னை பிடிபட்டது. அடுத்தாற்போல் கூடலூரில் கட்டப்பட்டிருந்த ஸெயிண்ட் டேவிட் கோட்டையும் முற்றுகை யிடப்பட்டது. அச்சமயம் யுத்தப் போக்கைக் குறித்து டியூப்ளேயிற்கும், லாபோர்டினேயிற்கும் இடையே மனஸ்தாபம் மூண்டது. அச்சண்டை முற்றும்போலிருந்தது. ஆனால் அப்பொழுது ஒருபுயற்காற்று கடற்கரையோரமாய் அடிக்கவே, லாபோர்டினேயின் கப்பல்கள் சிதறுண்டன. உடனே அவர் சென்னை அதிகாரிகளுடன் அவசரமாகச் சமாதானஞ் செய்துகொண்டு பிரான்ஸிற்குத் திரும்பிவிட்டார்.

ii. **கர்நாடக நவாபின் எதிர்ப்பும் தோல்வியும்:** இந்த யுத்தம் தொடங்கு முன்னரே ஒரு கப்பற்படை ஆங்கிலேயர்களின் உதவிக்காக மதராஸ் வந்து சேர்ந்தது. அது புதுச்சேரியையும் தாக்கத் தலைப்பட்டது. அப்பொழுது டியூப்ளேயின் தூண்டுதலின் பேரில், தம்முடைய நாட்டில் உள்ள புதுச்சேரியைத் தமது அனுமதியின்றி ஆங்கிலேயர் தாக்கக் கூடாதெனக் கர்நாடக நவாப் தடையுத்தரவு ஒன்றைப் பிறப்பித்தார். அதற்குக் கட்டுப்பட்டு ஆங்கிலக் கப்பற்படையும் திரும்பிச் சென்றது. ஆனால் அதற்கடுத்தபடியாக லாபோர்டினே வந்தபொழுது, டியூப்ளே கர்நாடக நவாபின் சம்மதத்தைப் பெறவில்லை. ஆகவே பிரெஞ்சுக்காரர்கள் மட்டிலும் எவ்வண்ணம் நவாபினது உத்திரவின்றி எதிரிகளைத் தாக்கலாம் என ஆங்கிலேயர் அன்வாருதீனைக் கேட்டார்கள். அவ்வாட்சேபணை நவாபிற்குச் சரியெனப்படவே, டியூப்ளேயை அவர் தமது ஆமோதிப்பைப் பெறாமல் தாக்

கிப் பிடித்துக்கொண்ட மதராஸை ஆங்கிலேயருக்குத் திரும்பத் தந்துவிடக் கட்டளையிட்டார்.

அவ்வாறே செய்ய உடன்பட்ட டியூப்ளே வேண்டுமென்றே காலங் கடத்தினுர். அதைக் கண்ட அன்வாருதீன் பிரெஞ்சியரை யெதிர்த்துச் சென்ருர். **ஸான்தோம்** என்னுமிடத்தில் சண்டை நடந்தது. அதில் அன்வாருதீன் தோற்றுப்போனுர். வெகு சிறு சேனையைக் கொண்டே பெரும்படையை முறியடித்த பிரெஞ்சுக்காரர்களுக்குத் தைரியம் அதிகரித்தது. ஆதலால் அவர்கள் ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமான ஸெயிண்ட் டேவிட் கோட்டையைத் தாக்கினுர்கள்.

இதற்கிடையே ஆங்கிலக் கப்பற்படை யொன்று மதராஸை யடைந்தது. மதராஸ் அச்சமயம் பிரெஞ்சியரின் கைகளிலிருந்ததால் அது புதுச்சேரியை முற்றுகையிட்டது.

(c) சமாதானம்: இப்பவும் கி.பி. 1748-ல் ஐரோப்பாவில் நடந்துவந்த யுத்தம் முடிவடைந்தது. ஆகவே இந்தியாவிலும் யுத்தம் நிறுத்தப்பெற்று ஓர் உடன்பாடு செய்து முடிக்கப்பட்டது. அதன்படி **மதராஸ்** ஆங்கிலேயர்களுக்குத் திரும்ப வழங்கப்பெற்றது.

இந்த யுத்தத்திற்குப் பின்பு கர்நாடகத்தில் பிரெஞ்சுக்காரர்களின் அதிகாரம் ஓங்கலாயிற்று.

2. இரண்டாவது கர்நாடக யுத்தம் (கி. பி. 1749–1754)

(a) காரணங்கள்: “உருசிகண்ட பூனை உரியை உரியைத்தாவும்” எனக் கூறுவதுபோல் டியூப்ளே, பெரிய சுதேசச்சேனை ஒன்றைச் சுலபமாகத் தோற்



கர்நாடக யுத்த நிகழ்ச்சிகளை விளக்கும் படம்

கடித்ததின் நிமித்தம், மற்ற வெற்றிகளையும் எளிதில் அடையலாமென எண்ணினார். அதற்காக அவர் ஏராளமான பொருட்செலவின்பேரில் ஒரு பெரிய படையைத் தயாரித்தார்.

மேலும் கர்நாடகத்திலும் ஹைதராபாத்திலும் பட்டத்திற்காகப் போர்கள் தொடங்கி, முறையே, **சந்தாஸாஹிபும், முஸபர்ஜங்கும்** பிரெஞ்சுக்காரர்களின் உதவியை நாடினர்.

இவை நிற்க, முதல் கர்நாடக யுத்த முடிவில் ஏற்பட்ட சமாதானம் (கி.பி. 1748) அச்சமயத்திற்கு மாத்திரம் சண்டையைப் போக்கியதே யல்லாமல் ஓர் நிரந்தர ஏற்பாட்டை உண்டுபண்ணவில்லை.

கடைசியாகப் பிரெஞ்சுக்காரர்கள் சுதேச மன்னர்களின் வியவகாரங்களில் தலையிட்டுக் கொண்டதால், ஆங்கிலேயர்களும் அவ்வாறே செய்யவேண்டியதாயிற்று.

இத்தகைய காரணங்களால் மீண்டும் யுத்தம் தொடங்கியது.

(b) சண்டைகள் :

i. **கர்நாடகத்தில் நடந்த நிகழ்ச்சிகள் :** நிஜாம் ராஜ்யத்தின் மன்னரான அஸப்ஷா ஆட்சிபுரிவதற்கு முன்னமேயே கர்நாடகம் ஒரு முகம்மதியச் சந்ததியாரால் ஆளப்பட்டு வந்தது. கர்நாடக யுத்தங்கள் நிகழ்வதற்குச் சற்று முன்பாக அவ்வம்சத்தைச் சார்ந்த **தோஸ்து அலி** எனப்பட்ட நவாப் மஹாராஷ்டிர எதிர்ப்பால் கொலையுண்டுபோனார். அதற்குப் பின்பு நிஜாம் **அன்வாருதீன்** என்பாரை நவாபாக

ஆக்கினர். அதைக்கண்ட தோஸ்து அலியின் மருமகனை **சந்தா ஸாஹிப்** பட்டத்தைப்பெற விரும்பிப் பிரெஞ்சியரின் உதவியை நாடினர். ஆனல் அவர்களுடைய இணைப்பு கிட்டுமுன் அவர் மஹாராஷ்டிரர்களால் எதிர்க்கப்பட்டு **ஸதாராவில்** சிறையிலடைக்கப் பட்டார். அப்பொழுது கர்நாடகத்தில் சந்தா சாஹிப் மூலம் தம் அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ள இச்சை கொண்ட டியூப்ளே மஹாராஷ்டிரர்களுக்குப் பணம் கொடுத்து அவரை விடுவித்து அன்வாருதீனுக்கெதிரே சண்டைசெய்யத் தூண்டினர்.

கி. பி. 1749ல் **ஆம்பூர்** என்னுமிடத்தில் இரு திறத்தாரும் சந்தித்துச் சண்டையிட்டனர். மிகத் திறமைவாய்ந்த பிரெஞ்சுத் தளகர்த்தர் புஸ்ஸி சந்தா ஸாஹிபின் பக்கமிருந்து போர் புரிந்தார். அன்வாருதீன் தோற்றுப்போய் உயிரையும் இழந்தார். அவரது மூத்த குமாரர் சிறையிலடைக்கப்பட்டார். பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து தப்பிய இரண்டாம் புதல்வரான **முஹமது அலி** திருச்சிறுப்பள்ளிக்கு ஓடி ஒளிந்து கொண்டார். சந்தா ஸாஹிப் கர்நாடக நவாப் என முடி சூட்டப் பெற்றுர். கர்நாடகத்தில் பிரெஞ்சுக்காரரின் ஆதிக்கம் வளர்ந்தது.

ii. **தக்ஷிணத்தில் நிகழ்ந்த சம்பவங்கள்**: கி. பி. 1748ல் ஹைதரபாத் மன்னர் இறந்தார். அதனல் அந்நாட்டு மகுடத்திற்காக அவருடைய இரண்டாவது குமாரரான **நாஸர் ஜங்கிற்கும்**, பேரரான **முஸபர் ஜங்கிற்கும்** சண்டை யுண்டாயிற்று. அப்பொழுது பிரெஞ்சுக்காரர்களை முஸபர் ஜங் தமக்குதவுமாறு

வேண்டினார். ஆனால் அவர் தொடுத்த போரில் நாஸர் ஜங்கிற்கே வெற்றி கிடைத்தது. எனினும் தமது பிரபுக்களால் அவர் கி. பி. 1750 ல் இரகசியமாகக் கொல்லப்பட்டார். ஆகவே பிரெஞ்சுக்காரர்கள் முஸபர் ஜங்கிற்கு முடி சூட்டினார்கள். அவரும் இரண்டு மாதங்களுக்கே ஆட்சி புரிந்தார். பின்னர் நாஸர் ஜங்கினது விரோதிகளாலேயே அவரும் கொலை யுண்டார்.

அந்நிகழ்ச்சிக்குப் பின் நாஸர் ஜங்கின் இளைய சகோதரர் **ஸலபட் ஜங்** பிரெஞ்சு உதவியுடன் பட்டம் பெற்றார். அவர்களுடைய பேருபகாரத்திற்காக அவர் அவர்களுக்கு **வடசர்க்கார்** அல்லது **கஞ்சம், விசாகப்பட்டினம், கோதாவரி, கிருஷ்ணை** என்ற நான்கு ஜில்லாக்களை நன்கொடையாக வழங்கினார். பிரெஞ்சுத் தளகர்த்தரான **புஸ்ஸியை** அவருடைய சேனையுடன் தமது நாட்டில் வைத்துக் கொள்வதாகவும் ஏற்றுக் கொண்டார். அதனால் தக்ஷிணத்தில் பிரெஞ்சு அதிகாரம் ஓங்கிற்று.

iii. **முகமது அலியின் கஷ்டம்:** அடுத்த படியாக சந்தாஸாஹிபும், பிரெஞ்சுக் காரர்களுமாகச் சேர்ந்து திருச்சினாப்பள்ளியில் ஒளிந்திருந்த முகமது அலியைப் பிடிக்க எத்தனித்தனர். **திருச்சினாப்பள்ளி முற்றுகை**யிடப்பட்டது. அப்பொழுது முகமது அலி ஆங்கிலேயரைத் தமக்குதவுமாறு வேண்டினார். ஆனால் அவர்களுடைய உதவி கிட்டுமுன் திருச்சினாப்பள்ளியில் உணவுப் பொருள்கள் அற்றுப்போய், முகமது அலி தஞ்சமடையத் தயாராயிருந்தார்.

iv. ஆற்காடு முற்றுகை கி. பி. 1751: ஆனால் அச்சமயம் ஆங்கிலேயர் சும்மா இருக்கவில்லை. முகமது அலிக்கு உதவ அவர்கள் சில ஏற்பாடுகளைச் செய்த

கிளைவ்

னர். கிளைவ் என்னும் ஆங்கிலத் தளகர்த்தர் சிறுவராயிருந்தும், மிகப் புத்தி நுட்பம் வாய்ந்தவர். முகமது அலிக்கு உதவவேண்டுமாயின் சந்தா ஸாஹிபினது தலை நகராகிய ஆற்காட்டை யெதிர்ப்பதே ஏற்றதாகும் என அவர் கூறினர். ஆங்கில அதிகாரிகள் அதற்கிசைந்து, ஒரு சிறு படையுடன் கிளைவை ஆற்காட்டிற்கனுப்பினார்கள். கிளைவ் **ஆற்காட்டை** வெகு எளிதில் **ஜெயித்தார்**. உடன் அவர் அதன் கோட்டையையும் பலப்படுத்தினர்.

(v) ராஜா ஸாஹிபின் வீண் முயற்சி: கிளைவ் எதிர்பார்த்தவண்ணமே சந்தா ஸாஹிப் தமது மைந்தரான ராஜா ஸாஹிபின் கீழ், தமது பாதிச்சேனையை கி. பி.

1751ல் ஆற்காட்டைப் பிடிக்க அனுப்பினர். 50 நாட்கள் வரை முற்றுகை நடந்தது. கோட்டையிலிருந்த வீரர்கள் குடிக்கக் கஞ்சியுமின்றி தவித்தபோதிலும் ராஜாஸாஹிபால் அவர்களை ஜயிக்க முடியவில்லை.

நல்ல வேளையாக அச்சமயம் ஸெயிண்ட் டேவிட் கோட்டையிலிருந்து சேனை ஒன்றும், மஹாராஷ்டிர சேனையொன்றும் கிளைவிற்கு உதவ ஆற்காட்டையடைந்தன. ஆகவே கிளைவ் தைரியமாகத் தமது வீரர்களுடன் வெளிவந்து, உதவிச் சேனைகளுடன் சேர்ந்துகொண்டு, எதிரிகளைத் தாக்கினர். கிளைவிற்கே வெற்றி கிடைத்தது. முறியடிக்கப்பட்ட ராஜா ஸாஹிப் **ஆரணியில்** பின்னும் தோல்வியுற்று **செஞ்சிக் கோட்டைக்குள்** ஓடி ஒளிந்துகொண்டார்.

(vi) **முகமது அலிக்கு உதவுதல்:** உடனே கிளைவும் ஆங்கிலச் சேனையின் தலைவரான மேஜர் லாரென்ஸும் **காவிரிப்பாக்கம்** என்ற இடத்தில் பிரெஞ்சுக்காரர்களாலும், நவாபினது சேனையாலும் தொடுக்கப்பெற்ற மற்றொரு எதிர்ப்பையும் போக்கி, முகமது அலியை விடுவிக்கத் **திருச்சினுப்பள்ளிக்குச்** சென்றார்கள். ஆங்கு நடந்த போரில் சந்தா ஸாஹிப் தோற்றுப்போய் **தஞ்சாவூருக்கு** ஓடினர். அங்குச் சில நாட்களுக்கெல்லாம் ஆங்கிலேயர்களின் நண்பரான தஞ்சை மன்னரின் உத்தரவால் கொல்லப்பட்டார். **ஸ்ரீரங்கத்தில்** ஓடி ஒளிந்த பிரெஞ்சுச் சேனையும் முறியடிக்கப்பட்டது. பின்னர் முகமது அலி நவாப் ஆக்கப்பட்டார்.

(c) சமாதானம் (கி. பி. 1754): கர்நாடகத்தில் ஆங்கிலேயரின் அதிகாரம் நிலைபெறலாயிற்று.

பிரெஞ்சு அதிகாரம் அழியத் தொடங்கிற்று. இருதரப்பினர்களும் உள் நாட்டுச் சச்சரவுகளில் தலையிடுவதில்லையென ஒப்புக்கொண்டனர்.

தக்ஷிணத்தில் மாத்திரமே இன்னும் பிரெஞ்சு அதிகாரம் கொஞ்சம் இருந்து வந்தது.

டியூப்ளேயின் வீழ்ச்சி: பிரெஞ்சுச் சர்க்காரின் அனுமதியின்றிப் போரைத் தொடங்கியதாலும், சண்டையில் தோல்வியுற்றதாலும், சண்டை சச்சரவுகளால் வியாபாரம் மட்டுப்பட்டதாலும் டியூப்ளே பிரான்ஸிற்கு கி. பி. 1754ல் அழைக்கப்பட்டார். அங்கு பிரெஞ்சியரால் இகழப்பெற்று தமது ஆஸ்தியையிழந்து, தரித்திரத்தால் மிக வருந்தி இறந்தார். தன்னலமற்ற அவரது நோக்கத்தை அறியமாட்டாத பிரெஞ்சியர், இந்தியச் சாம்ராஜ்யத்திற்காக அவர் அரும் பாடுபட்டதைச் சற்றேனும் உணராமல், அவர்மீது குற்றத்தைச் சுமத்தித் தண்டனைக்குள்ளாக்கி அவரை மாளச் செய்தனர். சண்டை முடிந்ததும் நாடு திரும்பிய **கிளைவ் "ஆற்காட்டு வீரர்"** என மெச்சப்பெற, அவரைக் காட்டிலும் விசேஷமாக ஸேவை புரிந்த டியூப்ளே தம் நாட்டாரால் இகழப்பட்டது எவ்வளவு பரிதாபம்!

3. மூன்றாவது கர்நாடக யுத்தம் (கி.பி. 1756—1763)

(a) காரணம்:

இரண்டாவது கர்நாடகயுத்தம் முடிந்து இரண்டு வருடங்களுக்கெல்லாம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும், ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் மீண்டும் யுத்தம் ஆரம்பமாயிற்று. முதல்

கர்நாடக யுத்தத்தின்பொழுது நிகழ்ந்தது போலவே இந்தியாவிலும் அவ்விரு ஐரோப்பிய நாட்டினர்களுக்கும் இடையே போர் தொடங்கியது. அதற்கு முன்பே, இந்நாட்டிலும் சண்டை நிச்சயம் நேரும் என ஓர்ந்து, கிளைவ் **சந்திர நாகூரைப்** பிடித்துக்கொண்டார். மேலும் இரண்டாவது கர்நாடக யுத்தத்தின் உடன்படிக்கைக்கு மாறுதலாக உள்நாட்டு வியவகாரங்களில் இரு கட்சியினரும் கலந்து கொண்டனர்.

ஆகவே ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் போர் தொடுத்தனர்.

(b) சண்டைகள் :

(i) **லாலியின் எதிர்ப்பு :** புதுச்சேரியில் டியூப்ளேயிக்குப் பின் **லாலி** எனப்பட்டவர் கி. பி. 1758 ல் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். வங்காளத்தில் **சந்திர நாகூர்** ஆங்கிலேயர்களால் பிடிபட்டு விட்டதெனக் கேள்வியுற்றதும், கர்நாடகத்தில் ஆங்கில ஸ்தாபனங்களைத் தாக்குவதற்காக லாலி பிரயத்தனப்பட்டார். முதலில் **ஸெயிண்ட் டேவிட் கோட்டை** எதிர்ப்புக்கு இலக்காகிப் பிடிக்கப்பட்டது. பின்னர் லாலி **ஆற்காட்டையும்** ஜெயித்தார். அடுத்தபடியாக அவர் **சென்னை**யைப் பிடிக்க முயற்சித்தார். அதற்காக அவர் ஹைதராபாத்தில் இருந்துகொண்ட பிரெஞ்சு ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வந்த **புஸ்ஸி**யைத் தம் சேனையுடன் மதராஸிற்கு வரும்படி உத்தரவிட்டார்.

அச்சமயம் கிளைவ் வங்காளத்தில் இருந்தார். அவர் புஸ்ஸி மதராஸுக்குச் சென்றார் என்பதையறிந்ததுமே, அதுதான் ஹைதராபாத்தில் பிரெஞ்சு

அதிகாரத்தைக் குலைக்கத் தகுந்த சமயமெனக் கருதி, கர்னல் போர்ட் என்பவரின் கீழ் ஓர் சேனையைத் தக்ஷிணத்திற் கனுப்பினர். அவ்வீரர் பிரெஞ்சுக்காரரைத் தோற்கடித்து வட சர்க்காரையும் கைப்பற்றினர்.

ii. **ஆங்கிலேயரின் வெற்றிகள்:** தக்ஷிணத்தில் பிரெஞ்சியரின் தோல்வி ஏற்படு முன்னரே, லாலியும் புஸ்ஸியுமாகச் சென்னையை முற்றுகையிட ஆரம்பித்து விட்டனர். ஆறுமாத காலம் முற்றுகை மும்மரமாக நடந்து வந்தது. ஆனல் சென்னையைப் பிரெஞ்சுக்காரர்களால் பிடிக்க முடியவில்லை.

அச்சமயம் இங்கிலாந்திலிருந்து ஆங்கிலேயர்களின் உதவிக்காக **ஸர் ஐர் கூட்** என்ற தளகர்த்தரின் கீழ் ஒரு சேனை இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்டது. அவர் சென்னையை முற்றுகையிட்டிருந்த லாலியைத் தாக்கியதுமே லாலி ஓட்டம் பிடித்தார். ஆனல் கூட் அவரைப் பின் தொடர்ந்தார். கி. பி. 1760ல் **வந்தவாசி** என்னுமிடத்தில் ஆங்கிலத் தளகர்த்தர் லாலியையும், புஸ்ஸியையும் தோற்கடித்தார். புஸ்ஸி சிறையானர். லாலி புதுச்சேரிக்குத் தப்பியோடினர்.

பிரெஞ்சியர்கள் இவ்வண்ணம் புறங்காட்டி ஓடவே, இந்தியாவிலிருந்த அவருடைய வர்த்தக ஸ்தாபனங்கள் ஒன்றன்பின் ஒன்ருக ஆங்கிலேயர்களால் பிடிபட்டன. கி. பி. 1761ல் **புதுச்சேரியும்** ஆங்கிலேயரின் வசம் வந்தது. அதன் கோட்டை கொத்தளங்கள் முற்றிலும் தகர்க்கப்பட்டன.

(c) **சமாதானம்** (கி. பி. 1763): கி. பி. 1763ல் ஐரோப்பாவில் இரு திறத்தினர்க்கும் இடையே சமாதானம் ஏற்பட்டது. அது இந்தியாவிலும் ஓர் உடன்படிக்கையை உண்டு பண்ணியது. அவ்வுடன்பாட்டின்படி பிரெஞ்சுக்காரர்களுக்குப் **புதுச்சேரி, காரைக்கால், சந்திர நாகூர்** என்னுமிடங்களே திரும்பத் தரப்பட்டன. மற்றப் பிரெஞ்சு ஸ்தலங்கள் ஆங்கிலேயருக்குச் சொந்தமாயின.

பிரெஞ்சுக்காரர்கள் வங்காளத்தில் ராஜ்ய ஸ்தாபன முயற்சியை மீண்டும் கைக்கொள்ளக் கூடாதென ஏற்பாடாயிற்று.

ஸலபட் ஜங்கால் பிரெஞ்சுக்காரருக்கு அளிக்கப்பட்ட **வட சர்க்கார்** ஆங்கிலேயர்களுக்கு வழங்கப்பெற்றது.

ஸலபட் ஜங்கினுடையவும் முகமது அலியினுடையவும் பட்ட உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

லாலி பிரான்ஸுக்கு அனுப்பப்பெற்று அங்கு அரசாங்கத்தாரால், இந்தியாவில் பிரெஞ்சு ஸ்தாபனங்களை இழந்ததற்காகத் தூக்கிலிடப்பட்டார்.

பிரெஞ்சு அதிகாரம் ஒடுங்கியது. ஆங்கிலேயர்களுக்கு எதிர்ப்பு இல்லாததால் அவர்களுடைய அதிகாரம் விரைவில் வளரத் தலைப்பட்டது.

C. பிரெஞ்சுக்காரர்களின் தோல்விக்குக் காரணங்கள்

i. **கடல் வலிமையும் ஏற்ற சமயத்தில் உதவியும்:** ஆங்கிலேயர்கள் இந்தியாவில் ஜயமடைந்ததற்கு முக்கிய காரணம் ஐரோப்பாவிலும் இந்தியக் கடல்களிலும் அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட கடல்

வலிமையேயாகும். ஆங்கிலக் கப்பற்படை பலம் பொருந்தியதாயும், தேர்ச்சிபெற்ற மாலுமிகளைக் கொண்டதாயு மிருந்தது. ஏற்ற சமயங்களில் இந்தியா வில் இருந்த ஆங்கிலேயர்களுக்கு உதவவும் வந்தது. பிரெஞ்சுக்காரர்களுக்கு இம்மாதிரி கடல் வலிமை யும் கிடையாது; வேண்டிய சந்தர்ப்பங்களில் இந்தி யாவிற்குப் படையை யனுப்ப அவர்களால் சாத்தியப் படவும் இல்லை.

ii. ஆங்கிலத் தளகர்த்தர்களின் ஆற்றலும் சுதந்திர மும்: இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட **கிளைவ், மேஜர் லாரென்ஸ், போர்ட், கூட்** முதலிய ஆங்கிலத் தளகர்த்த ருக்கு இணை பிரெஞ்சு வீரர்களில் ஒருவரே யிருந் தார். ஆனால் சுயேச்சையாக எக்காரியத்தையும் செய்ய அவர் அனுமதிக்கப்படவில்லை. ஆங்கிலேய ரைப் பாருங்கள்! கிளைவ் சேனாதிபதியாய் இல்லா விட்டாலுங்கூட, ஆற்காட்டைத் தாக்கவேண்டு மென்ற அவரது யோசனை எல்லோராலும் யேற்கப் பட்டது.

iii. தளகர்த்தர்களிடையேயும் பிரதிநிதிகளினிடையே யும் ஒற்றுமை: மேலும் ஆங்கிலத் தளகர்த்தர்களிடத் திலும், ஆங்கில அதிகாரிகளிடத்திலும் ஒற்றுமை நிலவியிருந்தது. அதன் காரணமாகத் தக்க யுத்த யோசனைகள் கைக்கொள்ளப்பட்டு உடனுக்குடனே அமுலுக்கும் கொண்டு வரப்பட்டன. பிரெஞ்சுக் காரர்களிடத்திலோ அவ்வொற்றுமை கிடையாது. உதாரணமாக முதல கர்நாடக யுத்தத்தின் பொழுது லாபோர்டினேயும் டியூப்ளேயும் எவ்வாறு சண்டை யிட்டுக் கொண்டனர், பாருங்கள்!

வினுக்கள்

(1) மூன்று கர்நாடக யுத்தங்களில் யாதாயினும் ஒன்று நிகழ்ந்ததற்குக் காரணங்களைக் குறிப்பிடுக.

(2) டியூப்ளேயின் ராஜீய நோக்கமென்ன? அது ஏன் வெற்றி பெறவில்லை?

(3) கிளைவின் போர்த்திறத்தை விளக்கத் தக்க உதாரணமொன்றைத் தருக.

(4) கர்நாடக யுத்தங்களில் பிரெஞ்சுக்காரர் தோல்வியுறப் பொதுக் காரணங்களுள் இரண்டினை எடுத்தெழுதுக.

(5) குறிப்புகள் வரைக:—ஆம்பூர் சண்டை, பிரெஞ்சுக்காரர்கள் வட சர்க்காரை அடைந்த விதம்.

(6) கர்நாடக யுத்தம் தொடங்குங்கால் தக்ஷிணத்தின் நிலை எவ்வாறிருந்தது?

25. வங்காளமும் ஆங்கில ஆதிக்கமும்

ஔரங்கசீபிற்குப் பின் வங்காள நிலைமை: ஔரங்கசீபிற்குப் பின் ஆண்ட அரசர்களுடைய காலத்தில் வங்காளம் சுயேச்சை யடைந்தது. அது முதற்கொண்டு அது டில்லி மன்னனுக்குக் கப்பம் மட்டிலும் கட்டி, ஒரு தனி நவாபால் சகல சுதந்திரத்துடன் ஆளப்பட்டு வந்தது.

ஸிராஜ் உத் தௌலா: அலிவர்டிகான் என்ற வங்காள நவாப் ஆட்சி புரிந்து வந்தபொழுது நமது நாட்டில் வியாபாரம் செய்துவந்த ஆங்கிலேயரிடம் சிநேகப்பான்மை கொண்டிருந்தார். அவருடைய பேரர் கி. பி. 1756-ல் பட்டத்திற்கு வந்தவுடன் ஆங்கிலேயரின் நிலைமை மாறுபட்டது. **ஸிராஜ் உத் தௌலா** அவர்களை எவ்வண்ணமாவது தம் நாட்டை விட்டு விரட்டி

யடித்து விடவேண்டுமெனப் பெருமுயற்சி செய்தார். ஆங்கிலேயர் மெல்ல மெல்லத் தங்களது ஆதிக்கத்தை வளர்க்க ஆரம்பித்து விடுவார்கள் என்ற பயமே வங்காள நவாபை அவ்வாறு செய்யத் தூண்டியது.

வங்காள நவாப் ஆங்கிலேயரை எதிர்த்தல்: ஸிராஜ் உத்தௌலா வங்காளத்தில் வியாபாரம் செய்து வந்த ஆங்கிலேயருடன் விரோதித்துக் கொள்ள வேறு இரண்டு காரணங்களும் ஏற்பட்டன. தங்களிடத்தில் தஞ்சம் புகுந்த **கிருஷ்ணதாஸ்** என்ற நவாபின் விரோதி ஒருவனை ஆங்கிலேயர்கள் ஸிராஜ் உத்தௌலாவிடம் சேர்ப்பிக்க மறுத்த தொன்று. மேலும் நவாபின் ஆணைக்கு மீறி ஆங்கிலேயர்கள் கல்கத்தாவிலுள்ள **வில்லியம் கோட்டையைப்** பலப்படுத்தியது மற்ெறான்று. ஆகவே ஸிராஜ் உத்தௌலா ஆங்கிலேயர் மீது போர் தொடுத்தார்.

வங்காள நவாப் ஒரு பெரிய படையைத் திரட்டிக் **காஸிம் பஜார்** என்ற இடத்திலிருந்த பண்டகசாலையைக் கைப்பற்றி **வில்லியம் கோட்டையையும்** தாக்கினார். கோட்டையினின்றும் ரகசியமாகச் சிலர் தப்பியோடினர். எஞ்சியிருந்தவர்கள் சிறை செய்யப்பட்டனர்.

ஆங்கிலேயர் எதிர்ப்பு: இச் செய்தியை யறிந்ததுமே மதராஸிலிருந்து **கிளைவ்** ஒரு சேனையுடனும், **வாட்ஸன்** என்பவர் ஓர் கப்பற் படையுடனும் மதராஸினின்றும் வங்காளத்திற்குச் சென்று ஸிராஜ் உத்தௌலாவின் மதத்தைத் தணிக்க முயன்றனர். **கல்கத்தாவில்** ஆங்கிலேயரின் அதிகாரம் மீண்டும் எளிதில் நாட்டப்பெற்றது. ஆங்கிலேயரிடம் தோல்வியுற்ற

வங்காள நவாப் கிளைவுடன் ஓர் உடன் பாட்டிற் கிசைந்தார். அதன்படி ஸிராஜ் உத் தௌலா தம்மிட மிருந்த கைதிகளை விடுவித்துக் கோட்டையைச் செப் பனிடச் சம்மதித்து, வங்காளத்தில் ஆங்கிலேயரின் வியாபார உரிமையையும் ஏற்றுக்கொண்டார். ஆனால் அவர் மனத்துள் எழுந்த கோபம் மட்டிலும் நீங்கிய பாடில்லை. அது ஆங்கிலேயருக்கும் தெரிந்த விஷயமே.

கிளைவின் சதி: இது இவ்வாறாக, கி. பி. 1756-ல் ஐரோப்பாவில் ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர் களுக்கும் நடுவிற் போர் தொடங்கியது. அச்சமயம் கிளைவ் இந்தியாவிலும் யுத்தம் ஏற்படும் எனவூகித்து, அச்சண்டையில் தாம் முந்தவேண்டுமெனப் பிரெஞ் சுக்காரர்களுக்குச் சொந்தமான **சந்திர நாகூர்** என்னும் ஸ்தலத்தைக் கைப்பற்றினார். அவ்வெற்றி ஸிராஜ உத் தௌலாவின் பொறுமையையும் அச்சத்தையும் வளர் த்தது. ஆகவே அவர் பிரெஞ்சுக்காரரின் சிநேகத் தைக் கோரினார். ஸிராஜ உத் தௌலாவை மீண்டும் எதிர்க்க அதுவே போதிய காரணமாகு மெனக் கொண்டு கிளைவ் அவரை யெதிர்க்க யெத்தனித்தார்.

அதற்கேற்றாற்போல் வங்காளக் குடிகளும் தங்க ளுடைய நவாபிடத்தில் வெறுப்புற்று **மீர்ஜாபர்** என்ற தளகர்த்தரை நவாப் ஆகுமாறு வேண்டினர். மீர்ஜாப ருக்கும் சபலம் தட்டியது. ஆகவே அவர் கிளைவின் உதவியை நாடினர். அவ்வாறு செய்தது கிளைவுக்குப் "பழம் நழுவிப் பாலில் விழுந்தது" போல் ஆயிற்று ஆகவே கிளைவ் உடனே அதற்குச் சம்மதித்து சிராஜ உத்தௌலாவிற்கெதிரே சண்டை நடக்குங்கால், மீர்

ஜாபர் நவாபது சேனையுடன் மெள்ள ஆங்கிலேயரின் பக்கம் வந்துவிட வேண்டுமெனப் பேசிமுடித்தார்.

அச்சதி **உமர் சந்திரர்** என்ற ஒரு ஹிந்து ஸௌகாரின் மூலம் திட்டஞ்செய்யப்பட்டது. அவ் விழிய உபகாரத்திற்காக கிளைவ் அவருக்கு 40 லக்ஷம் ரூபாய் தருவதாக வாக்களித்தார். ஆனால் அவரை முற்றிலும் ஏமாற்றக் கருதி, கிளைவ் **கள்ளப்பத்திரம்** ஒன்றைத்



வங்காளச் சண்டையில் சம்பந்தப்பட்ட ஊர்கள்

தயாரித்து அதில் வாட்ஸனுடைய கையெழுத்தைத் தாமேயிட்டு உமர் சந்திரரை ஏமாற்றிப் பணம் தராது தப்பித்துக் கொண்டார். அவ்வித ஏமாற்றம் அந்த **ராஜத்ரோஹி** விஷயத்தில் பொருத்தமேயாயினும் கிளைவின் **இழிசெயலை** அது எத்துணையும் கௌரவப் படுத்தாது.

பிளாஸிச் சண்டை (கி. பி. 1757) **யும் அதன் பலன்களும்:** இந்த இரகசிய உடன்படிக்கைக்குப் பின்பு

பிளாஸி என்ற இடத்தில் ஆங்கிலேயருக்கும் ஸிராஜ் உத் தௌலாவிற்கும் யுத்தம் தொடங்கியது. முன்பே ஒப்புக்கொண்டபடி, சண்டையின் மத்தியிலே, மீர் ஜாபர் தம் சேனையுடன் கிளைவை வந்தடைந்தார். அதைக் கண்ணுற்ற ஸிராஜ் உத்தௌலா மனந் தளர்ந்து, யுத்த களத்தினின்றும் தப்பியோடினர். ஆனல் அவர் மீர் ஜாபரின் புதல்வரான **மீரான்** என்பவரால் கொல்லப்பட்டார். அதற்குப் பின்பு மீர் ஜாபர் **நவாப்** ஆக்கப்பட்டார்.

இச் சண்டையின் மூலம் ஆங்கிலேயருக்குப் பல நன்மைகள் உண்டாயின. கிளைவுக்கு ஒரு கோடி ரூபாய்க்குமேல் வெகுமதி கிடைத்தது. புதிய நவாப் **ஆங்கிலேயருக்கு அடங்கி** வங்காளத்தை ஆளத்தொடங்கினர். ஆங்கிலேயருக்கு 24 **பர்காணங்கள்** என்ற ஜில்லா ஜாகீராக வழங்கப்பெற்றது. அதனின்றும் வருஷா வருஷம் நவாபிற்குக் கிடைக்கவேண்டிய வரிப்பணம் கிளைவிற்கே அளிக்கப்பட வேண்டுமெனத் திட்டம் செய்யப்பெற்றது. அதனல் அஜ் ஜில்லாவிற்கு **கிளைவினது ஜாகீர்** என்ற காரணப்பெயர் தோன்றலாயிற்று. இப் பெரிய வெற்றியை ஆங்கிலேயர்களுக்கு உண்டுபண்ணியதால், மேலதிகாரிகளால், வங்காளத்தில் இருந்த ஆங்கிலேயரின் ஸ்தாபனங்களுக்கு **கிளைவ்** கி. பி. 1758ல் **கவர்னர் ஆக** நியமிக்கப் பெற்றார்.

மீர் ஜாபரின் ஆட்சி (கி. பி. 1757—1760): ஆங்கிலேயரால் உதவப்பெற்ற **மீர்ஜாபரின் ஆட்சி,** பல விதங்களிலும் திறனற்றிருந்தது. வங்காளத்தில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் ஓங்கிற்று. நவாபின் அதிகாரம்

மட்டுப்பட்டது. மேலும், தமக்குக் கப்பம் கட்டவில்லையென்றும் நவாப் பதவிபெறத் தமது அனுமதி பெறவில்லையென்றும் குறைகூறி, அயோத்தி நவாபின் துணைகொண்டு, முகலாய சக்கரவர்த்தி மீர்ஜாபரை யெதிர்த்தார். பாட்னு தாக்கப்பட்டது. மேலும் மஹாராஷ்டிரர்களும் வங்காள நவாபின்மீது போர் தொடுத்தனர். இவ்விரு எதிர்ப்புகளையும் ஆங்கிலேயர்களே போக்கடிக்கச் சாத்தியமாயிற்று. நிற்க, ஆங்கிலேயர்களுக்குப் பரிசாக ஏராளமான பொன் வழங்கியதாலும், யுத்தச் செலவினுலும், ஆடம்பர வாழ்க்கையாலும், பொக்கிஷத்திலிருந்த பணமெல்லாம் செலவழிந்து, பணமுடை யேற்பட்டது. கட்டாய வரிவாங்கலா மென்ருலோ அதற்கும் ஆங்கிலேயரது ஆட்சேபம் பிறந்தது.

எவ்வண்ணமும் தம்முடைய கஷ்டங்களை நிவர்த்தித்துக் கொள்ளச் சாத்தியமில்லாததைக் கண்ட மீர்ஜாபர், சுயேச்சையாக ஆள விரும்பி, கி. பி. 1758ல் ரகசியமாக டச்சுக்காரர்களின் உதவியை நாடினுர். அதையறிந்த கிளைவ் டச்சுக்காரரின் வியாபார ஸ்தலமாகிய சின்ஸுராவைப் பிடித்து, எதிரிகளை அடிபணியச் செய்தார். அம் முயற்சியிலும் தோல்வியடைந்த மீர்ஜாபர் ஆங்கிலேயருடன் சமாதானம் செய்து கொண்டார். அவர்களுடைய நிர்ப்பந்தங்கள் பின்னும் அதிகரித்தன.

அதற்குப்பின் கி. பி. 1760-ல் கிளைவ் தேக அசௌக்கியத்தால் இங்கிலாந்திற்குச் சென்ருர். அவருடைய பதவியை வான்ஸிடார்ட் என்பவர் ஏற்ருர்.

மீர்காஸிம் நவாபாகுதல்: வான்ஸிடார்ட்டினுடைய காலத்தில் மீர்ஜாபரின் பலஹீனம் பின்னும் அதிகரித்தது. ஆகவே அவர் மீர்ஜாபரை நவாப் பதவியினின்றும் விலக்கி அவருடைய மருமகனுன **மீர்காஸிம்** என்பருக்குப் பட்டமளித்தார். தாம் நவாப் ஆக்கப்பட்டதற்காக அவர், வருஷமொன்றிற்கு 50 லட்சம் ரூபாய் வருமானத்தைத் தரக்கூடிய பர்துவான், மிதுனபுரி, சிட்டகாங் என்ற ஜில்லாக்களை ஆங்கிலேயருக்கு நன்கொடையாக வழங்கினுர். மேலும் ஏராளமான பணத்தையும் ஆங்கில உத்தியோகஸ்தர்களுக்குத் தந்தார்.

மீர்காஸிமின் அரசியல் திட்டங்களும், ஆங்கிலேயரின் விரோதமும்: மீர்காஸிம் திறமை வாய்ந்தவர். தாம் நவாப் பதவியடைந்ததும் தமது செலவைக் குறுக்கி, முன் உண்டான கடன்களையெல்லாம் தீர்த்துப் பொக்கிஷத்தை நேர்மையான வழியில் நிரப்பி, இராணுவத்தையும் பலப்படுத்தினுர்.

பின்பு அவர் ஓர் முக்கியச் சீர்திருத்தத்தைச் செய்ய ஆரம்பித்தார். அதாவது ஆங்கிலேயக் கம்பெனிக்கு வங்காளத்தில் வியாபாரஞ்செய்ய **வரி இல்லா உரிமை** ஏற்பட்டிருந்தது. ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களுக்கும், அவர்களுடைய குறைவான சம்பளத்தை முன்னிட்டு, இவ்வுரிமை வழங்கப்பட்டது. இச் சலுகையே அநீதியானது. அத்துடன் நிற்காமல் தனிப்பட்ட வங்காள வியாபாரிகளிடமிருந்தும் ரகசியமாகப் பணத்தைப் பெற்றுக்கொண்டு அவர்களுடைய சாமான்களையும் தங்களுடைய படகுகளில் திருட்டுத்தனமாய் ஏற்றிச்சென்று, நவாபிற்குச் சேரவேண்டிய

சுங்கவரியைப் போக்கினர். அதையறிந்த மீர்காஸிம் யாவருமே வரிகொடுக்க வேண்டியதில்லை யெனத் திட்டத்தைப் பிறப்பித்தார். அவ்வாறு செய்தது ஆங்கிலேயரின் லாபத்தைக் குறைக்கவே அவர்களுக்கு நவாபின்மீது சீற்றம் எழுந்தது. எப்பொழுது அவருடைய கோபத்திற்கிலக்காகிவிட்டாரோ இனித் தாம் தம்முடைய நிலையைப் பண்படுத்தக் கருதி **மூர்ஷிதாபாத்**தினின்றும் தமது தலைநகரை **மாங்கீர்** என்ற பட்டினத்திற்கு மாற்றினர். அங்கிருந்த கோட்டையையும் பலப்படுத்தினர். சண்டைதொடங்கியது.

மீர்காஸிமுடன் போர் (கி. பி. 1763—1764):

(a) **பாட்ன படுகொலை (கி. பி. 1763):** தாம் தனியே நின்று போர் புரிய இயலாது என்றெண்ணி மீர்காஸிம் அயோத்தி நவாப் **ஷூஜா உத் தௌலா**வையும், டில்லி சக்கரவர்த்தி **ஷா ஆலம்** என்பவரையும் உதவிக்கழைத்தார். அதைக்கண்ட ஆங்கிலேயர் **மீர் ஜாபரை** வங்காள நவாப் ஆக்கிப் **பாட்ன**வைப் பிடித்துக் கொண்டனர். ஆனல் மீர்காஸிம் எளிதில் அதனை மீட்டு, அங்கிருந்த 200 ஆங்கிலேயரைச் சிறைசெய்தார். உடனே கல்கத்தாவிலிருந்து **மேஜர் ஆடம்ஸ்** என்பவரின் கீழ் தக்கதோர் சேனையை ஆங்கிலேயர் மீர்காஸிமை யெதிர்க்க விடுத்தனர். மீர்காஸிம் மும்முறை தோல்வியுற்றார். அடுத்தபடியாக **மாங்கீரும்** ஆங்கிலேயர் கைவசமாயிற்று. அப்பொழுது பாட்னவில் பதுங்கியிருந்த மீர்காசிம் தம்மை அங்கும் எதிர்க்க வந்தால் தாம் சிறைகொண்ட ஆங்கிலேயர்

களைக் கொலை செய்துவிடுவதாகப் பயமுறுத்தினர். அம் மிரட்டலைச் சற்றும் மதியாமல் ஆடம்ஸ் பாட்னுவிற்கும் சென்றார். உடனே தாம் தெரிவித்த வண்ணமே, தம்மிடமிருந்த ஆங்கிலக் கைதிகளைக் கொன்றுவிட்டு **அயோத்தி** நோக்கி ஓடினர். இக் கொலையைத்தான் **பாட்னு படுகொலை**யெனக் கூறுவது. இச்செய்கை ஆங்கிலேயரின் கோபத்தைப் பின்னும் வளர்த்தது.

பின்பு **வங்காளமும் பீஹாரும்** ஆங்கிலேயர் வசமாயின.

(b) பக்ஸார் சண்டை: (கி. பி. 1764): இனி மீர் காஸிம் மிதமாயிருக்க முடியாதன்றோ? ஆகவே தம் துணைவர்களுடன் அவர் கி. பி. 1764ல் **பக்ஸார்** என்னுமிடத்தில் ஆங்கிலேயரை யெதிர்த்தார். சண்டை வெகு ஆக்ரோஷத்துடன் புரியப்பட்டது. ஆயினும் ஆங்கிலத் தளகர்த்தரான **ஸர் ஹெக்டர் மன்ரோ** என்பவர் அம் மூவரையும் தோற்கடித்து, அவர்களது சேனைகளைச் சின்னபின்ன மாக்கினர். **ஷா ஆலம்** பிடிபட்டு ஆங்கிலேயருக்குக் கட்டுப்பட்டார்.

ஷுஜா உத் தௌலாவும் மீர்காஸிமும் யுத்தகளத்தை விட்டு ஓடினர்கள். சில நாட்களுக்குப் பின்னர் அயோத்தி நவாப் சரண்புகுந்தார். மீர்காஸிம் போன இடம் தெரியவில்லை.

டில்லி வரையிலுமுள்ள நாடுகள் ஆங்கிலேயர் வசமாயிற்று. அவர்களுடைய அதிகாரமும் ஓங்கி வளர்ந்தது. இனிச் சுலபமாக இந்தியச் சிற்றரசர்களை யெதிர்க்கலாம் என்ற தைரியம் அவர்களுக்குப் பிறந்தது. வட இந்தியாவில் எளிதில் ஆங்கில ராஜ்யத்தை ஸ்தாபிக்கலாமெனவும் அவர்கள் கண்டனர்.

ஆயினும் வங்காளத்தில் மீர்காஸிமின் எதிர்ப்பால் குழப்பம் ஏற்பட்டதைக்கண்ட ஆங்கில மேலதிகாரிகள் **கிளைவ் பிரபுவை,** கி. பி. 1765ல், மீளவும் கவர்னராகவும் சேனாதிபதியாகவும் இந்தியாவிற்கனுப்பினார்கள்.

கிளைவ் பிரபுவின் ஆட்சி:

அலஹாபாத் உடன்படிக்கை கி. பி. *1765*: முதலில் கிளைவ் வங்காளத்திலும் அதைச் சுற்றியுள்ள நாடுகளிலும் தென்படும் சீர்கேட்டைப் போக்க முயன்ஞர். **ஷா ஆலத்துடனும்** அயோத்தி **நவாபுடனும் அலஹாபாத்தில்** ஓர் உடன்படிக்கை செய்து முடித்தார். அதன்படி அயோத்தி நவாபிற்குச் சொந்தமான **கோரா, அலஹாபாத்** என்ற ஜில்லாக்கள் டில்லிச் சக்கரவர்த்திக்கு நிறுவப்பெற்றன. யுத்தச் செலவிற்காக அயோத்தி நவாப் ஆங்கிலேயருக்கு **50 லட்சம் ரூபாய்** தரவேண்டும் எனவும் ஏற்பாடாயிற்று. மேலும் ஆங்கிலேயருக்கு **வங்காளம், பீஹார், ஒரிஸா** முதலான மாகாணங்களில் **வரி வசூலிக்கும் உரிமை** ஷா ஆலத்தால் வழங்கப்பட்டது. அதற்குப் பிரதியாக ஆங்கிலேயர் டில்லிச் சக்கரவர்த்திக்கு **வருஷ**மொன்றிற்கு **26 லட்சம் ரூபாய்** உபகாரச் சம்பளம் தர ஏற்றுக்கொண்டனர்.

இவ்வுடன்படிக்கையின் பலன்—இரட்டை யாட்சி:

இவ்வுடன்பாட்டின் பயனாக ஆங்கிலேயர்களும் அரசியலில் கலந்துகொள்ளும்படி நேர்ந்தது. **வங்காளம், பீஹார், ஒரிஸா** முதலிய மாகாணங்களினின்றும் வரியை வசூலிப்பதற்காகவும் ஆங்கிலேயர்கள்

ஜெயித்த இடங்களைப் பாதுகாப்பதற்காகவும் கிளைவ் இரட்டையாட்சி என்ற ஒரு அரசியல் திட்டத்தை நிறுவி ஞர். அது பின்வருமாறு:—

நியாயம் வழங்குதல், கலகங்களை யடக்கி யமைதி யை நிலைநாட்டுதல், வரிவசூல் செய்தல் முதலியனவெல் லாம் வங்காள நவாபினது வேலைகளெனத் திட்டம் செய்யப்பட்டது. அவர் வசூலித்த வரியை வாங்கி வைத்தல், அதை அரசியல் விஷயங்களுக்காகச் செல விடல், எதிரிகள் தாக்குதலினின்றும் நாட்டைக் காப் பதற்காகச் சர்க்கார் செலவில் தக்க படையொன் றைச் சேகரித்து வைத்தல் முதலிய அலுவல்கள் ஆங்கிலேயர்களைச் சேர்ந்தவை எனக் குறிக்கப்பட் டது. இவ்வண்ணம் அரசாட்சி இரண்டு தனித் தொகுதிகளைக் கொண்டிருந்ததால் அது **இரட்டைத் துரைத்தனம்** அல்லது **இரட்டையாட்சி** எனப் பெயர் பூணலாயிற்று.

கிளைவின் இதர சீர்திருத்தங்கள்: கிளைவ் பிரபு கம் பெனியின் நிலைமையை மேன்மையுறச் செய்யப் பின் னும் சில சீர்திருத்தங்களை யியற்றினர்.

உபயோகமற்ற உத்தியோகஸ்தர்களை வேலையி னின்றும் விலக்கி அவர்களுடைய ஸ்தானங்களில் ஆற்றலமைந்த ஆட்களை யமைத்தார். லஞ்சம் வாங் கும் வழக்கத்தை நிறுத்தினர். ஆங்கில உத்தியோ கஸ்தர்களின் தனிப்பட்ட வியாபார உரிமையைப் போக்கினர். கம்பெனியின் வருமானத்தைப் பெருக் கினர். இராணுவ இலாகாவின் செலவு அதிகமாவ தைக் கண்டு வீரர்களுக்கு வழங்கப்பெற்ற இரட்டைப்

படியை நிறுத்தி, ஒற்றைப்படிதான் கொடுக்கப்பட வேண்டுமெனத் திட்டம் செய்தார். பொது ஜனங்களுக்கும் நன்மைபுரியக் கருதி உப்புவரியைக் குறைத்தார். ஆயினும் இச் சீர்திருத்தங்களில் ஒன்றிரண்டு, அவருக்கெதிரே சில விரோதிகளைத் தோன்றச் செய்தன.

கிளைவ் இங்கிலாந்திற்குத் திரும்புதலும் அவரது முடிவும்:—கிளைவ், இந்தியாவிற்கு வந்த இரண்டு வருடங்களுக்கெல்லாம், வியாதியால் பீடிக்கப்பட்டு கி. பி. 1767ல் இங்கிலாந்திற்குத் திரும்பினர். அங்குச் சென்றதும் அவருடைய எதிரிகள் பார்லிமெண்டில் அவர் மீது அவரது இந்திய ஆட்சியின் சம்பந்தமாகக் குற்றஞ் சாட்டினர். அதனுல் அவருக்குப் பெருத்த அவமானம் நேரிடும்போற் றேன்றிற்று. ஆகவே அவர் கி.பி. 1774ல் எதிரிகளின் கைகளிற் சிக்குண்டு மானமிழப்பதைக் காட்டிலும் தமக்குத் தாமே முடிவைத் தேடிக்கொள்ளல் மேலெனக் கருதி, ஓர் நாள், தம்மைச் சுட்டுக்கொண்டு இறந்தார்.

கிளைவ் பிரபுவின் பெருமை: கிளைவ் பிரபுவைக் குற்றம் அறவே களைந்தவர் எனக் கூறுவதற்கில்லை. அவர் லஞ்சம் வாங்கியதும், சதி செய்ததும், கள்ளப் பத்திரம் தயாரித்ததும் இகழத் தக்கவையாயிருந்தன. ஆயினும் அவரது சரித்திரத்தை ஆராயுங்கால், அவரை நாம் மெச்சாமலிருக்க முடியவில்லை.

ஓர் ஏழைக்குடியிற் பிறந்து, துஷ்டச் செயல்கள் பல புரிந்து, பெற்றோரால் இகழப்பெற்று, தம் நாட்டிலேயே இருக்கக்கூடாதென இந்தியாவிற் கனுப்பப்

பட்டு, இந்நாட்டிலும் குமாஸ்தா வேலையைச் செய்ய முடியாமல் திகைத்து, பின்பு எதேச்சையாக இராணு வத்தில் சேர்ந்து, அரிய பணிகள் பல புரிந்து, அத னிமித்தம் தம் பதவியில் படிப்படியாக உயர்ந்து, பெரும் புகழ்ச்சியைப் பெற்று கவர்னர் பதவியை ஏற்று, சீர்திருத்தங்கள் பல இயற்றி, வெற்றி வீர ராகக் காலங்கழித்துக் கடைசியாய் ஓர் சுத்த வீரரைப் போலவே உயிரையும் மாய்த்துக் கொண்டார் எனின், அவரது பெருமை எவ்வளவு மேம்பட்டது பாருங்கள்!

வினாக்கள்

1. ஆங்கிலேயருடன் ஸிராஜ் உத் தெளலா தொடுத்த போருக்குக் காரணம் குறிப்பிடுக.

2. பிளாஸிச் சண்டையைப்பற்றி ஓர் குறிப்பெழுதுக.

3. பிளாஸிச் சண்டையின் பலன்களை விவரிக்க.

4. கிளைவ் யாருக்கெதிரே, ஏன், என்ன சதி செய்தார்? அது பலிதமாயிற்று?

5. பக்ஸார் சண்டை ஏன் புரியப்பட்டது? அதன் முடிவென்ன?

6. குறிப்புகள் தருக:—

பாட்னு படுகொலை, இரட்டையாட்சி, கிளைவின் சீர் திருத்தங்கள்.

7. கிளைவை நாம் ஏன் போற்ற வேண்டும்?

26. வாரன் ஹேஸ்டிங்ஸ்

(கி. பி. 1772—1784)

கிளைவ் இங்கிலாந்திற்குத் திரும்பியதும் இந்தியாவின் நிலைமை: சென்ற அத்தியாயத்தில் பல துறைகளிலும் கிளைவ் இந்தியாவில், ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தைப் பெருக்கினுர் எனப் படித்தோம். ஆயினும், அவர் கி. பி. 1767 ல் தமது நாடு திரும்பியதும், ஆங்கிலத் துரைத்தனம் அநேக வழிகளில் சீர்கேடுறத் தலைப்பட்டது. இரட்டை யாட்சிப் பல துறைகளிலும் ஜனங்களுக்குக் கஷ்டத்தையே விளைவித்தது. வரி வசூலிப்போரின் கொடுமை சொலவொணு திருந்தது. வங்காளத்தில் கொடிய பஞ்சம் ஒன்று ஏற்பட்டு சுமார் ஒரு கோடி ஜனங்கள் கொள்ளை நோயால் மாண்டனர். மஹாராஷ்டிரர்கள் தங்களது அதிகாரத்தைப் பெருக்கி டில்லியைக் கைப்பற்றி, ஷா ஆலத்தையும் சுவாதீனப் படுத்திக் கொண்டனர். தக்ஷிணத்திலோ, மைசூருக்குப் புதிதாக அரசராய்த் தோன்றிய ஹைதர் அலி என்பாரின் அதிகாரம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது. இவைகளினிடையே கம்பெனியின் வியாபாரம் மட்டுப்பட்டு, வருவாயும் மிகக் குறைந்தது.

ஆகவே, இக் கொடுமைகளைப் போக்கவும், சீர்மையை உண்டாக்கவும், கம்பெனியின் வருமானத்தை யதிகமாக்கவும், வாரன் ஹேஸ்டிங்ஸ் கி. பி. 1772 ல் வங்காளத்திற்குக் கவர்னராக நியமிக்கப்பட்டார்.

A வாரன் ஹேஸ்டிங்ஸின் கவர்னர் பதவி
(கி. பி. *1772—1774*)

வாரன் ஹேஸ்டிங்ஸ் செய்த சீர்திருத்தங்கள்: இரட்டை யாட்சியால் தீமைகள் பல விளைந்தன எனக் கூறினேம். ஆனது பற்றி வாரன் ஹேஸ்டிங்ஸ் அவ்

வாரன் ஹேஸ்டிங்ஸ்

விருதலைப்பட்ட ஆட்சியை யொழித்தார். வரி வசூலிக்கும் பொறுப்புப் புதிதாக நியமிக்கப்பெற்ற ஜில்லா அதிகாரிகளான **ஆங்கிலக் கலெக்டர்**களுக்குச் சேர்ந்ததாயிற்று. வரிப் பணமும் திட்டப் படுத்தப்பட்டது. **ரெவின்யூ போர்ட்** என்ற ஒரு சபை வரி வசூலைக் கண்காணிக்க வேண்டுமென ஏற்பாடாயிற்று. **ஸிவில்,**

கிரிமினல் என்ற இருவகை வழக்குகள் கலெக்டர்களாலேயே விசாரிக்கப் படவேண்டுமெனவும் ஆயிற்று. மிக்க கவனத்துடன் முகம்மதியச் சட்டங்களும், ஹிந்துச் சட்டங்களும் தொகுக்கப் பெற்றன. கல்கத்தாவில் பிரதான ஸிவில் கோர்ட்டும், பிரதான கிரிமினல் கோர்ட்டும் ஏற்படுத்தப்பட்டன.

கம்பெனிக்குப் பணத்தைச் சேகரித்தல்: வாரன் ஹேஸ்டிங்ஸ் பல வழிகளில் கம்பெனியின் பொக்கிஷத்தை நிரப்பினர். புது அரசியல் திட்டங்களால் வங்காள நவாபின் வேலை குறைந்து விட்டமையால், அவருக்குக் கொடுத்துவந்த உபகாரச் சம்பளத்தில் பாதி தவிர்க்கப்பட்டது. அலஹாபாத் உடன்படிக்கைக்கு முரணாக ஷா ஆலம் மஹாராஷ்டிரர்களிடம் சென்று விட்டதால் அவருக்கு ஆங்கிலேயரால் கொடுக்கப் பட்டு வந்த 26 லக்ஷம் ரூபாயும் நிறுத்தப்பட்டது. மேலும், ஷா ஆலத்திடமிருந்து கோராவும், அலஹாபாதும் பறிக்கப்பெற்று; ஆதியில் அவைகளுக்கு அதிபதியாயிருந்த அயோத்தி நவாபிற்கே 50 லக்ஷம் ரூபாய்க்கு விற்கப்பட்டன. கி. பி. 1773ல் ரோஹில்லர்கள் என்ற ஜாதியாரைத் தோற்கடிக்க அயோத்தி நவாபான அஸப் உத் தௌலா என்பாருக்கு உதவி, ரோஹில் கண்டையும் அயோத்தியுடன் இணைப்பித்து, அவ்வுபகாரத்திற்காக வாரன் ஹேஸ்டிங்ஸ் அயோத்தி நவாபிடமிருந்து 40 லக்ஷம் ரூபாய் பெற்றார்.

B. வாரன் ஹேஸ்டிங்ஸ் முதல் கவர்னர் ஜெனரல் பதவி வகித்தல் (கி. பி. 1774—1784)

நிகழ்ச்சிகளை அதிகமாகக் கொண்ட வாரன் ஹேஸ்டிங்ஸினது கவர்னர் ஜெனரலாட்சியைச் சில

பாகுபாடுகளின் மூலம் கற்பதே விஷயங்களை நமக்குத் தெள்ளென விளக்கும். ஆகவே, நாம் இங்கு அவ்வாறே செய்வோம்.

1. **அரசியல் திட்டங்கள்**

(a) ஒழுங்குமுறை சட்டம் (கி. பி. 1773): இச் சட்டம் கம்பெனிக்குக் கடன்கொடுத்துதவிய ஆங்கிலப் பார்லிமெண்டால் ஏற்படுத்தப்பட்டது இது கம்பெனியின் ஆட்சியைப் பின்வருமாறு சீர்ப்படுத்தியது. வங்காள கவர்னர், **கவர்னர் ஜெனரல் பட்டம்** அளிக்கப்பட்டு, **பம்பாய், மதராஸ்** கவர்னர்களுக்குத் **தலைவர்** எனக் கொள்ளப்பட்டார். அவருக்கு **கல்கத்தா** ராஜதானியாக ஆக்கப்பட்டது. ராஜ்ய நிர்வாக விஷயங்களில் கவர்னர் ஜெனரலுக்கு யோசனை கூற நான்கு அங்கத்தினர்களைக் கொண்ட **ஓர் ஆலோசனை சபை**யும் உண்டாக்கப்பட்டது. அவ்வங்கத்தினர்களும் கவர்னர் ஜெனரலுமே சாதாரணமாக **ஐந்து வருடங்கள் வரையிற்றான்** தங்களது பதவிகளை வகிக்கலாம். கம்பெனியின் நியாய ஸ்தலங்களினின்றும் வரும் வழக்குகளை விசாரிக்க நான்கு ஆங்கில நீதிபதிகளைக் கொண்ட **உயர்தர நீதிஸ்தலம்**, அல்லது **ஸுப்ரீம் கோர்ட்** ஒன்று நிர்மாணிக்கப் பெற்றது. பார்லிமெண்டின் உத்திரவைப் பெற்றுத்தான் சுதேச மன்னர்களுடனும் அயல் நாட்டினருடனும் சண்டையோ, சமாதானமோ செய்யப்பட வேண்டுமென்று ஏற்பாடாயிற்று. கம்பெனி ஆட்சியைக் கண்காணிக்கவும் சீர்திருத்தவும் ஆங்கிலப் பார்லிமெண்டிற்கு அதிகார முண்டெனவும் திட்டப்படுத்தப்பட்டது.

இவ்விதமாக, ஆங்கிலப் பார்லிமெண்ட் தன்னுடைய அதிகாரத்தை மெதுவாகக் கம்பெனியின் மீது செலுத்தியது.

ரெகுலேடிங் ஆக்டின் குறைகள்: (i) ஒழுங்கை யுண்டு பண்ணுவதற்காக **ரெகுலேடிங் ஆக்ட்** ஏற்பட்டபோதிலும் அதை அனுஷ்டிக்கும்பொழுது சில குறைகள் அதினிடத்தே தென்பட்டன. ஆலோசனை சபையைச் சேர்ந்த நான்கு அங்கத்தினர்களில் மூன்று பேர்கள் ஒரு புறம் சேர்ந்துகொண்டு கவர்னர் ஜெனரல் செய்ய விரும்பிய எக்காரியத்தையும் தடைசெய்து வந்தனர். இவ் வெதிர்ப்பு ஓர் சமயம் **வாரன் ஹேஸ்டிங்ஸையும் பிரான்ஸிஸ்** என்ற அங்கத்தினரையும் குத்துச் சண்டைக்குக் கொண்டுவந்து விட்டது.

பின்னும் பழிக்குப் பழி வாங்க வேண்டி ஆலோசனை சபை அங்கத்தினர் கவர்னர் ஜெனரல் மீது அபாண்டமான பழிகளைச் சுமத்தினர். உதாரணமாக, மீர் ஜாபரின் மனைவியிடமிருந்து வாரன் ஹேஸ்டிங்ஸ் லஞ்சம் வாங்கினரென **ராஜா நந்தகுமாரர்** என்ற ஒரு வங்காளப் பிரபுவைக்கொண்டு அவர்கள் குற்றஞ் சாட்டினர். வாரன் ஹேஸ்டிங்ஸ் அதனால் சபை நடுவே அவமான மடைந்தார். ஆனால் அதே நந்தகுமார் பின்பு பொய்க் கையெழுத்தொன்று இட்டதாகக் குற்றம் சாட்டப்பெற்றுத் தூக்கிலிடப்பட்டார். அவ்வாறு நிகழ்ந்ததும் வாரன்ஹேஸ்டிங்ஸின் தூண்டுதலின் பேரிலேயே எனத் தூற்றப்பட்டது.

(ii) பின்னும் ஓர் குறை யாதெனின் உயர்தர நியாய ஸ்தலத்திற்கும், கம்பெனியின் நியாய ஸ்தலங்

களுக்குமுள்ள சம்பந்தா சம்பந்தங்கள் சரியானபடி வரையறுக்கப் படவில்லை. அதனுலும் பல சச்சரவு கள் நிகழ்ந்தன.

(b) பிட் இந்தியா சட்டம் (கி. பி. 1784): மேற் கூறப்பட்டுள்ள குறைகளைப் போக்க கி. பி. 1784 ல் **இளைய பிட்** என்ற ஆங்கிலப் பிரதம மந்திரி ஓர் சட்டத் தைப் பிறப்பித்தார். அதனுல் ஏற்பட்ட மாறுதல்கள் பின் வருவனவாகும்.

கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக் கமிட்டியில் ஒரு அங்கத்தினர் குறைக்கப்பட்டார். இங்கிலாந்தில் கம்பெனியின் அலுவல்களை மேற்போர்வையிட **போர்ட் ஆப் கன்ட்ரோல்** என்ற ஆறு அங்கத்தினர்கள் அடங் கிய **நிர்வாக சபை** ஒன்று ஏற்படுத்தப்பட்டது. கம் பெனியார் கவர்னர் ஜெனரலையும் சேனுதிபதியையும் நியமிக்கலாமாயினும் அந்நியமனம் ஆங்கில அரசாங் கத்தாரின் ஆமோதிப்பைப் பெறவேண்டியதாயிற்று. புதிதாக ராஜ்யத்தைப் பெருக்குவதாயிருந்தால் கம் பெனியார் பார்லிமெண்டின் அனுமதியை முன்னரே அடையவேண்டும் எனவும் திட்டம் செய்யப்பட்டது.

இச் சட்டம் உண்மையில் **ஆங்கில அரசாங்கத்தா ரின்** ஆதிக்கத்தை வளர்த்ததேயாயினும், ஆங்கிலக் கம்பெனியின் ஆட்சியின் கண் ஒழுங்கையும் உண்டு பண்ணியது.

2. வாரன் ஹேஸ்டிங்ஸ் புரிந்த கண்ணியக் குறைவான செயல்கள்.

(a) காசி மன்னருடன் வழக்கு: **செயித்ஸிங்** என்ற காசி மன்னர் ஆங்கிலேயரின் உதவியைப் பெற்றுச்

சிங்காதனம் ஏறினர். அதற்காக அவர் ஆங்கிலேய ருக்கு $22\frac{1}{2}$ லட்சம் ரூபாய் **கப்பம்** கட்டுவதாக ஏற்றுக் கொண்டார். ஆனல் வாரன் ஹேஸ்டிங்ஸ் தாம் புரிய வேண்டி வந்த இரண்டாம் மைசூர் யுத்தம், முதல் மஹாராஷ்டிர யுத்தம் முதலிய போர்களின் செலவிற் காக செயித் ஸிங்கை கி. பி. 1780ல் 5 லட்சம் ரூபாய் யுத்த உதவியாகக் கேட்டார். ஒன்றிரண்டு தடவை கள், மிகச் சிரமத்தின் பேரில், வாரன் ஹேஸ்டிங்ஸிற்கு அவர் கோரிய பணம் தரப்பட்டது. ஆயினும் பின் னும் பின்னும் காசி ராஜரை நன்கொடைக்காக வற் புறுத்தவே, அவர் இனிக் கொடுக்கச் சாத்தியமில்லை எனத் தெரிவித்தார். அதற்காக செயித்ஸிங்கிற்கு 50 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அதைக்கண்ட காசி மக்கள் பெருங் கலகத்தைக் கிளப்பி ஆங்கிலேயரை யெதிர்த்தனர். அச் சமயம் அங்கிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் உயிர் தப்பியது பெரும்பாடாய் விட்டது. ஆயினும் சீக்கிரத்தில் குழப்பம் அடக்கப்பட்டது. செயித்ஸிங் சிங்காதனத் தின்றும் விலக்கப்பட்டார். அவருடைய ஸ்தானத்தில் அவரது சகோதரரின் புதல்வர் அரசராக நியமிக்கப் பெற்றர். அப் புதிய மன்னரிடமிருந்து ஏராளமான பணம் வசூலிக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப் பட்டன.

(b) அயோத்தி பீகம்களை வற்புறுத்திப் பணம் பெறு தல்: ஏறக்குறைய அதே சமயத்தில் கொடுக்கப்படா திருந்த கடனிற்காகவும், யுத்தச் செலவிற்காகவும் வாரன் ஹேஸ்டிங்ஸ் அயோத்தி நவாபை அஸப் உத்

தேளலாவையும் வற்புறுத்தலானார். அதற்கு அந் நவாப் தம்மிடம் அச்சமயம் பணம் இல்லையென்றும், தமது தாயாரிடமும், பாட்டியாரிடமும் ஏராளமான நிதி இருக்கிறதென்றும், அவர்களிடமிருந்து பொருள்களைப்பறித்துத் தங்களுக்குச் சேரவேண்டிய தொகையை யெடுத்துக் கொண்டதுபோக எஞ்சியதைத் தமக்குத் தரும்படியும் வேண்டிக்கொண்டார். அவ்வாறு செய்ய இசைந்து, வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆங்கிலத் துருப்புகளைக்கொண்டு பீகம்களை வாட்டி வருத்தி அவர்களிடமிருந்து ஒரு கோடி ரூபாய் வரையிலும் அபகரித்தார்.

வாரன்ஹேஸ்டிங்ஸின் மீது குற்றச்சாட்டும் விடுதலையும்: ஆங்கிலேயருக்கு ஒரு குற்றமுமிழைக்காத ரோகில்லர்களைத் தாக்கியதற்காகவும், மேற் குறிக்கப்பட்டுள்ள இவ்விரண்டு அக்கிரமங்களைப் புரிந்ததற்காகவும், பிரான்ஸிஸைக் கத்தியால் குத்தியதற்காகவும், நந்தகுமாரரை இறக்கச் செய்ததற்காகவும் இங்கிலாந்திற்குத் திரும்பியதும் இவருடைய எதிரிகள் இவர்மீது பெரிய வழக்கு ஒன்று தொடுத்தனர். ஏழு வருடங்களுக்குப் பின் வாரன்ஹேஸ்டிங்ஸ் விடுதலையடைந்து வருஷத்திற்கு 4 ஆயிரம் பவுன் உபகாரச் சம்பளமும் வழங்கப் பெற்றார். அவர் கி. பி. 1818 ல் காலமானார்.

3. வாரன் ஹேஸ்டிங்ஸ் தொடுத்த போர்கள்

(a) **2 மைசூர் யுத்தங்கள்:** வாரன்ஹேஸ்டிங்ஸின் ஆட்சிக்கு முன்னரே முதல் மைசூர் யுத்தமும், அவருடைய காலத்தில் இரண்டாவது மைசூர் யுத்தமும், முத

லாவது மஹாராஷ்டிர யுத்தமும் நிகழ்ந்தன. அவற்றைப் பற்றி இங்குச் சுருங்கக் கற்போம்.

(i) முதல் மைசூர் யுத்தம் (கி. பி. 1767—1769):

காரணம்: மைசூரை வெகுகாலமாக உடையார்கள் வம்சம் ஆண்டுவந்தது. ஆனால் கி. பி. 1776ல் ஹைதர் அலி என்ற முகம்மதியத் தளகர்த்தர் தமது அரசர்

ஹைதர் அலி

இறந்துபடவே, தாமே முடிசூட்டிக் கொண்டார். பட்டத்திற்கு வந்ததுமே தாம் பெரிய சக்கரவர்த்தி என விளங்கவேண்டுமென்ற அவாக் கொண்டார். அதற்காகச் சுற்றுப்புறப் பிரதேசங்களையும் நாடுகளையும் ஒவ்வொன்றாக வெல்ல ஆரம்பித்தார்.

அதைக்கண்ட **மஹாராஷ்டிரர்களும் நிஜாம் மன்னரும்** கி. பி. 1767ல் அவரை எதிர்க்க வந்தனர். அப்பொழுது ஹைதர் அலி மஹாராஷ்டிரர்களைப் பணங் கொடுத்து அனுப்பி, நிஜாம் மன்னருக்கு 6 லக்ஷ ரூபாய் வருஷக் கப்பம் அளிப்பதாக ஆசை வார்த்தை கூறி அவரைத் தம் கட்சியில் சேர்த்துக்கொண்டு **கர்நாடகத்தின் மீது படை** யெடுக்கலானார்.

நிகழ்ச்சிகள்: நிற்க, கர்நாடக நவாப் ஆங்கிலேயரின் நட்பைப் பெற்றிருந்தார். ஆகவே **கர்னல் ஸ்மித்** என்ற தளகர்த்தர் **செங்கம்கணவாய், திருவண்ணாமலை** என்கிற இடங்களில் கி. பி. 1767ல் **முகம்மதலிக்காக** ஹைதரைத் தாக்கி அவரைத் தோற்கடித்தார். அதைக் கண்டு நிஜாம் பயந்து ஹைதரைவிட்டு விலகினார். ஆயினும் ஹைதர் மனந் தளராமல் கர்நாடகத்தை எதிர்க்கலானார். பிறகு அவர் **சென்னையை** நோக்கி வந்தார். அச்சமயம் **சென்னைக் கோட்டை** சரியானபடி பாதுகாக்கப் பெறவில்லை. ஆகவே, கி. பி. 1769ல் சென்னைக் கவர்னர் ஹைதர் அலியுடன் ஓர் உடன்பாட்டிற் கிசைந்தார்.

சென்னை உடன்படிக்கை (கி. பி. 1769):

அவ்வுடன்படிக்கை **சென்னையில்** நடந்தேறியது. அதன்படி இருதிறத்தார்களும் அதுவரையில் பிடித்த நாடுகளையும் கைதிகளையும் அவரவர்களுக்குத் திரும்பத் தந்துவிடவேண்டுமென ஏற்பாடாயிற்று. **யுத்த காலங்களில் ஒருவருக் கொருவர் உதவி புரியவேண்டும்** எனவும் திட்டம் செய்யப்பட்டது.

குறிப்பு: இந்த யுத்தம் கிளைவ் இங்கிலாந்திற்குச் சென்ற பின் நடைபெற்றது.

2. இரண்டாவது மைசூர் யுத்தம் (கி. பி. 1780—கி. பி. 1784)

முதல் மைசூர் யுத்தம் முடிந்ததுமே மஹாராஷ்டிரர்கள் ஹைதரைத் தாக்கினர்கள். அப்பொழுது, மதராஸ் உடன்படிக்கையை குறிப்பிட்டு ஆங்கிலேயர்களை ஹைதர் அலி தமக்கு உதவி புரியுமாறு கேட்டார். அச்சமயம் ஆங்கிலேயர்கள் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் சிக்குண்டிருந்ததால் ஹைதருக்கு **உதவிபுரிய முன்வரவில்லை**. ஆகவே, ஹைதர் தனியே நின்று சண்டைசெய்ய வேண்டியதாயிற்று. அதனல் அவருக்கு அதிக நஷ்டமும் கஷ்டமும் மேற்பட்டது. அதற்காக ஹைதர் ஆங்கிலேயர்மீது தீராக் கோபம் கொண்டார்.

மேலும், ஐரோப்பாவில் **அமெரிக்கா சுதந்திரப் போரின்** சம்பந்தமாக கி. பி. 1768ல் ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் போர் தொடங்கியது. வழக்கப்படி அது இந்தியாவிலும் அவ் வைரோப்பியர்களுக்கிடையே மூண்டது. ஆங்கிலேயர் **புதுச்சேரியைக்** கைப்பற்றிப் பின்பு, இந்தியாவின் மேற்குக் கரையில் உள்ள **மாஹியை**யும் பிடிக்கத் தலைப்பட்டனர். அதை ஹைதர் ஆட்சேபித்தார். ஏனெனில் மாஹி ஹைதருடைய ராஜ்யத்தைச் சேர்ந்த ஓர் துறைமுகப் பட்டினம். மேலும் பிரெஞ்சுக்காரர்கள் அச்சமயம் அவரது நண்பர்களாக இருந்தனர். ஆயினும் அவரது ஆட்சேபத்தைக் கொஞ்சமும் பொருட்படுத்தாது மாஹியைப் பிடித்தனர். ஆகவே மஹாராஷ்டிரர்களையும் நிஜாமையும் துணைக்கழைத்துக் கொண்டு ஹைதர் அலி போருக்கு ஆயத்தமானர்.

நிகழ்ச்சிகள்: முதலில் ஹைதர் கர்நாடகத்துட் சென்று **காஞ்சீபுரம், பரங்கிப்பேட்டை** முதலான இடங் களைக் கைப்பற்றிப் பின்பு **ஆற்காட்டையும்** பிடித்தார். அப்பொழுது **பெய்லி** என்ற தளகர்த்தர் ஓர் பெருத்த சேனையுடன் ஹைதரைப் **போலிலூரில்** எதிர்த்தார். ஆனால் தோற்றோடினார். அதேபோல **மன்ரோ** என்ற தளகர்த்தரும் முறியடிக்கப்பட்டு, யுத்த ஆயுதங்களை கிணற்றி லெறிந்துவிட்டுச் சென்னைக் கேகினார். அதற்குப்பின் கர்நாடகத்தில் **காவேரி** வரையிலுமுள்ள நாடுகளை ஹைதர் கைக்கொண்டார். அதைக்கண்ட சென்னையிலிருந்த ஆங்கிலேயருக்கு நடுக்க முண்டா யிற்று. ஆனாலும் அச்சமயம் கல்கத்தாவில் கவர்னர் ஜெனரலாயிருந்த வாரன்ஹேஸ்டிங்ஸ் தம்முடனிருந்த **ஸர் ஐர் கூட்** என்பாரை ஓர் தக்க சேனையுடன் ஹைத ரைத் தாக்க அனுப்பினார். அவர் கி. பி. 1781ல் **பரங்கிப்பேட்டை, போலிலூர், சோளிங்கபுரம், ஆரணி** முதலான இடங்களில் ஹைதரைத் தோற்கடித்தார். அச்சண்டைகள் நிகழ்ந்து கொண்டிருக்கும் சமயத்தில் ஹைதருக்குதவ ஓர் பிரெஞ்சுக் கப்பற்படை இந்தியக் கிழக்குக் கரையை யடைந்தது. ஆனால் அதனிட மிருந்து போதிய உபகாரம் ஒன்றும் கிடைக்கவில்லை. இவைகளினிடையே கி. பி. 1782ல் ஹைதரும் மாண்டார்.

மங்களூர் உடன்படிக்கை (கி. பி. 1784):

அதற்குப்பின் ஹைதர் அலியின் குமாரரான **திப்பு** சண்டையை நடத்திவந்தாராயினும் நிரந்தரவெற்றி களைப் பெறவில்லை. ஆகவே அவர் ஆங்கிலேயருடன் **மங்களூரில்** ஓர் உடன்படிக்கை செய்து முடித்தார்.

அதன்படி இருதிறத்தாரும் முன்னிருந்தபடியே நாடு களை வைத்துக்கொள்வ தென்றும், யுத்தத்திற் கொண்ட கைதிகளை விட்டுவிடுவதென்றும் ஏற் பாடாயிற்று.

(b) முதல் மஹாராஷ்டிர யுத்தம் (கி. பி. 1775-1782):

காரணம்: மூன்ருவது பானிபட் யுத்தத்தில் மஹா ராஷ்டிரர்கள் பெருந்தோல்வி யடைந்ததால், துயர் மேலிட்டு அவர்களது பீஷ்வா **பாலாஜி பாஜிராவ்** உயிர்



திப்பு

துறந்தாரென முன்பே கற்ருேம். அவருக்குப் பின அவரது குமாரர் **மாதவராவ் I** பட்டத்திற்கு வந்தார். அவர் கி. பி. 1772 வரை ஆட்சி புரிந்தார். அவருக்குச் சந்ததி இல்லை. ஆகவே அவருடைய தம்பியான **நாராயண|ராவ்** பீஷ்வாவானுர். அவர் சாமர்த்தியமற்ற வர். ஆனதுபற்றி அவருடைய காலத்தில் அவரது சிறிய தந்தையாகிய **ரகோபா** அல்லது **ரகுநாத ராவ்** என்

பவரே ராஜ்ய பாரத்தை நடத்தி வந்தார். மறு வருடமே அவர் நாராயணராவை ரகசியமாகக் கொலை செய்து தாமே பீஷ்வாவாக ஆள முயற்சித்தார்.

இது இவ்வாறுக, நாராயணராவ் இறப்பதற்கு முன்பே கெர்ப்பமாயிருந்த அவரது மனைவி அச்சமயம் ஓர் ஆண் மகவைப் பெற்றனள். அதைக் கண்டதும் ரகோபாவினிடம் வெறுப்புக் கொண்டிருந்த மஹாராஷ்டிரத் தலைவர்கள் அக்குழந்தையையே பீஷ்வாவாக ஏற்று, அதற்குப் பதிலாக நாட்டையாளுவதற்குப் பரிபாலன சபை யொன்றை நிருமித்தார்கள். அதற்கு நானு பர்னவிஸ் என்பவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இச்செய்கை ரகோபாவிற்குக் கோபத்தை மூட்டு மன்றே! ஆகவே அவர் கி. பி. 1775-ல் சூரத் என்னுமிடத்தில் பம்பாய்க் கவர்னருடன் ஓர் உடன்பாடு செய்து முடித்தார். அதன்படி ஆங்கிலேயர்கள் ரகுநாத ராவிற்குச் சண்டைக்காக ஓர் சேனை தந்து உதவ வேண்டுமென்றும், அதற்குப் பிரதியாக அவர் அவர்களுக்கு ஸால்ஸெட், பஸ்ஸீன் என்ற இரு முக்கிய வியாபார ஸ்தலங்களைத் தருவதென்றும் தீர்மானமாயிற்று. அவ்வுடன்படிக்கையைப் பற்றி நானுபர்னவிஸ் கேள்வியுற்றதுமே அது கவர்னர் ஜெனரலின் ஆமோதிப்பைப் பெறவில்லை யென்பதை யுணர்ந்து வாரன் ஹேஸ்டிங்ஸினுடன் புரந்தர் என்னுமிடத்தில் ஒரு தனி உடன்படிக்கை செய்து முடித்தார். அதன் பிரகாரம் மஹாராஷ்டிரர்களின் சச்சரவுகளில் ஆங்கிலேயர் தலையிடாதிருந்தால் அவர்களுக்கு ஸால்ஸெட் வழங்கப்பெற வேண்டுமென ஏற்பட்டது.

அவ்விஷயம் பம்பாய் கவர்னருடைய செவிக்கெட்டவே, அவர் தாம் ரகுநாதராவிடம் முதலில் செய்து முடித்த உடன் பாட்டையே ஆமோதிக்குமாறு இங்கிலாந்திலுள்ள தமது மேலதிகாரிகளுக்கு எழுதிக் கேட்டுக்கொண்டார். **சூரத் உடன்படிக்கை** புரந்தர் உடன்பாட்டைக் காட்டிலும் அதிகப் பலனையளிக்க வல்லதாதலின் ஆங்கில அரசாங்கத்தாரும் முதல் உடன்பாட்டையே ஏற்றுக் கொண்டனர்.

(a) ஆங்கிலேயர்களின் தோல்வி :

நிகழ்ச்சிகள் : இவ்வாமோதிப்பைப் பெற்ற பம்பாய் கவர்னர் கி. பி. 1778ல் ரகுநாதராவிற்கு உதவ வேண்டி ஆங்கிலச் சேனையொன்றைப் புனாவிற்கு அனுப்பினார். அதையறிந்த நானாபர்னவிஸ் ஸிந்தியாவையும், பான்ஸ்லேயையும் துணை சேர்த்துக்கொண்டு பம்பாய்ச் சேனையை **வார்காம்** என்னுமிடத்தில் எதிர்த்தார். அதைச் சமாளிக்கத் திறனற்ற ஆங்கிலச் சேனை உடனே பின்வரும் சமாதானத்திற்குக் கட்டுப் பட்டது.

அதாவது மஹாராஷ்டிர விவகாரங்களில் தாங்கள் தலையிட்டுக் கொள்வதில்லை யென்றும், கல்கத்தாவினின்று சேனை ஏதும் வரவொட்டாமற் றடுத்து விடுவதாயும் ஆங்கிலேயர்கள் ஏற்றுக்கொண்டனர். அவர்கள் மொழிகளில் முழு நம்பிக்கை வைத்த நானாபர்னவிஸ் எதிர்ப்பை நீக்கித் தமது சேனையைக் கலைத்தார்.

(b) ஆங்கிலேயரின் வெற்றி :

ஆங்கிலச் சேனை பம்பாயைச் சேர்ந்ததும், வாரன் ஹேஸ்டிங்ஸ் பம்பாய்ச் சேனையின் யோசனைக் கிணங்

காமல் சண்டையைத் தொடங்கினர். கி. பி. 1781ல் **ஸிந்தியா** திடீரெனத் தாக்கப்பட்டு தமது முக்கிய நகரமாகிய **குவாலியரை** இழந்தார். ஹோல்காரும் தோற்கடிக்கப்பட்டார். அடுத்தபடியாக **பான்ஸ்லே**யும் ஆங்கிலேயருக்கு நண்பரான **கெயிக்வாரும்** ஆங்கிலேயருடன் உடன்பாட்டிற் கிசைந்தனர். அப்பொழுது தாம் தனிமையில் போர் தொடுக்க நேர்ந்ததைக்கண்டு, நானுபர்னவிஸ் சற்று மலைத்தார். அச்சமயம் ஆங்கிலேயரும் திப்புவிற்கெதிரே இரண்டாவது மைசூர் யுத்தம் புரியவேண்டி நேர்ந்ததால் சமாதானத்தைக் கோரினர்.

ஸால்பை உடன்படிக்கை (கி. பி. 1782): இரு கட்சியினரும் **ஸால்பை** என்னுமிடத்தில் ஓர் உடன்பாடு செய்துகொண்டனர். அதில் பின் கூறப்பெறும் தீர்மானங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டன.

நாராயணராவின் ஆண் குழந்தையாகிய **2-வது மாதவராவே** பீஷ்வாவாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அப்பதவிக்காகப் போட்டியிட்ட ரகுநாதராவிற்கு வருடத்திற்கு **மூன்று லக்ஷ ரூபாய் உபகாரச் சம்பளம்** அளிக்கப்பட வேண்டும். ஆங்கிலேயருக்கு **ஸால்ஸெட்டும்**, ஸிந்தியாவிற்கு **புரோச்சும்** வழங்கப் பெறவேண்டும். மஹாராஷ்டிரர்கள் வேறு ஐரோப்பிய நாட்டினருடன் எவ்வித உடன்பாட்டிற்கும் இசையக் கூடாது.

பிள்ளைகளே! வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் புரியப்பெற்ற இந்த யுத்தங்கள் ஆங்கிலேயரின் அதிகாரத்தை எவ்வளவு ஓங்கச் செய்தன, பாருங்கள்!

வினுக்கள்

(1) வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் பதவி யேற்ற பொழுது இந்தியாவின் நிலைமை எவ்வாருயிருந்தது ?

(2) கவர்னரா யிருக்கும்பொழுது வாரன் ஹேஸ்டிங்ஸ் ஏற்படுத்திய அரசியல் திட்டத்தை விவரிக்க.

(3) கவர்னர் பதவி வகித்த காலத்தில் வாரன்ஹேஸ் டிங்ஸ் எவ்வாறு கம்பெனிக்குப் பணம் சேர்த்தார் ?

(4) ஒழுங்குமுறைச் சட்டத்தின் ஷரத்துக்களையாவது. குறைகளையாவது விளக்குக.

(5) பிட் இந்தியா சட்டத்தைக் குறித்து ஓர் குறிப்பு வரைக.

(6) ராஜா நந்தகுமார், ஸால்பை உடன்படிக்கை முத லியவைகளைப் பற்றிச் சுருங்கக் கூறுக.

(7) முதல் மஹாராஷ்டிர யுத்தத்திற்கு அல்லது இரண் டாவது மைசூர் யுத்தத்திற்குக் காரணங்கள் யாவை? வாரன் ஹேஸ்டிங்ஸிற்கு அந்திய காலத்தில் விளைந்த துன்பம் யாது? அது எவ்வண்ணம் முடிந்தது ?

27. காரன் வாலிஸ் பிரபு

(கி. பி. 1786—1793)

வாரன் ஹேஸ்டிங்ஸிற்குப் பிறகு காரன் வாலிஸ் கவர்னர் ஜெனரலானுர். அவருடைய காலத்தில் பின்னும் ஆங்கில ஆதிக்கம் பெருகியது. அரசாட்சி முறைகளும் சீர்திருத்தப்பெற்றன. அவற்றைப் பற் றிய விவரங்களைச் சுருங்கக் கற்போம்.

A. யுத்தம்

மூன்ருவது மைசூர் யுத்தம் (கி. பி. *1790-1792*):

ஹைதர் அலிக்குப்பின் அவரது குமாரரான **திப்பு** மைசூருக்கு அதிபதியானுர் எனப் படித்தோம். அவ

ரும் தமது தந்தையைப்போலவே தமது ராஜ்யத்தைப் பெருக்கப் பெரிதும் நோக்கங்கொண்டவர். ஆனது பற்றி, அவர் **மஹாராஷ்டிரர்களையும், நிஜாமையும்** எதிர்த்தார். அப்பொழுது அவர்கள் ஆங்கிலேயரின் உதவியை நாடினர். இங்கிலாந்திலிருந்து பதவியேற்க வரும் பொழுதே சுதேச மன்னர்களின் விவகாரங்களில், அனுவசியமாயும், தங்களுடைய அநுமதியின்றியும் பிரவேசிக்கக்கூடாது என்று கார்ன் வாலிஸ் மேலதிகாரிகளால் எச்சரிக்கப்பட்டார். ஆதலால் **பிரவேசியாக் கொள்கையைக்** கடைப்பிடிக்கக் கருதி, அவர் இச் சுதேசமன்னர்களுக்கு உதவிபுரிய மறுத்தார். ஆயினும் ஆங்கிலேயருக்கு நண்பர்களான **கர்நாடக நவாபையும், திருவாங்கூர் மன்னரையும்** திப்பு சுல்தான் அடுத்தபடியாகத் தாக்கிய பொழுது, கவர்னர் ஜெனரல் சும்மாயிருக்க முடியவில்லை. அப்படிக்கின்றி, அச்சமயம் தடை செய்யாது, திப்புவின் அதிகாரத்தை வளரவிடுத்தால், தக்ஷிணத்திலும், கர்நாடகத்திலும் ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் அழிந்துவிடும் என அவர் அஞ்சினர். ஆனதுபற்றி அவர் மஹாராஷ்டிரர்களுடனும், நிஜாமுடனும் உடன்பாடுகள் செய்து முடித்து, அவர்களுடைய சேனைகளையும், தம்முடைய படையுடன் இணைத்துக் கொண்டு, தாமே நேரில் திப்புவைத் தாக்க வந்தார்.

நிகழ்ச்சிகள் :

சென்னை ஆங்கிலக் கவர்மெண்டார் முதலில் திப்புவிற்குச் சொந்தமான **கோயம்புத்தூர், பாலக்காடு, திண்டுக்கல்** முதலிய இடங்களைக் கைப்பற்றினர்கள். அதற்குள்ளாகக் **கார்ன் வாலிஸ் பிரபு** கூட்டுச் சேனை

யை மைசூருக்கு இட்டுச்சென்று, **பெங்களூரைப்** பிடித்துக்கொண்டார். பின்பு திப்புவின் தலைநகரான **ஸ்ரீரங்கப்பட்டினத்தையும்** எதிர்த்தார். இம் மூன்று நேச தேசங்களையும் ஒருங்கே எதிர்க்க அச்சமயம்

காரன்வாலிஸ் பிரபு

தமக்குச் சக்தியற்றிருந்ததினிமித்தம் திப்பு உடனே சமாதானத்திற் குடன்பட்டார். அதன் பயனாய் ஓர் உடன்படிக்கை செய்து முடிக்கப்பட்டது.

ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கை (கி. பி. 1792): அவ் வுடன்பாட்டின்படி, திப்பு யுத்தச் செலவிற்காக **மூன்று கோடி ரூபாய்** தரவேண்டியதாயிற்று. தாம் யுத்தத்தில் கைப்பற்றிய **கைதிகள்** அனைவரையும் விடுவிக்க நேர்ந்தது. மேலும் தமது **ராஜ்யத்தில் பாதியை**

யும் தமது எதிரிகளுக்கு வழங்க வேண்டியதாயிற்று. அதை அவரது விரோதிகள் பின்வருமாறு பங்கிட்டுக் கொண்டனர். **மதுரை, சேலம், மலையாளம்** முதலிய ஜில்லாக்களில் ஓர் பகுதி ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. **கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தபுரம்** முதலியவைகளின் ஓர் பாகம் நிஜாமிற்கு வழங்கப்பட்டன. **கிருஷ்ணா நதிக்குத் தெற்கில் உள்ள பிரதேசம்** மஹாராஷ்டிரர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இந் நிபந்தனைகள் திப்புவால் நிறைவேற்றப் பெறும் வரை அவரது **இரு குமாரர்கள்** ஆங்கிலேயர் வசம் **ஜாமீனாக ஒப்புவிக்கப் படவேண்டும்** என்றும் திட்டம் செய்யப்பட்டது.

B. சீர்திருத்தங்கள்

கார்ன் வாலிஸ் தமது காலத்தில் நான்கு முக்கிய சீர்திருத்தங்களை இயற்றினார்.

(a) **போலீஸ் இலாகா**வைச் சீர்மைப்படுத்தி உள்நாட்டில் குழப்பத்தைப் போக்கினார்.

(b) **கம்பெனி உத்தியோகஸ்தர்கள்** லஞ்சம் வாங்குதலையும் வெகுமதி பெறுதலையும் தடுத்தார். பின்னும் அவர்களுடைய **சொந்த** வியாபாரத்தை அறவே ஒழித்துக் கம்பெனியின் வருவாயைப் பெருக்கினார்.

(c) வரி வசூல் வேலையையும் நியாய **விசாரணை**யையும் கலெக்டர்களால் ஒருங்கே சமாளிக்க முடியவில்லை. ஆகவே **ஜில்லா ஜட்ஜுகள்** நியமிக்கப்பெற்று, அவர்களே ஸிவில், கிரிமினல் வழக்குகளை விசாரிப்பதென ஏற்பாடாயிற்று.

(d) **சாசுவத நிலவரித் திட்டம்:** வார்ன் ஹேஸ்டிங்ஸினது காலத்தில் வங்காளம், பீஹார், ஒரிஸா முதலான மாகாணங்களில் **நிலவரி** ஐந்து வருடங்களுக்கோ பத்து வருடங்களுக்கோ ஏலங் கூறப்பட்டு, பெரிய தொகைகள் அளிக்க முன் வரும் பிரபுக்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டது. அதனால் அப் பிரபுக்கள் குடிகளை ஹிம்சித்து ஒன்றிற் கிரண்டாகவரி வசூல்செய்து பொது மக்களைத் துன்பத்திற் குள்ளாக்கினர். மேலும் சில சந்தர்ப்பங்களில் ஜனங்களுடைய எதிர்ப்பால் வரி சரிவர வசூலிக்கப் பெருமலும் இருந்தது. ஆகவே காரன்வாலிஸ், மேலதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் யோசனை வாய்ந்த ஓர் திட்டத்தைப் பிறப்பித்தார். அதன்படி நிலங்களுக்கு ஜமீன்தார்கள் சொந்தக்காரர்கள் ஆக்கப்பட்டனர். நிலங்களின் விளைச்சல்களை ஒருவாறு கணக்கிட்டு அவைகளுக்கு நிரந்தர அல்லது **சாசுவத வரியைத்** திட்டப்படுத்தினர். இவ் வேற்பாட்டிற்கே **சாசுவத நிலவரித் தீர்மானம்** எனப் பெயர் வழங்கலாயிற்று.

இவ்வேற்பாடு ஜமீன்தார்களுக்கு உற்சாகத்தையுண்டுபண்ணி, புதிய நிலங்களைப் பயிரிடவும், ஏற்கனவே உழப்பட்ட நிலங்களின் விளைவை அதிகப்படுத்தவும், குடியானவர்களின் ஆதரவை நாடவும் தூண்டிற்று. ஆயினும் கம்பெனிக்குப் புதிய நிலங்களினின்றும் வரவேண்டிய வரி தடைபட்டது. மேலும் சில மூர்க்க ஜமீன்தார்கள் தங்களுக்கடங்கிய பண்ணையாட்களைத் துன்புறுத்திக் குடிமக்களின் அப்ரீதியைச் சம்பாதித்தனர்.

வினாக்கள்

1. மூன்ருவது மைசூர் யுத்தத்திற்குக் காரணங்களை விவரிக்க.

2. ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கையின் ஷரத்துக் களை விளக்குக.

3. சாசுவத நிலவரித் தீர்மானம் என்பதைப் பற்றி ஓர் குறிப்பு வரைக.

4. கார்ன் வாலிஸ் இயற்றிய மற்ற சீர்திருத்தங்கள் யாவை?

28. ஸர் ஜான் ஷோர்
(கி. பி. 1793—1798)

ஸர் ஜான் ஷோர் கார்ன் வாலிஸுக்குப் பின் கவர்னர் ஜெனரல் பதவியை வகித்தார். அவருடைய காலத்தில் மஹாராஷ்டிரர்களுடைய ஆதிக்கம் ஓங்கியது. சுதேச மன்னர்களின் வழக்குகளில் **தலையிடாக் கொள்கையை** ஷோர் கூடுமானவரை பின்பற்ற முயன்ருர். ஆனல் அதை முற்றிலும் அனுசரிக்க முடியவில்லை. இவ் விஷயங்களை இங்குத் தெளிவாக கற்போம்.

மஹாராஷ்டிரர்களின் ஆதிக்கம்: மூன்ருவது பானிபட் யுத்தத்திற்குப் பின் மஹாராஷ்டிரர்களின் அதிகாரம் தலை சாய்ந்ததுபோலத் தோன்றினும், பின்னும் அது தலைநிமிரத்தொடங்கியது. நாஞபர்னவிஸின் ஏற்றக் கண்காணிப்பால் மஹாராஷ்டிரர்களின் ஆதிக்கம்ஓங்கியது. **மஹாதஜி ஸிந்தியா** குவாலியரில் தமது அதிகாரத்தைப் பெருக்கிக் கொண்டு **பீஷ்வாவின் பிரதிநிதி** என்ற பட்டத்தை முகலாய மன்னரிடமிருந்து பெற்ருர்.

கி. பி. 1794-ல் அவர் இறந்தபொழுது அவரது சொந்தக்காரரான **தௌலத் ராவ் ஸிந்தியா** அவரது பதவியை வகிக்கலானார். அச்சமயம் **ஹோல்கார், பான்ஸ்லே** முதலியோரின் அதிகாரமும் வளர்ந்தது. அவர்கள் தங்களது சுயேச்சாதிகாரத்தை நாட்டத் தலைப்பட்டனர். அதே சந்தர்ப்பத்தில் **நானாபர்னவிஸிற்கும், பீஷ்வாவிற்கும் பகைமை** மூண்டது. இவற்றை யெல்லாம் கண்ட நானாபர்னவிஸ் மஹாராஷ்டிரத் தலைவர்களெல்லோரையும் ஒன்றுகூட்டி நிஜாமிற் கெதிரே போர் தொடுக்கச் செய்து, அவர்களுடைய சுய நல முயற்சிகளுக்குத் தடைசெய்தார். ஆனால் பீஷ்வா நானாபர்னவிஸினது மட்டில்லா அதிகாரத்திற்குத் தாம் கட்டுப்பட நேர்ந்ததை யெண்ணி மனம் நொந்து கி. பி. 1795-ல் தமது உயிரைப் போக்கிக் கொண்டார். அவருக்குப் பின் ரகுநாதராவின் மைந்தரான **இரண்டாவது பாஜிராவ்** பீஷ்வா ஆனார்.

அஹல்யாபாய்: இவர்களது விஷயம் இவ்வாறாக, **இந்தூர்** என்ற மஹாராஷ்டிரச் சிற்றரசு நாட்டில் **கண்டேராவ்** என்றவர் ஆண்டுவந்தார். அவரும், அவரது புதல்வரும் இறந்துபோகவே அந்நாட்டை அவருடைய மனைவியாராகிய **அகல்யாபாய்** என்பார் ஆள நேரிட்டது. அவ்வம்மையார் கல்வி கேள்விகளிற் சிறந்து, பக்தியில் ஆழ்ந்து, மனோதிடத்தில் மிகுந்து விளங்கினார். அவருடைய ஆட்சி வெகு நேர்மையுடன் நடந்தேறியது. அவர் பிரஜைகள் பால் கொண்ட அன்பும், ராஜ்யபாரத்தில் உண்டுபண்ணிய சீர்திருத்தங்களும், நியாயத்தைச் செவ்வனே நிறுவ எண்ணி இயற்றிய திட்டங்களும், தம்மை

எதிர்த்து வந்த ராஜபுத்திரர்களைப் பின்வாங்கச் செய்த வீரமும், பிற மதங்களிடம் கொண்ட மதச் சகிப்பும் இன்றும் இந்தூர் மக்களால் புகழப்பெற்று வருகின்றன. அவர் தமது பந்துக்களில் ஒருவரான **துகாஜி ராவ் ஹோல்கார்** என்பவரை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டு அவருடைய உதவியையும் ஏற்று ராஜ்ய பாரத்தைச் சீர்பெற நடத்தினார். அஹல்யாபாய் கி. பி. 1795-ல் காலமானார்.

பிரவேசியாக் கொள்கையை யனுஷ்டித்தலும் அதனது விளைவும் (கி. பி. 1795): நானுபர்னவிஸின் தலைமையின் கீழ் மஹாராஷ்டிரர்கள் நிஜாமை எதிர்க்கச் சென்றனர் எனப் படித்தோம். அச்சமயம் நிஜாம் தமக்கு உதவிபுரியுமாறு ஆங்கிலேயரை வேண்டினர். **தலையிடாக்கொள்கையை** எப்படியும் கொண்டு செலுத்துவது எனத் தீர்மானித்திருந்த ஸர் ஜான் ஷோர் துணைபுரிய மறுத்துவிட்டார். அதன் பயனாக கி. பி. 1795-ல் **கர்தா** எனனுமிடத்தில் நடந்த சண்டையில் நிஜாம் முற்றிலும் தோல்வி யுற்றுத் தமது **நாட்டில் பாதியை** மஹாராஷ்டிரர்களுக்குக் கொடுத்தது மன்னியில், யுத்தச் செலவிற்காக மஹாராஷ்டிரர்களுக்கு **மூன்று கோடி ரூபாயும்** தரவேண்டி நேரிட்டது.

அதனால் நிஜாம் ஆங்கிலேயரிடம் வெறுப்புற்று, அவருடைய சிநேகத்தை விடுத்துச் சொந்தத்தில் திறம் வாய்ந்த படையொன்றைத் தயாரிக்கக் கருதிப் பிரெஞ்சுத் தளகர்த்தர்களைத் தமது சேனைக்கு யுத்தப் பயிற்சி அளிப்பதற்காக நியமித்தார். **பிரெஞ்சியரின் நட்பையும்** கொள்ளலானார்.

ஆகவே ஷோர் சுதேச மன்னர்களின் விவகாரங்களில் தலையிட்டுக் கொள்ளாமலிருக்க முடியவில்லை.

அயோத்தியில் வார்சுப்போரும் ஆங்கிலேயரின் பிரவேசிப்பும் (கி. பி. 1798) : நிற்க, கி.பி. 1797-ல் அயோத்தி நவாப் ஆகிய **அஸப் உத் தௌலா** இறந்தார். உடனே பட்டத்திற்குப் போர் தொடங்கியது. சிங்காதனத்திற்கு உரிமையற்ற **மிர்ஸா அலி** என்பவர் பட்டத்தை அடைந்தார். அப்பொழுது முந்திய நவாபின் சகோதரரான **ஸாதத் அலி** ஆங்கிலேயரை உதவிபுரிய வேண்டினர். ஆங்கிலேயரின் நாடுகளுக்குச் சமீபமாயுள்ள அயோத்தியில் எழுந்த கலகத்தையும் சட்டை செய்யாதிருந்தால், ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்கு ஆபத்து விளையலாம் என அஞ்சி ஷோர் ஸாதத் அலிக்கு உதவினர். அதன் பலனாக அயோத்தி அது முதற்கொண்டு ஆங்கிலேயரின் ஆதரவைப் பெற வேண்டும் என்றும் அவ்வண்ணம் ஆங்கிலேயர் உதவுவதற்காக, **அலஹாபாத்தும்** வருடத்திற்கு **76 லட்சம் ரூபாயும்** அவர்களுக்கு வழங்கப்பெற வேண்டும் என்றும் திட்டம் செய்யப்பட்டது.

ஸர் ஜான் ஷோர் கி. பி. 1798-ல் தமது ஆட்சியின் இறுதியில் இங்கிலாந்திற்குத் திரும்பினர்.

வினாக்கள்

1. மூன்றும் பானிபட் யுத்தத்திற்குப் பின்பு மஹாராஷ்டிரர்களின் அதிகாரம் வளர்ந்ததைக் குறித்து ஒரு குறிப்பு வரைக.

2. அஹல்யாபாயின் பெருமையை விளக்குக.

3. கர்தாச் சண்டையைப் பற்றி உங்களுக்கென்ன தெரியும்?

4. அயோத்தியில் நிகழ்ந்த வார்சுப்போரைப் பற்றிச் சுருக்கி எழுதுக.

29. வெல்லெஸ்லி பிரபு

(கி. பி. 1798—1805)

ஸர் ஜான் ஷோருக்குப் பிறகு வெல்லெஸ்லி பிரபு கவர்னர் ஜெனரல் பதவி வகித்தார்.

இந்தியாவின் நிலைமை: வெல்லெஸ்லி கவர்னர் ஜெனரலான பொழுது இந்தியாவின் நிலைமை ஆங்கிலேயரின் அதிகார வளர்ச்சிக் கேற்றதாயில்லை. ஸர் ஜான் ஷோர் அனுசரித்த பிரவேசியாக் கொள்கையினுல்சுதேச மன்னர்களுக்கு ஆங்கிலேயரிடம் நம்பிக்கையும் பயமும் அற்றுவிட்டன. நிஜாம் பிரெஞ்சியரின் சிநேகத்தை நாடினுரெனச் சென்ற அத்தியாயத்தில் படித்தோம். நிற்க மஹாராஷ்டிரர்கள் ஆங்கிலேயரை மதிக்காது வடக்கிலும் தெற்கிலுமுள்ள சுதேச மன்னர்களைத் தாக்கியும் கொள்ளையடித்தும் வந்தார்கள். பஞ்சாப் சீக்கியர்களின் கீழ் தன் வலிமையைப் பெருக்கிக்கொண்டே வந்தது. ஆப்கனிஸ்தானம் திப்புவால் தூண்டப்பெற்று இந்தியாவைத் தாக்கத் தயாரித்துக் கொண்டிருந்தது. அயோத்தியிலும் கர்நாடகத்திலும் ஆட்சி திறம்பட நடைபெறவில்லை.

இவை நீங்க, பிரெஞ்சுச் சக்கரவர்த்தியான **நெபோலியன்** திப்பு சுல்தானின் உதவியை நாடி இந்தியாவை யெதிர்க்கக் காத்துக்கொண்டிருந்தார். அவ்வாறு ஏற்படுமாயின் இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு ஆட்டம் கண்டுவிடும். ஆகவே சுதேச மன்னர்களையும் பிரெஞ்சுக்காரரையும் ஒன்று சேர விடாமற் றடுப்பதே தாம் முதலில் கவனிக்க வேண்டிய விஷயமாகும் என எண்ணி அதற்கு வேண்டிய

முயற்சிகளைச் செய்யலானார். இன்னும் ஆங்கில சாம் ராஜ்யத்தைப் பெருக்கவும் நோக்கம் கொண்டார்.

வெல்லெஸ்லி கையாண்ட முறைகள்: தமது எண்ணங்களைக் கைகூட்டுவிக்க வெல்லெஸ்லி பிரபு மூன்றுவிதமான முறைகளைக் கையாண்டார்.

A. உதவிச்சேனை யேற்பாடு:

i. உதவிச்சேனை யேற்பாடு என்றால் என்ன? சுதேச மன்னர்களைக் கட்டுப்படுத்தி, அவர்கள் ஆங்கிலேய



வெல்லெஸ்லி பிரபு

ரின் சிநேகத்தை ஏற்குமாறு செய்ய வெல்லெஸ்லி **உதவிச்சேனை ஏற்பாடு** என்ற ஒரு திட்டத்தைப் பிறப்பித்தார். அது பின்வருமாறு:

"எச்சிற்றரசரும் ஆங்கிலேயரின் இணைப்பைத் தவிர்த்து வேறு எந்த ஐரோப்பியர்களின் நட்பையும் கொள்ளக்கூடாது. அச் சுதேச மன்னருக்கு வெளி விரோதிகளாலும் உள்நாட்டுக் கலகங்களாலும் கஷ்டம் விளையாமலிருக்க ஆங்கிலக் கம்பெனியார் ஓர் தக்க சேனை கொண்டு உதவவேண்டும். அப்படை அந்நாட்டின் பாதுகாப்பின் நிமித்தம் நிலையாக அந்நாட்டிலேயே தங்கியிருக்கும். அதன் செலவிற்காகச் சுதேச மன்னர் வருஷவாரிக் கப்பம் செலுத்தவேண்டும். அவ்வாறு கப்பம் கட்ட மறுத்தாலும், அதைச் செலுத்த முடியாமற்போனாலும், அவரது நாட்டின் ஓர் பகுதியை ஆங்கிலேயரின் சுயாதீனத்தில் விட்டுவிடவேண்டும். மேலும் அந்நாட்டில் **ஆங்கில ஸ்தானீகர்** ஒருவர் தங்கி அரசியலைக் கண்காணித்து வர அனுமதிக்கப் பெறவேண்டும். அயல் நாட்டினருடனும், அண்டை இராஜ்யங்களுடனும், சண்டையோ சமாதானமோ ஆங்கிலேயரின் ஆமோதிப்பின்றி நிகழ்த்தப் பெறக் கூடாது."

ii. இத் திட்டத்திற்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்கள் :

கெயிக்வார் (கி. பி. 1799): கி. பி. 1799-ல், **கெயிக்வார்** வெல்லெஸ்லியின் ஆலோசனைக் குட்பட்டு உதவிச்சேனை யேற்பாட்டை ஒப்புக்கொண்டார்.

நிஜாம் (கி. பி. 1800): கி. பி. 1800-ல் நிஜாமும் இத் திட்டத்தை யேற்றுக்கொண்டு சேனையின் செலவிற்காக, நிரந்தரமாகவே, தாம் திப்புவிடமிருந்து அடைந்த **கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தபூர்** என்ற ஜில்லாக்களை ஆங்கிலேயர்களுக்குத் தந்து விட்டார்.

ஆகவே அவைகள் **திரும்பத் தரப்பட்ட ஜில்லாக்கள்** என்ற பெயரை யேற்றன.

அயோத்தி (கி. பி. 1801): அயோத்தி நவாப் மஹாராஷ்டிரர்களாலும் ஆப்கானிய மன்னராலும் பயமுறுத்தப்பட்டார். அதனல் அவருக்கு ஆங்கிலேயர்களின் உதவி உண்மையில் உபகாரத்தை யுண்டாக்க வல்லதாயிருந்தது. அதற்கேற்ப வெல்லெஸ்லியும் அவரை வற்புறுத்தவே, அவர் கி. பி. 1801ல் உதவிச் சேனை யேற்பாட்டை யேற்றுக்கொண்டார். படைச் செலவிற்காக அவர் கங்கைக்கும் யமுனைக்கும் இடையிலுள்ள **தோவாப்** என்ற செழிப்புற்ற பிரதேசத்தையும், **ரோஹில் கண்ட்** என்ற சிறு ராஜ்யத்தையும் ஆங்கிலேயருக்குத் தந்து விட்டார்.

(B) இவ்வேற்பாட்டிற் கிணங்காதவர்களுடன் போர்கள் :

இவ்வுதவிச் சேனை யேற்பாட்டைத் **திப்புவும் மஹாராஷ்டிரர்களும்** நிராகரித்தனர். ஆகவே அவர்களுக்கெதிரே வெல்லெஸ்லி போர் தொடுத்தார்.

1. திப்புவுடன்போர்—நான்காவது மைசூர் யுத்தம் (கி. பி. 1799) :

காரணம் : மூன்ருவது மைசூர் யுத்தத்தில் திப்பு சுல்தான் தமது ராஜ்யத்தின் ஓர் பகுதியை எதிரிகளுக்கு வழங்கினுர் எனப் படித்தோம். மேலும் அவற்றைத் திரும்ப அடைய அவர் பெரிதும் முயன்ருர் என்றும் தமக்குத் தீங்கு விளைவித்து வந்த ஆங்கிலேயரைத் துரத்தியடிக்க வேண்டுமென்றும், அதற்காகவே அவர் உதவிச் சேனை யேற்பாட்டை யேற்க மறுத்தார் என்றும், ஆங்கிலேயர்களுக்கு விரோதி

யான நெப்போலியனுடன் உறவாடி, அவரை இந்தியா வின்மீது படையெடுக்கத் தூண்டினரென்றும் கற் ரூரும். இவைகளே இந்த யுத்தத்திற்குக் காரணங் களாகும்.

நிகழ்ச்சிகள்: வெல்லெஸ்லியே சென்னைக்கு வந்து யுத்தத்தை நடத்தலானார். பம்பாயினின்றும் ஓர் ஆங் கிலச்சேனை அனுப்பப்பட்டது. இரண்டு படைகளும் சேர்ந்து மாலவல்லி என்னுமிடத்தில், திப்புவைத் தோற்கடித்தன. ஆகவே அவர் தமது தலைநகரத்திற் குத் திரும்பினார். ஸ்ரீரங்கப் பட்டினமும் முற்றுகையிடப் பட்டது. அம்முற்றுகையைப் போக்க இயலாமல் திப்பு கோட்டை வாயிலில் நின்று ஆவேசத்துடன் போரிட்டு உயிர் துறந்தார்.

முடிவு: இச்சண்டையுடன் ஹைதரின் வம்சம் அற்றது. திப்புவின் குமாரர்கள் உபகாரச் சம்பளம் அளிக்கப்பெற்று வேலூருக்கு அனுப்பப்பட்டார்கள். மதுரை, சேலம் முதலிய ஜில்லாக்களில் மிஞ்சியிருந்த பகுதியும், கன்னடம் என்ற ஜில்லாவும் ஆங்கிலேயருக் குச் சொந்தமாயின. மூன்றாவது மைசூர் யுத்த முடி வில் நிஜாமுக்கு வழங்கப்பட்ட ஜில்லாக்களில் மீதி யிருந்த பாகம் நிஜாமுக்கே மீண்டும் கொடுக்கப் பட்டது. ஹைதருடைய காலத்திற்கு முன்னிருந்த மைசூர் ராஜ்யமே மிஞ்சியது.

அதற்கு அதன் அரச வம்சத்தைச் சேர்ந்த கிருஷ்ண ராஜ உடையார் என்றவர் அரசராக்கப்பட்டார். அவர் சிறு வயதினராதல் பற்றி அவரது அரசியலை நடத்து வதற்காக நிர்வாக சபை யொன்று ஏற்படுத்தப்பட் டது. பின்னும் மைசூர் உதவிச் சேனை யேற்பாட்டை

யேற்கும்படி நேர்ந்தது. அதனுல் பெங்களூரில் ஓர் ஆங்கில ஸ்தானீகர் வசிக்கலுற்ருர். ராஜ்யத்தைக்காக்க



மைசூர் யுத்தங்களில் சம்பந்தப்பட்ட இடங்கள்

ஓர் உதவிச் சேனையும் அந்நாட்டுச் செலவிலேயே மைசூரில் நிலையாக நிறுத்தப்பட்டது.

2. **மஹாராஷ்டிரர்களைக் கட்டுப்படுத்துதல் :** அடுத்த படியாகத் தமது உதவிச் சேனை யேற்பாட்டை யேற்க மறுத்த மஹாராஷ்டிரர்களை யெதிர்க்க வெல்லெஸ்லி ஆயத்தமானார்.

(a) இரண்டாம் மஹாராஷ்டிர யுத்தம்
(கி. பி. 1802—1803)

காரணம் : மஹாராஷ்டிரத் தலைவர்களிற் சிலர் உதவிச் சேனை யேற்பாட்டை ஒப்புக்கொள்ள மறுத்ததே இந்த யுத்தத்திற்கு முக்கிய காரணமாகும். பின்னும் ஓர் சம்பவமும் தக்க முகாந்திரமாக உதவிற்று. அப்பொழுது பீஷ்வாவாக இருந்த **2-வது பாஜிராவுக்கும்,** இந்தூரை யாண்டு வந்த **யஸ்வந்தராவ் ஹோல்காருக்கும்** மனஸ்தாபம் இருந்து வந்தது. அதன் விளைவாக பீஷ்வா ஹோல்காரின் சகோதரரைக் குரூரமாகக் கொன்றுவிட்டார். அதையறிந்த இந்தூர்த் தலைவர் பீஷ்வாவை எதிர்த்துத் தோற்கடித்து விரட்டினார். அச்சமயம் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளப் பீஷ்வா **பஸ்ஸீனுக்கு** ஓடவேண்டியதாயிற்று.

அங்கு அவர் ஆங்கிலேயரின் உதவியை நாடினார். அதற்கு அவர்கள் தாம் உதவிச் சேனை யேற்பாட்டிற்குக் கட்டுப்படுவதா யிருந்தால் துணை புரிவதாகக் கூறினார்கள். **திக்கற்ற பீஷ்வா அதற்கிசைய நேர்ந்தது.** இவ்விஷயம் மற்ற மஹாராஷ்டிரத் தலைவர்களின் செவிக்கெட்டியதுமே அவர்கள் அவரிடத்திற் கோபமும் அருவருப்பும் கொண்டும் தங்களுக்கும் அதே கதி நேரிடலாமென எண்ணி பீஷ்வாவையும், ஆங்கிலேயரையும் தாக்கத் தலைப்பட்டனர்.

நிகழ்ச்சிகள் (கி. பி. 1803) : வெல்லெஸ்லி பிரபு தமது தம்பியாரான **ஜெனரல் ஸர் ஆர்தர் வெல்லெஸ்லியை** ஒரு படையுடன் பீஷ்வாவுக்கு உதவி செய்ய அனுப்பினார். மேலும் நான்கு தனிச் சேனைகளை, மஹாராஷ்டிர வீரர்களை ஆங்காங்குத் தாக்க அனுப்பினார். கவர்னர் ஜெனரலின் தம்பியார் **அஸ்ஸே** என்ற இடத்தில் ஸிந்தியாவையும், பான்ஸ்லேயையும் தோற்கடித்ததினிமித்தம் அவர்கள் பின் வாங்கும்படி நேர்ந்தது. அதே சமயம் மற்றொரு சேனையால் ஸிந்தியா **புரோச்** என்னுமிடத்தை யிழந்தார்.

பான்ஸ்லே துணைபுரி முறையை ஏற்றல் : மறுபடியும் பான்ஸ்லே **அர்காம்** என்னுமிடத்தில் தோல்வியுற்றார். தம்முடைய சில கோட்டைகளையும் இழந்தார். அதனால் அவர் அஞ்சி, **தேவகாம்** என்னுமிடத்தில் ஆங்கிலேயருடன் உதவிச்சேனை யேற்பாட்டிற்கு இசைந்தார். அதன்பயனாய் **பீராரும், கட்டாக்கும்** ஆங்கிலேயருக்கு வழங்கப்பட்டன. ஆனால் ஆங்கிலேயர் தங்களது சிநேகிதரான நிஜாமிற்கு பீராரைத் தந்துவிட்டனர்.

ஸிந்தியாவும் துணைபுரி முறைக்கு உடன்படுதல் : அஸ்ஸேயில் தோல்வியடைந்த ஸிந்தியா நாட்டிற்குத் திரும்பிப் போனார். ஆனால் **ஜெனரல் லேக்** என்பவர் வசம் அவரை யெதிர்க்க அனுப்பப்பட்ட ஆங்கிலச் சேனை முதலில் அவருக்கு அப்பொழுது சொந்தமாயிருந்த ஆக்ராவையும், டில்லியையும் கைப்பற்றியது. டில்லியில் அடைக்கப்பட்டுக் கிடந்த **ஷா ஆலம்** மீண்டும் ஆங்கிலேயர் வசமானார்.

பின்பு ஜெனரல் லேக் ஸிந்தியாவை **லாஸ்வாரி** என்னுமிடத்தில் தோற்கடித்தார். அச்சமயம் ஸிந்தியா வேறு வழியின்றி துணைபுரி திட்டத்தை ஏற்றுக் கொண்டார். அதன்படி அவர் ஆங்கிலேயருக்குச் சேனைச் செலவுக்காக **யமுனைக்கு இருபுறமுள்ள பிரதேசத்தையும்,** **புரோச்சை**யும் **டில்லி, ஆக்ரா, ஆமத்நகரம்** முதலிய இடங்களையும் ஆங்கிலேயருக்கு வழங்க வேண்டியதாயிற்று. பின்பு அவருக்கு எஞ்சியது **மாளவ**மேயாகும்.

[குறிப்பு ; இனி மஹாராஷ்டிரத் தலைவர்களுள் உதவிச் சேனையேற்பாட்டை யேற்காமற் றனித்து நின்றவர் ஹோல்கார் என்பவரேயாவர்,]

(b) மூன்றும் மஹாராஷ்டிர யுத்தம் (கி. பி. 1804-1805):

காரணம் : ஹோல்காருக்கு எதிரே ஆங்கிலேயர்கள் இந்த யுத்தத்தைத் தொடங்கியதற்கு அவர் உதவிச் சேனை யேற்பாட்டிற்குக் கட்டுப்படாமல் இருந்ததே காரணமாகக் கொள்ளப்பட்டது. ஆங்கிலேயரின் நட்பைக கொண்டிருந்த **ராஜ புத்திரர்களை** அவர் எதிர்த்தார் என்பது பின்னுமோர் முகாந்திரமாய் உதவிற்று.

நிகழ்ச்சிகள் (கி. பி. 1804)

ஆங்கிலேயரின் தோல்வி : சண்டை மூண்டதும் கர்னல் மன்ஸன் **முகுந்தராபாஸ்** என்னுமிடத்தில் ஹோல்காரை யெதிர்த்தார். அச்சமயம் **பரத புரத்தரசர்** ஹோல்காருக்கு உதவினர். ஆகவே ஆங்கிலத் தளகர்த்தர் தோல்வியுற்று **ஆக்ரா**விற்கு ஓடவேண்டியதாயிற்று. பின்பு ஹோல்கார் தைரியங்கொண்டு

மஹ்ராவைப் பிடித்து டில்லியை அடுத்தபடியாகத் தாக்கினார். அதைக்கண்ட ஆங்கிலேயர் திடுக்கிட்டனர்.

ஆங்கிலேயரின் வெற்றி : ஆயினும் வெல்லெஸ்லி ஹோல்காரை மீண்டும் எதிர்க்க **ஜெனரல் லேக்கை** விடுத்தார். **பருகபாத்** என்ற இடத்தில் ஹோல்கார் தோல்வியடைந்து **இந்தூரையும்** இழந்தார். பின்பு **டீக்** என்ற இடத்திலும் அவருக்குத் தோல்வி யேற்பட்டது. உடனே அவர் பஞ்சாபிற்கு ஓடி, அங்குக் கொஞ்ச காலம் மறைந்திருந்தார்.

அதற்குப்பின் **பரதபுரத்தரசர்** ஆங்கிலேயரால் தாக்கப்பட்டார். அவர் சண்டை செய்ய இயலாமல் ஓர் உடன்பாட்டிற்கு இசைந்தார். அதன்படி அவர் ஆங்கிலேயரின் சிநேகத்தைப்பெறுவதென்றும், யுத்தச் செலவிற்காக **26 லக்ஷ ரூபாய்** அவர்களுக்குத் தருவதென்றும் ஏற்பாடாயிற்று.

இவைகளினிடையே (கி. பி. 1805ல்) வெல்லெஸ்லி தமது பதவியையிழந்து இங்கிலாந்திற்குத் திரும்பினார். ஆகவே சண்டை முடிவு பெறாமல் நின்றது.

(c) திறனற்ற ஆட்சியும் நாடுகளைக் கைப்பற்றலும் : கடைசியாக ஆங்கில சாம்ராஜ்யத்தைப்பெருக்க வெல்லெஸ்லி மற்றுமோர் உபாயம் செய்தார்.

தஞ்சாவூர் இணைக்கப் பெறுதல் (கி. பி. 1799) : **தஞ்சாவூர்** சிவாஜியின் வமிசத்தாரான **சரபோஜரால்** ஆளப்பட்டு வந்தது. அவருக்குப் பின் கி. பி. 1799ல் பட்டத்திற்காகப் போட்டி யேற்பட்டது. அப்பொழுது உள்நாட்டுச் சண்டையாலும் நேர்மையற்ற



கி. பி. 1805 ல் இந்தியாவின் நிலையும், மைசூர் மஹாராஷ்டிர யுத்தங்களுக்குச் சம்பந்தப்பட்ட ஸ்தலங்களும்.

ஆட்சியாலும் தஞ்சாவூர் பிரஜைகள் வருந்துவதாக காரணங்கூறி அந்நாட்டை வெல்லெஸ்லி பிரபு ஆங்கில சாம்ராஜ்யத்துடன் இணைத்தார்.

கர்நாடகத்தை யடைதல் : கி.பி. 1801-ல் முகமதலியின் குமாரரான **உம்தத் உல் உம்ரா** என்பவர் இறந்தார். அச்சமயம் நான்காவது மைசூர் யுத்தத்திற்கு முன்னதாகக் கர்நாடக நவாப் திப்புவுடன் ஓர் ரகசிய ஒப்பந்தம் செய்து முடித்ததற்குச் சில அத்தாட்சிகள் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. அதைக் காரணமாகக் கொண்டும் கர்நாடக ராஜ்யபாரம் செவ்வனே நடைபெறவில்லையென்று ஏற்கெனவே நவாபின்மீது குறை கூறப்பட்டதை முகாந்திரமாகக் கொண்டும் வெல்லெஸ்லி பிரபு முகமது அலியின் குமாரர்களை நாட்டின் வருமானத்தில் ஐந்திலொரு பங்கை உபகாரச் சம்பளமாக கொடுத்து விலக்கிக் கர்நாடகத்தைக் கைப்பற்றிக்கொண்டார்.

வெல்லெஸ்லி நாடு திரும்புதல் (கி. பி. 1805): ஆங்கில ராஜ்யம் **கிளைவால்** உண்டாயது; **வாரன் ஹேஸ்டிங்ஸ்** காலத்தில் வேருன்றியது. **வெல்லெஸ்லி** காலத்திலோ அது மிக்க வளர்ச்சியைப்பெற்று நிலைக்கலாயிற்று. பம்பாய் ராஜதானியையும் அவர் ஆங்கிலேயருக் குண்டாக்கித் தந்தார். அவ்வண்ண மிருந்தும் வெல்லெஸ்லியை அனுவசியப் போர்களைத் தொடுத்தார் என்றும், மேலதிகாரிகளின் கட்டளையை நிராகரித்தார் என்றும், அதிகப் பணச் செலவிற்கு வழி வைத்தாரென்றும், அவர் இனி இருந்தால் இந்தியர்களின் அறு வெறுப்பின் காரணமாக ஆங்கில அதிகாரமே அழிந்து விடுமென்றும் குறைகூறி, மேலதி

காரிகள் அவரை கி. பி. 1805ல் திடீரென இங்கிலாந் திற்குத் திரும்பிவரக் கட்டளையிட்டனர். ஆனால் வெல் லெஸ்லி கம்பெனியாருக்குச் செய்த பேருதவியைப் பின்னர் அவர்கள் அறிந்து அவரை வெகுவாகக் கௌரவித்தனர்.

வினாக்கள்

1. தாம் பதவியேற்றதும வெல்லெஸ்லி ஆட்சி சம்பந்த மாகச் செய்ய முயற்சித்த தென்ன ?

2. வெல்லெஸ்லி தம் எண்ணங்களை நிறைவேறச் செய் யக் கையாண்ட முறைகள் யாவை?

3. 'உதவிச்சேனை யேற்பாடு' என்பதை விளக்குக.

4. எந்தெந்த ராஜ்யங்கள் தாமாகவே இவ் வேற் பாட்டை யேற்றன ?

5. எத் தேசங்கள் போர்கள் புரிந்ததின் பேரில் உதவிச் சேனையேற்பாட்டிற்குக் கட்டுப்பட்டன ?

6. ஆங்கிலேயருக்கு உதவிச்சேனை யேற்பாட்டால் கிடைத்த இடங்களைக் குறிப்பிடுக.

7. நான்காவது மைசூர் யுத்தத்தின் முடிவு என்ன ?

8. கர்நாடகமும் தஞ்சாவூரும் எவ்வண்ணம் ஆங்கிலே யருக்குக் கிடைத்தன ?

9. வெல்லெஸ்லி தம் பதவியினின்றும் திடீரென நீக்கப் பட்டதேன் ?

10. மூன்றும் மஹாராஷ்டிர யுத்தத்திற்குக் காரணங் களைக் குறிக்க.

30. ஸர் ஜார்ஜ் பார்லோவும் லார்ட் மிண்டோவும்

A. ஸர் ஜார்ஜ் பார்லோ (கி. பி. 1805-1807):

மூன்ருவது மஹாராஷ்டிர யுத்தம் முடிவடைவதற்குள் வெல்லெஸ்லி இங்கிலாந்திற்குத் திரும்ப அழைக்கப்பட்டுவிட்டாரென்று படித்தோம். அவருக்குப்பின் காரன்வாலிஸ் மறுமுறை கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பெற்று இந்தியாவிற்கு வந்தார். ஆனல் அவர் இரண்டு மாதத்திற்கெல்லாம் இறந்தார். ஆகவே அவரது பதவியை **ஸர் ஜார்ஜ் பார்லோ** என்பவர் வகிக்கலானர்.

அவருடைய காலத்தில் நேரிட்ட முக்கிய நிகழ்ச்சிகள்: முதலாவதாக அவர் மஹாராஷ்டிர யுத்தத்தை முடிக்கக் கருதி **ஹோல்காருடன் ஓர் சிநேக உடன்பாடு** செய்து முடித்தார். அதன்படி இருதிறத்தாரும் கைப்பற்றிய நாடுகள் அவரவர்களுக்கே திரும்ப வழங்கப்பட்டன. அடுத்தபடியாக இராணுவத்தில் ஸர் ஜார்ஜ் பார்லோ ஒரு திட்டம் செய்தார். அதாவது எல்லா வீரர்களும் ஒரேவித மீசையை வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், திலகமணிவதை நிறுத்திவிடவேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வித நிபந்தனைகளால் **வேலூரில் சிப்பாய்களுக்கிடையே ஓர் கலகம்** தோன்றியது. ஆனல் சீக்கிரத்தில் அது **கர்னல் ஜில்லெஸ்பி** என்பவரால் அடக்கப்பட்டது. வேலூரில் அச்சமயம் வசித்து வந்த **திப்புவின் குமாரர்கள்** அச்சதியில் சம்பந்தப் பட்டவர்களெனச் சந்தேகிக்கப்பட்டு, **கல்கத்தா**விற் கனுப்பப்பட்டனர். ஒழுங்கைப் போக்கிய இக்கலகத்தின் பயனக பார்லோ கீழிறக்கப் பட்டுக் கவர்னர் பதவியை வகிக்கலானர்.

B. லார்ட் மிண்டோ (கி. பி. 1807-1813)):

ஸர் ஜார்ஜ் பார்லோவிற்குப் பின் **லார்ட் மிண்டோ** கவர்னர் பதவியை வகித்தார்.

தலையிடாக் கொள்கையும் அதன் நிராகரிப்பும்: பார்லோவைப்போல் **மிண்டோ பிரபு**வும் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றக் கருதினர். ஆனல் ஆங்கில ராஜ்யத்தில் பாதுகாப்பிற்காகச் சில முக்கிய காரியங்களைச் செய்யவேண்டியதாயிற்று. அச் சந் தர்ப்பத்தில் ஐரோப்பாவில் ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கு மிடையே ஓர் கடும்போர் நிகழ்ந்து வந்தது. அது இந்தியாவிலும் பரவலா மெனச் சந்தேகிக்கத் தகுந்தபடி **நெபோலியன்** என்ற பிரெஞ்சுச் சக்கரவர்த்தி இந்தியச் சிற்றரசர்களின் நட்பை நாடினர். அதனல் மேற்கு எல்லைப்புற நாடுகளைப் பலப்படுத்துதல் அவசியமாயிற்று. ஆகவே மிண்டோ பிரபு கி. பி. 1808-ல் **ஆப்கானிஸ்தானத்துடனும்**, 1809-ல் பாரசீகத்துடனும் சிநேக உடன்பாடுகள் செய்து முடித்தார். இந்து மஹா சமுத்திரத்தில் இருக்கும் **மோரிஷஸ்** என்ற பிரெஞ்சுத் தீவையும், பிரெஞ்சியர் களுக்குதவி புரிந்துவந்த **டச்சுக்காரர்களுக்கு**ச் சொந்த மான **ஜாவா** என்ற தீவையும் அவர் கைப்பற்றினர்.

நிற்க, உள்நாட்டில் எழுந்த குழப்பத்தையும் போக்கினர். உதாரணமாக **நாகபுரி**யின் மீது படை யெடுத்துவந்த **ஆப்கானியர்கள்** துரத்தி யடிக்கப்பட்ட னர். மத்திய இந்தியாவில் கலகங்களைக் கிளப்பிவந்த மஹாராஷ்டிரர்களும் அடக்கப்பட்டனர். **பண்டில் கண்டில்** ஜனங்களை வருத்திவந்த கொள்ளைக் கூட்டத் தினர் அடக்கப்பட்டனர். கி. பி. 1809ல் பஞ்சாபின்

பெரும்-பாகத்திற்குத் தலைவரான சீக்கிய மன்னராகிய **ரஞ்சித் ஸிங்குடனும்** மிண்டோ பிரபு ஓர் உடன்பாடு செய்து முடித்தார். அதன்படி **ஸட்லெட்ஜ்** நதியே ரஞ்சித் ஸிங்கினது கிழக்கெல்லையாகக் கொள்ளப் பட்டது. ஆகவே ஸட்லெட்ஜுக்கும் யமுனைக்கு மிடையிலுள்ள பிரதேசம் ஆங்கிலேயருக்குச் சொந்த மாகியது. ரஞ்சித்ஸிங் ஐரோப்பியருள் ஆங்கிலேய ரது நட்பையே கொள்ளவேண்டுமெனவும் ஏற் பட்டது.

கம்பெனியின் சாஸனம் புதுப்பிக்கப் பெறுதல் கி. பி. 1813-ல் கம்பெனியின் சாஸனம் ஒவ்வொரு முறையும் இருபது ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டது. கி. பி. 1813ல் அதன் காலத்தவணை தீரவே, அச் சாஸனம் புதுப்பிக்கப்பட்டது. ஆனல் அப் புதுப் பத்திரத்தில் **தனி வியாபார உரிமை** ஆங்கிலேயருக்கு இனிக் கிடை யாது எனத் திட்டம் செய்யப்பட்டது.

வினக்கள்

1. ஸர் ஜார்ஜ் பார்லோவின் காலத்தில் நிகழ்ந்த இரு முக்கிய சம்பவங்களைக் குறிக்க.

2. பிரவேசியாக் கொள்கையை ஏன் லார்ட் மின்டோ வால் அனுசரிக்க முடியவில்லை?

3. நெப்போலியனது இந்தியப் படையெடுப்பை மின் டோ பிரபு எவ்வண்ணம் சாத்தியமில்லாமலாக்கினர்?

31. ஹேஸ்டிங்ஸ் பிரபு
(கி. பி. 1813—1823)

லார்டு மிண்டோவிற்குப் பின் கவர்னர் ஜெனரலாக வந்தவர் **ஹேஸ்டிங்ஸ் பிரவு** ஆவர். அவரும் பிரவேசியாக் கொள்கையை மேற்கொள்ள விருப்பங் கொண்டார். ஆனால் இந்தியாவின் நிலைமையும், சில நெருக்கடியான சந்தர்ப்பங்களும் அவரை அக்கொள்கையை யனுஷ்டிக்க விடவில்லை.

A. ஹேஸ்டிங்ஸ் புரிந்த யுத்தங்கள்

1. நேபாள யுத்தம் (கி. பி. *1814—1816*):

காரணம்: மிண்டோ காலம் முதற்கொண்டே நேபாள தேசத்தவர் தெற்கு திசையில் தங்களது ராஜ்யத்தைப் பெருக்க முயன்றனர். ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாயிருந்த பொழுது பின்னும் அவர்கள் **தாரை** என்ற அகன்ற புற்றரையாகிய ஹிமயமலை யடிவாரத்தைப் பிடித்துக்கொண்டு கங்கை நதிவரையிலுமுள்ள நாடுகளையும் கைப்பற்றினர். தாரை மாத்திரமின்றி ஆங்கிலேயருக்குச் சொந்தமான சில இடங்களும் தாக்கப்பட்டன. ஆனதுபற்றி அவர்களை அடக்குதல் கவர்னர் ஜெனரலுக்கு அவசிய மாயிற்று.

நிகழ்ச்சிகள்: ஹேஸ்டிங்ஸ் பிரபு நான்கு தளகர்த்தர்களிடம் நான்கு சேனைகளை அனுப்பி நான்கு திக்குகளிலும் ஏக காலத்தில் தாக்கக் கட்டளையிட்டார். ஆனால் அவைகளில் மூன்று, வழியில் பல கஷ்டங்களுக்குள்ளாகித் திரும்ப நேரிட்டன. கிழக்குப்படை மட்டிலும் ஜெனரல் **ஆக்டர்லோனியின்** தலைமையின் கீழ் முதலில் **மாலூன்** என்னும் கோட்டையை முற்

றுகையிட்டு ஜெயித்தது. பின்னர் **மக்வான்புரம்** என்ற இடத்தில் நேபாளத் தளகர்த்தரான அமர்ஸிங்கை அடியுடன் முறியடித்தது.

ஸகௌலி உடன்படிக்கை (கி. பி. *1816*): இவ்விரு தோல்விகளும் உண்டாகவே நேபாள மன்னர் ஆங்கிலேயருடன் ஓர் உடன்பாட்டிற் கிசைந்தார். அதன் பிரகாரம் நேபாள மன்னர் ஆங்கிலேயருக்கு **ஸிம்லா, நைனிடால், முஸௌரி, தாரையின் ஓர் பகுதி** முதலிய இடங்களைத் தந்தார். மேலும் அவர்களது நட்பையும் ஏற்று, **காட்மாண்டி** என்ற தமது தலைநகரில் ஓர் ஆங்கில ஸ்தானீகரையும் வைத்துக்கொள்ள உடன்பட்டார்.

அதுமுதல் நேபாள தேசத்தவர்களான **கூர்க்கர்கள்** ஆங்கிலேயர்களுடைய நட்பை வளர்த்து ஆங்கிலச் சேனையில் சேர்ந்து சுத்த வீரர்களெனப் புகழ்பெறலாயினர்.

2. **பிண்டாரி யுத்தம்** (கி. பி. *1816—1817*):

பிண்டரிகள் யார்? பிண்டாரிகள் எனப் படுவோர் ஓர் கலப்புக் கூட்டத்தினர். ஹிந்துஸ்தானத்தின் பல பாகங்களிலுமிருந்த திருடர்கள், கொலை பாதகர்கள், தேசப் பிரஷ்டர்கள், வீரர்கள் முதலாயினோர் ஒன்று சேர்ந்து **கொள்ளை**யையே தங்களது முக்கிய தொழிலாகக் கொண்டனர். மஹாராஷ்டிரர்களுடையவும் முகலாயர்களுடையவும் க்ஷீணத்திற்குப் பின் அவர்களுடைய சேனைகளைச் சேர்ந்த பல யுத்த வீரர்களும் பிழைக்க வழி தெரியாமல் இக்கூட்டத்தினரின் எண்ணிக்கையைப் பெருக்கினர்.

பிண்டாரி யுத்தத்திற்கு காரணம்: பிண்டாரிகள் மத்திய இந்தியக் குடிகளுக்குப் பல தீங்குகள் இழைத்தனர். அவர்களது கிராமங்களைக் கொள்ளையிட்டும், பயிர்களைப் பாழாக்கியும், பொருள்களைச் சூரையிட்டும், ஆயிரக்கணக்கான மாந்தர்களைக் கொலை புரிந்தும் வந்தனர். இவை நீங்க, ஆங்கிலேயருக்குச் சொந்தமான **பீஹாரையும், வட சர்க்காரையும்** தாக்கினர். ஆகவே ஆங்கிலேயர் அவர்களுடைய அட்டூழியத்தை யடக்க ஆயத்தமாயினர்.

நிகழ்ச்சிகள்: நேபாள மன்னரை வென்றது போலவே, ஹேஸ்டிங்ஸ் பிரபு நாலா பக்கங்களிலும் சேனைகளையனுப்பி பிண்டாரிகள் அறியாவண்ணம் அவர்களை வளைத்துக்கொள்ளச் செய்தார். எதிர்பாராத பல ஆங்கிலேயர்கள் தாக்கப்படவே அவர்கள் தோற்றோடினர்.

முடிவு: அவர்களுடைய தலைவர்களில் ஒருவனான **கரீம்கான்** என்பவன் சரண்புகுந்தான். **அமீர்கான், டோங்கு** என்ற ஒரு சிறு ராஜ்யம் வழங்கப் பெற்றன. **சிட்டு** என்பவன் தப்பித்துக் கானகம் மேவியும் அங்கு ஓர் கடுவாய்க் கிரையானன்.

இச்சண்டையுடன் பிண்டாரிகளின் கூட்டம் ஒழிந்தது.

3. நான்காம் மஹாராஷ்டிர யுத்தம் (கி.பி. 1817—1818)

காரணம்: மூன்றாவது மஹாராஷ்டிர யுத்தத்தின் முடிவில் ஸர் ஜார்ஜ் பார்லோ மஹாராஷ்டிரத் தலைவர்களுடன் சிநேக உடன்பாடு ஒன்றை முடித்துக்கொண்டு அவர்களுக்கு ஆங்கிலேயர் அச்சண்டை



ஹேஸ்டிங் காலத்தில் பிரிட்டிஷ் இந்தியா

யில் கைப்பற்றிய இடங்களைத் திரும்பத் தந்துவிட்டார் எனப் படித்தோம். அதைக்கண்ட மஹாராஷ்டிரர்கள் மீண்டும் தங்களுடைய அதிகாரத்தை வளர்த்துக் கொள்ளலாமென எண்ணி ஆங்கிலேயரை யெதிர்க்கத் தொடங்கினர்.

நிகழ்ச்சிகள்: பீஷ்வாவின் தோல்வி: ஹேஸ்டிங்ஸ் பிரபு பிண்டாரிகளுடனும், நேபாள நாட்டினருடனும் யுத்தம் புரிந்து கொண்டிருக்குங்கால் அது தான் ஆங்கிலேயரைத் தாக்கத் தக்க சமயமென பூனுவில் தங்கி வந்த ஆங்கில ஸ்தானீகரை 2-வது பாஜீராவ் திடீரென எதிர்த்தார். ஆனால் அந்த ஸ்தானீகருக்குத் துணையாயிருந்த படை பீஷ்வாவைக் **கர்க்கி** என்னுமிடத்தில் தோற்கடித்துப் பூனுவையும் பிடித்துக் கொண்டது. பீஷ்வா மீண்டும் செய்த முயற்சிகள் வீணாயின. ஆகவே அவர் ஆங்கிலேயரிடம் சரண் புகுந்து, அவர்களுக்குத் தமது நாடனைத்தும் தந்து, வருஷத்திற்கு **எட்டு லக்ஷம் ரூபாய்** உபகாரச் சம்பளம் ஏற்றுக் கான்பூருக்கருகிலுள்ள **பிதூர்** என்னுமிடத்தில், ஆங்கிலேயரின் ஆதீனத்தில் இருந்து பல ஆண்டுகளுக்குப் பின் காலமானார். பீஷ்வாவின் நாடுகள் **பம்பாய் ராஜதானி** என்னும் மாகாணத்தை யுண்டாக்கின.

பான்ஸ்லேயின் அபஜெயம்: இக் குழப்பத்திற்கிடையே **பான்ஸ்லே**யும் தமது தலைநகராகிய **நாகபுரி**யில் பதவி வகித்து வந்த ஆங்கிலஸ்தானீகரைத் தாக்கினார். **சிடிபால்டி** என்ற இடத்தில் ஸ்தானீகரது சேனைக்கும் அவரது படைக்கும் சண்டை நடந்தது. அதில் அவர் தோல்வியுற்றுச் சிறை பிடிக்கப்பட்டார். ஆனால் சிலநாட்களில் அவர் அங்கிருந்து தப்பியோடித் தமது

உத்தியோகஸ்தர்களில் ஒருவரால் கொல்லப்பட்டார். பின்பு வேருெருவர் நாகபுரிக்கு மன்னராக நியமிக்கப் பட்டார். பான்ஸலேயின் ராஜ்யத்தின் பெரும் பாகம் ஆங்கிலேயர்களின் சாம்ராஜ்யத்துடன் இணைக் கப் பெற்றது.

ஹோல்காரும் வெல்லப்படுதல்: ஜஸ்வந்த ராவ் ஹோல்கார் கி. பி. 1811-ல் காலமானுர். பின்பு அவரது ஸ்வீகார புத்திரர் இந்தூருக்கதிபதி யானுர். அவர் ஆங்கிலேயரிடம் துவேஷம் கொண்டவர். ஆகவே அவர்களை அவர் **மெஹிட்பூர்** என்ற இடத்தில் எதிர்த்தார். ஆனுல் தோல்வியுற்ருர். அதன் பயனுக தம் நாட்டின் பெரும் பாகத்தையும் அரச பதவியை யும் அவர் இழக்கவேண்டியதாயிற்று. வேருெருவர் இந்தூருக்கு மன்னராக ஏற்படுத்தப்பட்டார்.

ஸதாரா ராஜ்யம்: இவ்வாறு எல்லா மஹாராஷ் டிர வீரர்களும் வெல்லப்பட்டனர் ஆயினும், மஹா ராஷ்டிர மன்னர்களின் சந்ததி அற்றுப் போகாம லிருக்கவும், மஹாராஷ்டிரர்களின் கோரிக்கைக் கிணங்கியும் ஆங்கிலேயர்கள் **ஸதாரா** என்பதை ஒரு சிற்றரசு நாடாக்கி, அதை ஆளுவதற்குச் சிவாஜியின் வம்சத்தினரில் ஒருவரை அரசராக்கினர்.

குறிப்பு: இந்த யுத்தத்துடன் மஹாராஷ்டிரர்களுடைய ஆதிக்கம் சிதைவுண்டது. அவர்களது எதிர்ப்பும் அறவே ஒழிந்தது.

ஹேஸ்டிங்ஸ் செய்த சீர்திருத்தங்கள்: ஹேஸ்டிங்ஸ் தமது காலத்தில் சில நல்ல சீர்திருத்தங்களையும் செய்

தார். கலெக்டர்களுக்குக் **கிரிமினல் விசாரணை உரிமை** வழங்கப்பட்டது. கிராமங்கள் பஞ்சாயத்துச் சபைகள் மூலம் செவ்வனே பரிபாலிக்கப்பட்டு வந்தன. கல்கத்தாவில் ஒரு கல்லூரியும் ஆங்காங்கு கலாசாலைகளும் ஏற்படுத்தப்பட்டன. போக்குவரவு சௌகரியத்தியற்காகப் பாலங்கள் கட்டப்பட்டன. ரஸ்தாக்களும் அமைக்கப்பட்டன. சென்னையில் குடிகளிடமிருந்து அரசாங்கத்தாரே நிலவரி வசூலிக்கும் முறையாகிய **ரயத்வாரி முறை** உண்டாக்கப்பட்டது. கி.பி. 1818-ல் நம் நாட்டு பாஷையில் முதல் முதலாகச் சமாசாரப் பத்திரிகைகள் வெளியாக அனுமதிக்கப் பெற்றன.

ஹேஸ்டிங்ஸின் பெருமை: ஆங்கிலக் கம்பெனியாருக்கு ஹேஸ்டிங்ஸ் செய்த உபகாரம் வெகு அதிகம். வெல்லெஸ்லி பிரபு **சென்னை மாகாணம்** முழுவதையும் ஆங்கிலேயருக்குக் கிடைக்கச் செய்ததுபோல் ஹேஸ்டிங்ஸ் பிரபு **பம்பாய் மாகாணம்** முழுதையும் ஆங்கிலேயருக்குப் பெருக்கித் தந்தார்.

வினாக்கள்

1. நேபாள யுத்தத்தின் காரணங்களைப் பற்றியாவது பிண்டாரிகளை ஒழித்த விதத்தைப் பற்றியாவதுச் சுருக்கி வரைக.

2. நான்காம் மஹாராஷ்டிர யுத்தத்திலும் நேபாள யுத்தத்திலும் ஆங்கிலேயருக்குக் கிடைத்த இடங்கள் யாவை?

3. ஹேஸ்டிங்ஸ் பிரபு இயற்றிய சீர்திருத்தங்களைக் குறித்து ஒரு குறிப்பு எழுதுக.

Printed at the T. V. C. Press, Madras—11-11-'42.

2257